மோகன முரளி



ஹா. கி. வாலம்

மோகன முரளி

ஸ்ரீமதி ஹா. கி. வாலம், பீ. ஏ.,
பிரபாகர், விசாரத்.

கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார்
அவர்களின் சிறப்புரையும்

முன்னாள் கலெக்டர்
ஸ்ரீ. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், M.A., I. A. S.,
அவர்களின் முன்னுரையும் கொண்டது.

விலை. ரூ. 3 / 25.

கிடைக்குமிடம் :-

ஸ்ரீமதி ஹா. கி. வாலம்

" ஜுபிலிபாக், "

62, ரெஸ்டு காம்ப் ரோடு,

தேவலாலி.

சமர்ப்பணம்

ஆங்கரைக்கருகினிலே, ஆனந்தச்சோலையிலே,
பூங்குயில்கள்பண்பாடும் புதுமலர்க்காவினிலே,
மாம்பழச்சோலையிலே மாதுமையாள் தன்னுடனே
ஆம்ரவனக்கோயிலிலே அமர்ந்திருக்கும்
மாந்துறையான்
எங்கள் குலதெய்வம், இமையோர் பெருந்தெய்வம்
மங்களத்திருவடிக்கே மலரிதனைச்சூட்டுகிறேன்.

சிறப்புரை

(கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார்)

என். ஹாலாசியத்தின் தியாகமும் அருவிப் பேச்சும் தமிழர் அறிந்தவை. ஆலாசியத்தைப்பற்றி நாம் ஆலசியமாயிருக்க முடியாது. அவருக்குத் தகுந்த நினைவுச் சின்னம் வாலமே. அதே அருவிப் பேச்சு, அதேபுலமை நடை வாலத்திடம் மிளிர்கிறது. தந்தைக்கேற்ற தகைசால் வாலம் பூனுவில் அரிய கலைத்தொண்டு புரிந்ததை நான் நேரே கண்டு மகிழ்ந்தேன். பூனு, பம்பாய் மேடைகளில் நான் பேசியபோது இந்த அம்மையாரும் சொற்பொழி வாற்றக் கேட்டேன். ஆங்கிலம், இந்தி, தமிழ்-ஆகிய மும்மொழியிலும் அம்மையார் ஆவேசமாகப் பேசு வார்கள்.

அம்மையார் தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல நூல்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஹாகிவாலத்தின் (ஹாலாஸ்ய கிருஷ்ணஸ்வாமி வாலாம்பாள்) இலக்கியக்குழந்தை மோகன முரளி கானம் செய்வது கேட்டு மிக்க மகிழ்ச்சி யடைந் தேன். அந்த முரளி கானத்தின் அற்புதக்கூத்தும், குற்றாலம் நீர்வீழ்ச்சியும், காவேரியின் ஓட்டமும், நீலக்கடலின் தாண்டவமும்—சேர்ந்தால் கலை யின்பத்திற்கு கேட்க வேண்டுமா? பாரதக் கலைப் பண்பாட்டின் உயிர்நிலையான - திருத்தலங்களும், இயற்கைக்காட்சிகளும், அருட்பெரியார் உள்ளமும், புண்ணிய நூல்களும் மோகன முரளியின் கவிக்கன வில் படலம் படலமாகக் காட்சியளிக்கின்றன.

இந்நூல் ஹாகி வாலத்தின்-அன்புக்குழந்தை. தமிழர் இக்குழந்தையிடம் அன்பு பாராட்டுவார் களாக.

முகாம், சாந்தி நிகேதனம்	சுத்தானந்த பாரதி
	யோகசமாஜம்
27—2—1960.	அடையாறு, சென்னை-20.

முன்னுரை

(தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்,

முன்னாள் கலெக்டர்)

இது பாரதி யுகம். பழந்தமிழ்க் காவியங்கள், சிற்றிலக்கியங்களை எல்லாம் படித்தபோது இந்தக் கவிஞர்கள் எழுதிய பாடல்களைப்போன்ற பாடல் களை இந்த யுகத்தில் எழுதக்கூடுமா என்று ஏங்கி நின்றவர்கள் அநேகர். அவர்களுக்குத் தெம்பு ஊட்டியவன் பாரதி. புதிய முறையில் புதிய உருவில் உள்ளத்தைத் தொடும், உணர்ச்சியை உருவாக்கும் பாடல்கள் எழுதி ஒரு உற்சாகத்தைக் கொடுத்தான் அவன். அவன்றன் அடிச்சுவட்டிலே நடந்து பண் ஓசை மிக்கொலிக்கும் பாடல்கள் பலபாடி மேலும் ஊக்கம் அளித்தவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. இவர்கள் இருவரும் தந்த தெம்பு தமிழ் நாட்டில் எண்ணிறந்த இளங்கவிஞர்களை உருவாக் கியிருக்கிறது. இந்த இளங்கவிஞர்களில் ஒருவர் தான், இந்த மோகன முரளி என்ற கவிதைத் தொகு தியை வெளியிடும் சகோதரி ஹா. கி. வாலம் அவர் கள். அவர்கள் முன்னர் வெளியிட்ட மோகன முறுவல் என்னும் கவிதைத் தொகுதி முழுக்க முழுக்க காந்தீயத்தை விளக்க எழுந்தது. இந்தத் தொகுதி யில் பலதிறப்பட்ட சுவை. தெய்வ நம்பிக்கையில் ஆரம்பித்துப் பலதலங்கள் பல மூர்த்திகள். முதலிய வற்றைக்கண்டு, தான் பெற்ற இன்பத்தை மற்றவர்

களுடன் பகிர்ந்து கடைசியில் ஜகன் மோகன கோபாலனுடைய முரளிகான மோகனத்தில் நம்மை லயிக்கும்படி செய்திருக்கிறார். கவிதை என்பது இன்று பலருக்குக் கைவராத சரக்குத்தான். ஆனால் சகோதரியின் பாடல்களில் பலவரிகள் நல்ல கவிதை ரஸனையோடு வந்து நமது காதில் ஒலிக்கின்றன.

“ முறுவல் காட்டி இருளை ஓட்டி
முக்திச் செல்வம் ஈந்ததார் ? ”

என்றும்

“ துதிக்க வாயும் நினைக்க நெஞ்சும்
சொல்லும் தந்த செல்வன் யார் ? ”

என்றும் கேட்கத் துவங்கிய போதே, வெற்றிக் குரலின் முழக்கம் கேட்கிறது.

“ கூவு கூவு மனக்குயிலே !
குறைபல நீங்கிடக் கூவு
தாவு தாவு சுதந்திரமாய்
நீலகண்டன் மணித்தாளில்

என்று குயிலைக்கூவியழைப்பது எல்லோர் காதிலும் இனிய ரீங்காரத்தையே அல்லவா ஊட்டுகிறது. ஆலமுண்ட நீலகண்டனை , அகத்துள் நர்த்தன மாடவைப்பது காலங்கடந்த பெருமானை நினைவு கூறுதற்கு நல்ல வழிதானே.

இவை தவிர, இந்தச் சகோதரி நம் பாரத நாட்டில் பலதலங்களையும், பலகலைக்கூடங்களையும்கண்டு களித்திருக்கிறார். அப்படிக் களித்தவர் ஆடுகாபட்டி அம்மையப்ப கவிராயரைப்போல தலபுராணங்கள்

எழுத முனையவில்லை, தான் பெற்ற அனுபவத்தைச் சின்னஞ்சிறிய பாடல்களில் சொல்லியிருக்கிறார்.

"மலையினைக் குடைந்து தோண்டி
மதியினால் கலவை செய்து
விலைமதிப்பற்றதேனும்
கரும்புடன் பாலும் சேர்த்து
அலகிலா அமுதக்கூட்டால்
அமைத்ததோர் கலை என்பேனோ ?"

என்று "எல்லோரா எழிலை" அவர் கூறுகிறபோது சென்றுகண்டவர்கள் மீண்டும் காணும் இன்பம் பெறுவர். இதுவரை காண வாய்ப்புப் பெறாதவர்கள் காணத்துடிப்பர்.

இந்த அம்மையார் கவிஞர் மாத்திரம் அல்ல சிறந்த சகல கலா வல்லி. ஆங்கிலத்தில், தமிழில், இந்தியில் எல்லாம் நல்ல பாண்டித்யம் பெற்றவர். முத்தமிழ் வித்தகர் ஒரு சிலர் தமிழ் நாட்டில் இருக்க லாம். ஆனால் மும்மொழி வித்தகியாக இவர் இன்று தமிழர்களுக்குப் பெருமை தேடித்தந்துகொண்டிருக் கிறார். செல்லுமிடங்களில் எல்லாம், சொற்பொழிவு கள் நிகழ்த்துகிறார். தமிழர் கலை வளர்க்கும் பணி யில் ஈடுபடுகிறார். வெளிவந்தவை போக, வெளிவர வேண்டியவை பல இருக்கின்றன இவர் எழுத்து களில் என்று அறிகிறோம். இவரது முயற்சி சிறக்க என்று வாழ்த்துவதைத் தவிர வேறு செய்ய அறியேன்.

"சித்ரகூடம்"
திருநெல்வேலி-6

தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான்
10—3—60.

பொருளடக்கம்.

வெற்றிக்குரல்

(11—8—53)

வெற்றி, வெற்றி, வெற்றி என்று
வீரக்குரல் தந்ததார்?
முற்றிடா இளம்பிறையை
முடிதனில் புனைந்தவன். 1

கலையின் சிகரக்கோயில் காட்டி
கருணைமழை பொழிந்ததார்?
விலையிலாத வேதஜோதி
வேழமுக விநாயகன். 2

அஞ்சல், அஞ்சல், அஞ்சல் என்று
அபய தான மீந்ததார்?
கஞ்சம் பழித்த கனை கழலோன்
கணபதி என் கடவுள்தான். 3

முறுவல் காட்டி இருளை ஓட்டி
முக்திச் செல்வமீந்ததார்?
அறிவின்தலைவன், அருளின் முதல்வன்
ஆதிப்ரும்ம மூர்த்திதான். 4

தூங்கும் போது துயரொழித்து
தூயபாதம் தந்ததார்?
யாங்கணும் பரந்துநிற்கும்
யானை முக விநாயகன். 5

சஞ்சலம் அடைந்தபோது
சக்தி தந்த செல்வன் யார்?
மைஞ்சனுகி உலகம் புரக்கும்
மாதுமையாள் பாலகன். 6

வேதனை தொடர்ந்தபோது
வேரறுத்த ஜோதியார்?
நாதபிந்து வாகி நின்ற
ஞானமணி விநாயகன். 7

உலக பந்தம் நீக்கி உண்மை
ஒளியளித்த ஒருவன் யார்?
உலகைக்கடந்து ஊடுருவும்
ஒற்றைக்கொம்புக் கொற்றவன். 8

துதிக்க வாயும், நினைக்க நெஞ்சும்
சொல்லும் தந்த செல்வன் யார்?
துதிக்கையரசு, துய்ய ஞானம்
தோய்ந்து ஒளிரும் தேவன்தான். 9

நான் என்னும் மமதை நீக்கித்
தானேயாகி நின்றதார்?
வான், தீ, நீர், காற்று என்னும்
வண்ணமினிய அண்ணல்தான். 10

அன்றும் இன்றும் என்றும் உன்னை
ஆதரிக்கும் அன்பன் யார்?
வெற்றி தந்து வீரம் விளக்கும்
வேதம் புகழ் விநாயகன். 11

வேண்டுதல்

(20—2—49)

நச்சரவணிந்த நம்பா, நாதனே ஞானம் நல்காய்,
பச்சை மாமலைபோல் வண்ணா, பரமனே
பக்திநல்காய்,
இச்சையாலுலகளிக்கும் பிரமனே பிரணவம் நல்காய்,
கச்சரையார்த்த கந்தா, கடம்பனே கருணை நல்காய், 1

விச்சை, விவேகம், பண்பு விரைவினில் நல்காய்
வாணி,
அச்சமில்லாதநெஞ்சம், அன்பொடு தா, பவானி,
துச்சமாமுலக போகத்தொடக்கறுத்தாள் ரமா, நீ,
வச்சிர யாக்கை, வண்மை வள்ளியே நல்காய்,
ராணீ. 2

மூவகைத்தமிழுந்தாராய், முக்கண மூல மூர்த்தி,
பாவகைப்பண்பு நல்காய், பிரமனே, சொல்லின்
வேந்தே,
நால்வகை ஞானம், மோனம் நாரண, நாதா, தாராய்.
ஐவகை மொழி இயல்பும், ஐங்கரா, அறிவுந்தாராய். 3

பலமொழிச்செல்வம் நல்காய், பாலகீ, வீணபாணீ,
உலகியல், ஊக்கம், வெற்றி, உண்மையுந்தா,
சர்வாணீ,
அலமருங்கவலை நீக்கி அமரத்துவம் தா,
இந்திராணீ,
கலை, மதி, சித்தி, புத்தி, கணபதி மனையாள், தாராய். 4

நன்மனம், நட்பும், மெய்யும், நலங்கிளரறிவுந்துய்ய
சொன்மணி மாலை கோக்குந்திறமையுந்திடமுந் தேசும்,
மென்மையும் பணிவும் மேலோர் மலரடியன்பும், ஆண்மை
என்னுமிச்செல்வம் யாவும் எமக்கருள் எல்லாமானாய். 5

வா, வா, வா.

(6—1—55)

எல்லையற்ற கருணையாய் வா வா வா
எழில்மிகுந்த வடிவினாய் வா வா வா
முல்லையொத்த பல்லினாய் வா வா வா
மோகனப் புன்னகையினாய் வா வா வா
கல்லையொத்த தோளினாய் வா வா வா
காதல் பொங்கு கண்ணினாய் வா வா வா
வில்லெடுத்த தோளினாய் வா வா வா
வெற்றிவாகை மார்பினாய் வா வா வா 1

அருள்சுரந்த நெஞ்சினாய் வா வா வா
ஆவல்கொஞ்சு விழியினாய் வா வா வா
இருள்சுமந்த குஞ்சியாய் வா வா வா
ஏறுவென்ற வீறினாய் வா வா வா
பொருள்பொதிந்த சொல்லினாய் வா வா வா
புதுமலர்ப்புன்முறுவலாய் வா வா வா
திருஇலங்கு உருவினாய் வா வா வா
தில்லையாடு செல்வமே வா வா வா 2

புலிவரிப் பொன்னுடையினாய் வா வா வா
பொங்கு கங்கைமுடியினாய் வா வா வா
வலிமைகொண்ட தோளினாய் வா வா வா
வரையடர்த்த விரலினாய் வா வா வா

ஒலிசெய்உண்மைச்சிரிப்பினுய் வா வா வா
உலகம்போற்று காட்சியாய் வா வா வா
தலைமையான தன்மையாய் வா வா வா
தயைவளர்ந்த செயலினுய் வா வா வா 3

இன்ப நல்கு இனியனே வா வா வா
இதயம்தூண்டு செல்வனே வா வா வா
அன்புசொரி நல்லன்பனே வா வா வா
ஆருயிர்க்கோரமுதனே வா வா வா
துன்பநீக்கு நண்பனே வா வா வா
தூய்மை போற்று தூயனே வா வா வா
என்பதியாம் இறைவனே வா வா வா
ஏமச்சபையின் தலைவனே வா வா வா 4

பொன்னம்பலப்புலவனே வா வா வா
புன்னகைப்பூஞ்செல்வனே வா வா வா
நன்னடம்புரி நாதனே வா வா வா
நடனமாடு பாதனே வா வா வா
கன்னல்மதுர கீதனே வா வா வா
கருணை பாரிஜாதனே வா வா வா
மின்னு தெய்வ சோதியே வா வா வா
மேலவர்க்கும் மேலவா வா வா வா
துன்னு தெய்வ சோதியே வா வா வா
துயர் ஒழித்த ஆதியே வா வா வா 5

இலக்கியச் சுவையிலே இறைவனின் நிறைவிலே

(20—10—51)

இலக்கியச் சுவையிலே, இன்பமாய்,
இனிமையாய். இலங்கக்கண்டேன்,
இலக்கணக்கடலிலே, எழுத்து, சொல்
வடிவமாய் இலகக்கண்டேன் ;
மயக்கறு நிலையிலே, மோனமாய்,
ஞானமாய், மிளிரக்கண்டேன்;
நிலத்திடைத்சோதியாய், நித்தமாய்,
சுத்தமாய், நிலவக்கண்டேன் ; 1

சந்திரன் ஒளியிலே, தண்மையாய்,
வெண்மையாய்த் தவழக்கண்டேன்,
முந்து வாரிதியிலே, முத்துமாய்ப்
பவளமாய் மிளிரக்கண்டேன்,
சந்தமென்னடையிலே, ஓசையாய்ப்
பொருளுமாய், ஒலிக்கக்கண்டேன்,
இந்திரன் வில்லிலே, வண்ணமாய்,
வனப்புமாய், வளரக்கண்டேன். 2

ஞாயிறின் கதிரிலே, வெம்மையாய்
ஒளியுமாய், விளங்கக்கண்டேன்;
மாயிருள் இரவிலே, இருளுமாய்,
மருளுமாய், இருக்கக்கண்டேன் ;
கோயிலின் சிலையிலே, கலையுமாய்க்
கடவுளாய்த் திகழக்கண்டேன்,
தாயின் இன் அன்பிலே, தஞ்சமாய்ச்
சரணமாய்த் தாங்கக்கண்டேன்; 3

தந்தையின் அன்பினில், தருமமாய்த்
    தயையுமாய்த் தளிர்க்கக்கண்டேன் ;
கந்தமாமலரிலே, வாசமாய்,
    வண்ணமாய் வளரக்கண்டேன் ;
சிந்தையின் அடியிலே சிவனுமாய்ச்
    சிவனாய்ச் சிறக்கக்கண்டேன்,
சொந்த சோதரர் இடை அன்புமாய்,
    இன்பமாய் சொலிக்கக்கண்டேன்; 4

கன்னியின் வடிவிலே வாய்மையாய்த்
    தூய்மையாய் வளரக்கண்டேன்;
மின் ஒளித்துடிப்பிலே, வேகமாய்
    விசையுமாய், விளங்கக்கண்டேன்,
அன்னமுண்போதிலே, உயிருமாய்,
    உணர்வுமாய் உலவக்கண்டேன்,
பொன்ஒளிர் நதியிலே, புனலுமாய்ப்
    புதுமையாய்ப் பொங்கக்கண்டேன். 5

கானமென்னிசையிலே, நாதமாய்ப்
    பிரும்மமாய் நிரம்பக்கண்டேன்,
மானமார்வாழ்விலே, மதிப்புமாய்,
    மாட்சியாய், மிளிரக்கண்டேன்,
தேன்மொழிமதலையில், தெய்வமாய்,
    திவ்யமாய்த் திகழக்கண்டேன்,
கான் எழில் வளத்திலே கவினுமாய்ப்
    பயிருமாய் கிடக்கக்கண்டேன். 6

சுடர்விடுங்கோளிலே, சோதியாய்
ஆதியாய்த் தோன்றக்கண்டேன்,
படமெடுபாம்பிலே, பகையுமாய்ப்
புகையுமாய்ச் சீறக்கண்டேன்;
கடலிலே, மலையிலே, கானிலே,
நதியிலே நிறையக்கண்டேன்,
அடல் எரி மலையிலே, அவனியின்
அசைவிலே ஆடக்கண்டேன். 7

இயற்கையின் பொலிவிலே ஏகமாய்,
அநேகமாய், இலங்கக்கண்டேன்,
செயற்கையின் திறத்திலே, தேர்ச்சியாய்ப்
பயிற்சியாய்த் திகழக்கண்டேன்,
மயிற்குலத்தோகையில், குயிற்குலக்
குரலிலே குலவக்கண்டேன்,
செயற்கரும் பைங்கிளி மழலையில்,
குதலையில், குலவக்கண்டேன்; 8

அருவியின் நடையிலே, அழகுமாய்
இசையுமாய் அமரக்கண்டேன்,
குருவியின் பாட்டிலே, குழலிலே,
யாழிலே மிழற்றக்கண்டேன்,
சுருதியின் முடிவிலே, சத்யமாய்த்
தத்வமாய் திகழக்கண்டேன்,
கருதுவோர் நினைவிலே ஒளியுமாய்,
ஒலியுமாய் நிரம்பக்கண்டேன். 9

அருவுமாய், உருவுமாய், ஆணுமாய்ப்
பெண்ணுமாய், அலியாய்ப்பேடாய்,
கருவுமாய், மதலையாய், கருத்துமாய்,
உணர்வுமாய், கலையாய்ப்பாட்டாய்,
திருவுமாய், வறுமையாய்த் திறனுமாய்
அறனுமாய்த் தீதாய், நன்றாய்;
ஒருவராய்ப் பலருமாய் ஒருபொருள்
உலகிலே உலவக்கண்டேன். 10

வடமொழிச்சுவையுமாய், வாக்கிலே
வன்மையாய் வளரக்கண்டேன்,
திடமொழித்தமிழுமாய்த் தீஞ்சுவைக்
கவிதையாய்த் திகழக்கண்டேன்
மடமைஇல் இந்தியாய், மக்களின்
பேச்சுமாய் மிளிரக்கண்டேன்,
கடல்எலாம் கடந்ததோர் ஆங்கிலக்
கடலுமாய்ப் பரவக்கண்டேன். 11

எண்ணுமாய், எழுத்துமாய், ஏகமாய்,
அநேகமாய் இருக்கக்கண்டேன்,
பண்ணுமாய்ச் சுதியுமாய்ப் பாட்டுமாய்
இசையுமாய்ப் பழகக்கண்டேன்.
கண்ணின் நுண்மணியுமாய்க் கண்முனே
காட்சியாய்க் கலக்கக்கண்டேன்
கண்ணன், முக்கண்ணனாய்க்கடவுளை
உலகினில் கண்டவாறே. 12

நான்மொழிப்பான்மையாய், நாவிலே
தன்மையாய், நாதத்தொன்ருய்த்
தேன்மொழிக்கவிதையாய், சிந்தனை
சிவனுமாய்ச் சக்தியாகி,
"யான், எனதெ"ன்பதை இனிமையாய்
மாற்றிடும் கல்வியாகி
வான் அமுதாய் வளர் ஞானமா
சோதியை நண்ணினேனே. 13

கூவு மனக்குயிலே

(10—1—50)

ஆதியும், சோதியுமாகி,
அம்மை, என்னப்பனுமாகி,
பாதியும் பெண்ணுருவான
பரமனைக்கூவு என்மனமே! 1

ஒளிதிகழ் ஒலிவடிவாகி,
உண்மையும் இன்மையுமாகி,
களிநடம் காட்டினில் புரியும்
கடவுளைக்கூவு என்மனமே ! 2

விண்டலம், மண்தலமாகி,
வேதமும், போதமுமாகி,
அண்டரும், அசுரருமான,
அன்பனைக்கூவு என் நெஞ்சே ! 3

பழமையும், புதுமையுமாகிப்,
பார்வதி கணவனுமாகிக்
கிழவனும் குமரனுமான
அழகனைக்கூவு என் நெஞ்சே! 4

வைணவம் சைவமுமாகி,
அருவுரு இருவிதமாகி,
ஜைனமும், பௌத்தமுமான,
சத்யனைக்கூவு என்மனமே! 5

நடமிடுமதிபதியாகி
நல்லன பொல்லன ஆகி
மடவரல் மனிதனுமான
மன்னனைக்கூவு என் நெஞ்சே! 6

கண்ணான் முக்கண்ணனுமாகி
கருதுவோர் கடவுளுமாகி
அண்ணலும் அன்பனுமான
அமரனைக்கூவு என்மனமே! 7

நாதமும் சப்தமுமாகி
நல்லிபி வரிவடிவாகிக்
கீதமும் பாவமுமான
சோதியைக்கூவு என் நெஞ்சே! 8

ராகமும் தாளமுமாகி,
லயம், பதம், ஸ்ருதி, ஸ்வரமாகி
ஆகமம் வேதமுமான
ஆதியைக்கூவு என் நெஞ்சே! 9

இலக்கண இலக்கியமாகி,
இயல், இசை, பரதமும் ஆகி
கலைகளில் திருநடம் புரியும்
கற்பனை வித்தினைக்கூவு! 10

சொற்பதம் யாவையும் கடந்து,
சொல், மனம், உடல் தனில் நிறைந்து,
தற்பரப்பரம் பொருளான
சிற்பரன் பொற்பதம் கூவு! 11

இன்பமும் துன்பமுமாகி,
இரவொடு பகல் இரண்டாகி,
சன்மமும் சாவுந்தவிர்த்த
சங்கரன் பூங்கழல் கூவு! 12

கைலையும் சுடலையும் உகப்பான்,
காப்பதுமழிப்பதும் செய்வான்,
மெய்யரைக்கைவிட மாட்டான்.
பாரத சோதியைக்கூவு! 13

ஆட்டத்தில் ஆருயிர் அளிப்பான்,
அசைவினில் இசையமுதளிப்பான்;
நாட்டத்தில் நெருப்பையுமமைப்பான்;
நாயகன் பதமலர் கூவு! 14

அந்தமும் சொந்தமுமாவான்,
ஆதியும் சோதியுமாவான்,
பந்தமும் மோட்சமும் ஆவான்,
பாலகி தாதையைக்கூவு! 15

ஒருபதம் உயரத்தில் தூக்கி,
உலகினை இன்பத்தில் மூழ்க்கி,
மறுபதம் மண்ணினில் தாக்கி
அபிநயம் புரிபவன் கூவு! 16

மனம் அதிமயக்கத்தில் வீழ்ந்தால்,
மாயையில் சிறு உடல் சோர்ந்தால்
தனதிரு இணையடிகாட்டித்
தனயையைத் தாங்குவன் கூவு! 17

சோகத்தில் இதயமும் ஆழ்ந்தால்,
சுகம் பெற ஐம்பொறி மாய்ந்தால்,
அகமதில் அகந்தை நிறைந்தால்,
அக்கணம் விலக்குவன் கூவு! 18

அம்மையும் அப்பனுமவனே,
அன்பனும் நண்பனுமவனே,
இம்மையும் மறுமையும் அவனே
இதய ஒளிச்சுடரைக்கூவு! 19

சோதர, சோதரி அவனே,
சொர்க்கமும் போகமும் அவனே,
நாதமும் சோதியும் கலந்த
இதய ஒலிக்கடல் கூவு! 20

கூவு, கூவு, மனக்குயிலே!
குறைபல நீங்கிடக்கூவு.
தாவு, தாவு, சுதந்திரமாய்
நீலகண்டன் மணித்தாளில்! 21

யார் கொலோ?

(14—8—53)

மலையிலே, கடலிலே, மலரிலே, மலருவான்;
அலையிலே துயிலுவான், அலரிலே பயிலுவான்;
கலையிலே வளருவான் கவியிலே மிளிருவான்;
விலையிலா நிலையிலே ஒருவனாய் ஒளிருவான். 1

பட்டுடை, புலியதள், பருத்திநூல், அணிதிகழ்
கட்டுகம்பளி, கரித்தோல், உடை புனைபரன்
விட்டுணு, பரசிவன், வேதமா மறையவன்,
எட்டுத்திக்காண்டிடும் இறையவன் எனும் இறை. 2

ஒருவனோ? இருவனோ? மூவனோ? தேவனோ
மறையவன், மால், சிவன், கணபதி, வேலனோ?
குருமணி, ஹரிஹரன், மதனன், மா காலனோ?
திருவுருக்கரந்தொளிர் ஒருவன் நீ யாவனோ? 3

காலமோ, காயமோ? காரணபூதமோ?
ஞாலமோ, கோள்கள், மா விண்சுடர் மீன்களோ?
நீலமார் வானமோ? நேரமோ, சூன்யமோ,
கோலமார் தூரமோ? கொண்டலோ?
சோதியோ? 4

மின்னலோ? தண்மதி, பரிதி, வான் வட்டமோ?
பின்னல் போல் சுழல் மகா மின்னொளிக்கூட்டமோ?
விண்எரி கற்களோ? வால்வளர் கோள்களோ?
வன்னியோ? இன்னவையற்ற மா இருள்
கொலோ? 5

சுவர்க்கமோ ? நரகமோ ? கைலே ? வைகுந்தமோ ?
தர்க்கமார் சாதியோ ? சமயமோ ? மதங்களோ ?
அற்பமோ ? அணுகொலோ ? அண்ட
பிண்டாதியோ ?
கற்பனைச் செல்வமோ ? கருத்தினில் வாதமோ ? 6

ஒருமையோ? பன்மையோ? ஒன்றுமில் தன்மையோ?
இருவினை மூலமோ ? இயக்கிடும் ஜாலமோ ?
கருமையோ ? செம்மையோ ? வெண்மையோ ?
நீலமோ ?
குறுகலோ ? நீளமோ ? உயரமோ ? அகலமோ ? 7

ஆண்கொலோ ? பெண்கொலோ, அலி கொலோ ?
பேடுகொல் ?
காண் ஒணுத்தன்மையோப்பேண் ஒணுப்பெற்றியோ?
சேண்மையோ ? அண்மையோ ? மெய்மையோ ?
பொய்மையோ ?
நாணமோ ? துணிச்சலோ ? நாள்கொலோ ?
கோள்கொலோ ? 8

முன்கொலோ ? பின்கொலோ ? முக்தியோ ?
பந்தமோ ?
நன்மையோ, தீமையோ ? நடுநிலத்தன்மையோ ?
மென்மையோ, வன்மையோ ? வெம்மையோ,
தண்மையோ ?
சன்மமோ மரணமோ? வாழ்க்கையோ விரக்தியோ? 9

ஆழமோ ? அதிகமோ ? ஆழியோ ? நீர்கொலோ ?
தாழ்மையோ, உயர்ச்சியோ ? தண்டனை, குற்றமோ ?
வீழ்ச்சியோ ? வெற்றியோ? வீரமோ ? வெருவலோ?
மாட்சியோ? புரட்சியோ? மயக்கமோ? தயக்கமோ?10

அம்மையோ, அப்பனே ? ஆட்சியோ ? அடிமையோ ?
செம்மையோ, கொடுமையோ ? கயமையோ,
சீர்மையோ ?
நேர்மையோ, நீதியோ ? வஞ்சமோ ? வன்மையோ ?
யார்கொலோ ? யார்கொலோ ? இயற்கையோ ?
செயற்கையோ ? 11

இரத்தமோ, பித்தமோ, வாதமோ, சீதமோ ?
அத்தனை நரம்பையும் அணை ஒரு ஆரமோ ?
சுத்தமார் வாயுவோ? நாடி, நன் புலன்களோ ?
பத்திகூர் எலும்புகொல்? பச்சை மென்சதை
கொலோ ? 12

ஊன், சதை, உடல், உயிர், உள்ளம், தீ, நீர்கொலோ?
நான் எனும் தன்மையோ? மோன
மெய்ப்பான்மையோ?
ஈனமோ, ஏற்றமோ, இவன், அவன், அதுகொலோ?
மானமோ, மானமில் திமிர்கொலோ? தீனமோ? 13

பூமியோ, வானமோ, அண்டமோ, பிண்டமோ?
சாமியோ, சாட்சியோ, சத்யமோ, நித்யமோ?
யாம் உரை இவை எலாம் கடந்ததோர் பூதமோ?
நாமமோ நாமமில் தோற்றமோ? துரியமோ? 14

கனவுகொல்? காட்சிகொல்? கருணையோ?
சீற்றமோ?
நனவுகொல், நினைவுகொல், தூக்கமோ,
மூர்ச்சையோ?
இனம்கொலோ? இல்லையோ? இன்று அன்றென்று
கொல்?
மனம்கொலோ? மதிகொலோ? மந்தமோ,
வேகமோ? 15

ஜடம்கொலோ? தாவரம், ஜங்கமம், உயிர்கொலோ?
திடப்பொருள், திரவம்கொலோ? திண்மையோ
மென்மையோ?
மடமையோ? புத்தியோ? மயக்கமோ? தயக்கமோ?
அடக்கமோ? துடுக்குடன் அச்சமோ
ஆற்றலோ? 16

யாவன் நீ? யாவள் நீ? யாது நீ ஓதிடாய்?
மூவகைக்காலமும் குணங்களும் கோலமும்
தெய்வீகப்பான்மையும் நேரமும் தூரமும்
யாவையும் ஆகியும் இவையிலாத்தன்மையாய். 17

பெண்ணும் நீ, ஆணும் நீ, பெரிதும் நீ, சிறிதும் நீ;
மண்ணும் நீ, விண்ணும் நீ, மலரும் நீ, சுவையும் நீ,
கண்ணும் நீ, ஒளியும் நீ, கருத்தும் நீ, மனமும் நீ,
பண்ணும் நீ, சுதியும் நீ, பரமும் நீ, இகமும் நீ. 18

அற்புதக்கூத்து

(23—6—49)

சடாமுடி கலைந்திட,
நிலாப்பிறை தவழ்ந்திட,
மகா வெண் கங்கைபொங்கிடக்
கபாலி நட்டம் ஆடினான். 1

குடாரி, சூலம் கையிலே
விடாது சுற்றி மின்னிடத்
தடாதகை வியந்திட
நடாதிபன் நின்றாடினான். 2

படாதோர் பாதம் பூமியில்
நடாம்ருதம் பொழிந்திட
அடாதோர் பாதம் தூக்கியே
சடாதரன் நின்றாடினான். 3

“அடாத செய்கை செய்பவர்;
படாத பாடு எய்துவர்;
விடேன், விடேன், அடா(அ)சுரா”
“தடால்” என்றய்யன் ஆடினான். 4

“திடீரெ”னத்ரிலோகமும்
கடாகமும் அதிர்ந்திடப்
“படீரெ”னக்கை டமரு கொட்டி
நடேசன் நாட்யமாடினான். 5

திகம்பரன், த்ரியம்பகன்,
இகம்பரம் தரும்பரன்;
சகம் முன் ஈன்ற சாசுவதன்,
அகம் மகிழ்ந்து ஆடினன். 6

விநாயகன் கை கொட்டிட
அநாதிநாதன் அம்புயத்
தனதோர் பாதம் தூக்கியே
மனோகரன் முன் ஆடினன். 7

குகன் குழந்தை கூத்திடச்
சகம் மகிழ்ந்து வாழ்த்திட
முகம்மலர்ந்து பூத்திடத்
திகம்பரன் நின்றாடினன். 8

வானில் தாரை வீழ்ந்திடக்கண்
ஞானத்தீயும் சூழ்ந்திடக்
கானம் வாணி பாடிடச் சித்
ஆனந்தன் கூத்தாடினன். 9

"திமித்திமித்திமீ" என
மிதித்தோர் காலைத்தூக்கியே
நமச்சிவாய நாயகன்
கவர்ச்சி பொங்க ஆடினன். 10

கரத்தில் தீ சொலித்திடச்
சிரத்தில் நீர் ஒலித்திட,
உரத்தில் நாகம் தொங்கிட
விரித்த குஞ்சி கொஞ்சிட 11

மறித்து நின்ற கால்தனில்
தரித்த தண்டை அஞ்சிடச்
சிரித்த சந்திரன் சாய்ந்திட
உரித்த தோல் நெகிழ்ந்திடத் 12

தரித்திராது வானவர்
உருத்திர ரூபம் கும்பிடக்
குறித்த மாலை வேளையில்
பவித்திரன் நட்டமாடினான். 13

முராரி முரசு முழக்கிடச்
சராசரம் துதித்திடப்
பராபரை பயந்திடப்
புராரி நாட்யமாடினான். 14

பதஞ்சலிப்பெயர் முனிநின்(று)
அஞ்சலிக்க வெம்புலிப்
பதஞ்சொலிக்கு மாமுனி
மனங்களிக்க ஆடினான். 15

விருத்தம் வேறு

அஞ்சல், அஞ்சல் என்றென்னுள்ளே
அய்யன் நாட்யமாடினான்;
கஞ்சமென் மலர்ப்பாதம் காட்டிக்
கருத்தில் நாட்யமாடினான்;
வஞ்சம் கொன்று வாழ்வு தந்து
வள்ளல் நாட்யமாடினான்;
நஞ்சமுண்டிருண்ட கண்டன்
நெஞ்சில் நாட்யமாடினான். 16

கனவுலகக் காட்சி காட்டி
நினைவில் நிருத்யமாடினுன்;
நனவுலக மாயை வீட்டி,
நாதன் நடனமாடினுன்;
மனமென் நளின மலரின்மீது
மன்னன் நடனமாடினுன்;
புனலும் பிறையும் சடையும் தாழப்
புண்ணியன் நடனமாடினுன். 17

கவலையடைந்த காலம் கால—
காலன் ஆட்டம் ஆடினுன் ;
அவல வாழ்வின் அநித்யம் காட்டி
அன்பன் ஆட்டம் ஆடினுன் ;
கவலை நீக்கிக் கருணை தேக்கிக்
கடவுள் நடன மாடினுன் ;
அபலைதுயரம் நீக்கிப்பாதம்
தூக்கிப் பரமன் ஆடினுன். 18

கற்பனை நற் சிற்சபையில்
கண்ணன் நிருத்ய மாடினுன் ;
சொற் பொதிந்த பொற் சபையில்
சொக்கன் நிருத்ய மாடினுன் ;
தற்பரப் பரம் பொருளான்
"தத்திமி" என ஆடினுன் ;
இப்படி என்றிசைக் கொணுத
ஈசன் நிருத்ய மாடினுன். 19

பாலைமனதில் காலை மிதித்துப்
பரமன் நர்த்தனம் ஆடினுன் ;
ஆலமுண்ட நீலகண்டன்
அகத்துள் நர்த்தன மாடினுன் ;
மேலும் மேலும் ஞான மன்றில்
மூலன் நிர்த்தனம் ஆடினுன்
கால கண்டன் கருத்திலாட
ஞாலத்துயரம் பறந்ததே !! 20

வெண்ணிலா

(27-8-50)

தண்ணெனக் குளிர்ந்திருக்கும்
வெண்ணிலாவே உன்றன்
தன்மை பெற வேண்டுகிறேன்
வெண்ணிலாவே
கண்ணன்முகம் போல் சொலிக்கும்
வெண்ணிலாவே நானும்
கடலில் விழவேண்டுகிறேன்
வெண்ணிலாவே
எண்ண எண்ண இனித்திடும்
வெண்ணிலாவே உன்றன்
இனிமை பெற வேண்டுகின்றேன்
வெண்ணிலாவே
உண்ணத் தெவிட்டா அமுதே
வெண்ணிலாவே
உன்போல் உலகைச்சுற்ற வேண்டுகிறேன்
வெண்ணிலாவே. 1

நீல வானிலே தவழும்
வெண்ணிலாவே
அங்கு நானும் வரவேண்டுகிறேன்
வெண்ணிலாவே
கோலக் கொற்றக்குடை போல்வாய்
வெண்ணிலாவே
நானும் கொண்டல் நடு நிற்கவேண்டும்
வெண்ணிலாவே

ஆல முண்டோன் முடிவளர்
வெண்ணிலாவே
அந்த அன்பைப் பெற ஆவல் கொண்டேன்
வெண்ணிலாவே
பாலைப் பழிக்கும் நிறத்தாய்
வெண்ணிலாவே
அந்தப் பசுமை பெற விழைகின்றேன்
வெண்ணிலாவே. 2

வெள்ளிக்கப்பல் போல் மிதக்கும்
வெண்ணிலாவே
அங்கு துள்ளி வரவேண்டுகின்றேன்
வெண்ணிலாவே
நள்ளிரவிலே மிளிரும்
வெண்ணிலாவே
உன்றன் நட்பைப் பெற ஆசை கொண்டேன்
வெண்ணிலாவே
கள்ளமில்லாமல் சிரிக்கும்
வெண்ணிலாவே
அந்தக் குழந்தைத் தன்மை வேண்டுகின்றேன்
வெண்ணிலாவே
கிள்ளை போலக் கொஞ்சி வரும்
வெண்ணிலாவே
இந்தக்கீழ்மை நிலை வெறுக்கிறேன்
வெண்ணிலாவே. 3

உலகத்துக் கப்பாலே
வெண்ணிலாவே
நானும் உன்னைப் போல வாழவேண்டும்
வெண்ணிலாவே

பலகற்றும் பயன் என்ன ?
வெண்ணிலாவே
பந்த பாசமற வேண்டுகின்றேன்
வெண்ணிலாவே
கலகப்புயல் நடுவில்
வெண்ணிலாவே
உன்போல் கலங்காதிருக்க அருள்
வெண்ணிலாவே
அலைமிசை எழும்பி வரும்
வெண்ணிலாவே
அந்த அற்புத நிலை விழைந்தேன்
வெண்ணிலாவே. 4

தன்னந்தனியாய் உலவும் வெண்ணிலாவே
அந்தத்தனிமை பெற வாடுகிறேன்
வெண்ணிலாவே
சொன்னப் பந்து போன்ற இளம்
வெண்ணிலாவே
என்றன் சொல்லைக் கேட்டிரங்கு கொஞ்சம்
வெண்ணிலாவே
வன்ன மேகத்துள் மறையும் வெண்ணிலாவே
அங்கு விளையாட நானும் வரேன்
வெண்ணிலாவே
இன்னமுதக்கதிர் ஒளி வெண்ணிலாவே
என்னை உன்னைப்போல மாற்றிவிடு
வெண்ணிலாவே. 5

தாரகைகள் சூழவரும் வெண்ணிலாவே
அந்தத் தகைமைபெற வேண்டுகின்றேன்
'வெண்ணிலாவே

ஆரமுதச் சுவைபொழி வெண்ணிலாவே
உன்போல் யாருமற்ற இடம் வேண்டும்
வெண்ணிலாவே
பாரின் நிழல் படிந்தாலும் வெண்ணிலாவே
உன்றன் பாலொளி குறைவதுண்டோ
வெண்ணிலாவே
யார் சொன்னதுனக்குக்கறை வெண்ணிலாவே
அவர் யாது மறியாதவரே வெண்ணிலாவே. 6

தூய வெள்ளைச் சோதி ஒளி வெண்ணிலாவே
அந்தத்தூய்மை பெறவேண்டும் கண்டாய்
வெண்ணிலாவே
மாய உலகக் கட்டிலே வெண்ணிலாவே
நீயும் மயங்கி விழக்காரணம் என்?
வெண்ணிலாவே!
போயும் போயும் பூமிதனை வெண்ணிலாவே
நீயும் பின்தொடர்ந்து சுற்றுவதென்
வெண்ணிலாவே
ஆயும் கிரகம் கோடிக்கோடி வெண்ணிலாவே
நீயும் அவைகளை ஏன் தொடர்வதில்லை
வெண்ணிலாவே. 7

கர்மபூமியின் கறையை வெண்ணிலாவே
நீயும் கழுத்தில் சுமப்பதென்ன?
வெண்ணிலாவே
மர்மம் தெரியவில்லை வெண்ணிலாவே
உன்றன் மாண்பிற்கிது அழகோ சொல்?
வெண்ணிலாவே
கர்மசந்திரன் காந்தியைப்போல்
வெண்ணிலாவே

நீயும் பிறர்குற்றம் சுமக்கின்ருய்
வெண்ணிலாவே
தருமிஷ்டர்கள் குணம் ஈதோ வெண்ணிலாவே
உன்றன் தன்மை பெற விரும்பினேன்
வெண்ணிலாவே. 8

ஆதியந்த மற்றசுடர் வெண்ணிலாவே
உன்னை அநித்யமென்று சொல்வதென்ன
வெண்ணிலாவே
வேதப்பொருள் சாந்தியன்றோ
வெண்ணிலாவே
அந்த சாந்திக்கிடம் நீயுமன்றோ
வெண்ணிலாவே
சோதிமணிக்குண்டலமே வெண்ணிலாவே
உன்னைத் தொட்டுப்பார்க்க இஷ்டம் கண்டாய்
வெண்ணிலாவே
பேதை என் பிதற்றல் தனை வெண்ணிலாவே
நீயும் பிரானிடம் சொல்லு பிறை
வெண்ணிலாவே. 9

பாரிசாதம் அல்லது பவளமல்லிகை

(4—10—57)

காரிருள் கவிந்த வேளை,
கருத்தெலாமழிந்த வேளை,
பாரினிற் பொறி கலங்கி
பாவையாள் நின்றவேளை
நேரினில் வந்து நின்றாய்
நின்னொளி காட்டி நின்றாய்
பாரிசாதப்பூவே நீ
பக்கமே வந்து நின்றாய். 1

பவளத்தை வென்று நிற்கும்,
பங்கயம் தோற்று நிற்கும்
அவனியில் கந்தன் வேலை
அழகினால் பழித்து நிற்கும்,
சிவனுடை மேனிபோலச்
சிவந்து செம்மாந்து நிற்கும்
துவளுமுன் காம்புகாட்டித்
தொட்டனை எந்தன் உள்ளம். 2

மல்லிகை மலரும் நாண,
மாமலர் வாணி நாண,
செங்கரச்சிவனார் நந்தி,
சின்மயக்கங்கை நாண,
மங்கள வதனம் காட்டி
மயக்கினை என்றன் உள்ளம்;
அங்குனைக் கண்டபோதே
அகிலமெல்லாம் மறந்தேன். 3

என்கையில் வந்து நின்ருய்,
இளநகை பூத்து நின்ருய்,
"பொங்கொளிர் பூவே உன்றன்
பெயர் என்ன" என்ற போதில்
"சங்கர் சிங்காரம்" என்ருய்,
சஞ்சலம் தீர்த்து நின்ருய்;
திங்களைக் கங்கையாளைச்
சங்கினைச் சயித்து நின்ருய். 4

செம்மையாரிதழ் விரித்துச்
சிறுநகை செய்து நின்ருய்;
மும்மைசால் உலகளித்த
முழு முதற் செல்வன் போலத்
தம்மையே நோக்கிஞேரைத்
தன்மையில் வென்று நின்ருய்;
அம்மையோ அப்பஞே நல்
அன்பஞே சொல்லாய் பூவே. 5

சிவப்பினுல் மயக்கி நின்ருய்,
செம்மையால் ஈர்த்து நின்ருய்;
உவப்பினுல் உள்ளம் கொண்டாய்;
ஒளியினுல் உட்புகுந்தாய்;
வியப்பினுல் அயர்ந்தேனுக்கு
விந்தையும் விளக்கி நின்ருய்:
அமைப்பினுல் மயக்கிவிட்டாய்;
அமரர்கள் மலரே வாழி. 6

மணத்தினுல் மனங்கவர்ந்தாய்,
மாட்சியால் உளம்புகுந்தாய்;
கணத்தினில் கையில் ஏறிக்
கவலையைத் தீர்த்து நின்ருய்;

பணத்தினுல் பலிசால் அல்ல ;
பான்மையால் வென்றுவிட்டாய் ;
குணத்தினுல் கொள்ளை கொண்டாய் ;
கோமளப்பூவே வாழி. 7

" அரனுர் சிங்காரம் " என்றும்
அரும் " பாரிசாதம் " என்றும்
பரன் அணி " பவளமல்லிப் "
" பனிமலர்ப் பூதான் " என்றும்
உரை செயப்பெற்று நின்ருய் ;
உலகிலே சிறந்து நின்ருய் ;
விரைசெறி மலர்கள் நாதா,
வித்தகப்பூவே வாழி. 8

வண்ணம், மென்தன்மை, மேன்மை,
வாசம், வெண்ணகை, வள்ளன்மை,
திண்மையில்லாத மென்மை,
திறன், எழில், எல்லாம் கொண்டுள்
எண்ணத்தில் மலர்ந்து நின்று
எழில் உடன் அன்புகாட்டும்
வண்ணத்துப்பூவின் கோனே
வண்பாரிசாதம் வாழி. 9

பவளமும் முத்தும் காட்டும்
பாவைமார் நகையோ அன்றிக்
குவலயம் புரந்தளிக்கும்
கொண்டல் மாவண்ணன் கையில்
தவம் பெற்றுத் தனித்தொலிக்கும்
தவள வெண்சங்கம் தானே ?
கவலையே கொண்டேனுக்குக்

கண்முனே வந்து நின்று 10
அவலமெல்லாம் ஒழித்த
ஆனந்தப்பவளமல்லி
மலராகி வந்தெனது வாட்டமெலாந்
[தீர்த்துவிட்ட
மலரரசே மாட்சியுடன் வாழி.
காம்பால், கனமணத்தால், கண்ணியத்
[தால், மேன்மையினுல்,
தீம்பால் நிறந்தன்னுல், தேசுமிகு வண்
[ணத்தால்,
மாம்பூமலர்க்கணையான் மனங்களிக்கவே
[சிரிக்கும்
தேன்பூவே தெய்விகமே வாழ்க. 11

அன்புக்குமுண்டோவடைக்குந்தாழ் ?

(14—7—57)

இதயத்தை இதயம் தொட்டால்
இதற்கிணைவேறொன்றுண்டோ?
மதியத்தின் அமுதம் தானோ?
மலர்விரி மணமே தானோ?
உதயத்து வேளை தன்னில்
உதித்திடு கதிரோன் தானோ?
எதை என்று சொல்வேனையா
இதற்கிணையாக ஒன்று. 1

உள்ளன்பு கொண்ட உள்ளம்
உவகைமாக்கடலே தானோ?
கள்ளமில் உள்ளத்தன்பு
கனிதருசுவையே தானோ?
பள்ளமே நோக்கிப்பாயும்
பனிவரை நதியே தானோ?
அள்ளூ தெள்ளமுதந்தானோ
அன்பினையறிந்த அன்பு? 2

ஏற்றமும் இழிவும் இல்லை,
இரவொடு பகலுமில்லை,
நாற்றமும் மணமும் இல்லை,
நன்மையும் தீங்குமில்லை,
பாற்கடல் அலையைப்போலப்
பண்பெனும் பிரபையை வீசி
ஈர்த்திடுமுள்ளத்தன்பு
ஏற்றந்தாழ்வறியாதய்யா. 3

இல்லாதான், உள்ளான் இல்லை;
இருப்பவன், ஏழை இல்லை;
கல்லாதான்; கற்றானில்லை;
களிமகன், கசடன் இல்லை;
நல்லான், பொல்லானுமில்லை;
நலிந்தவன் நலியானில்லை;
வல்லாளன் மாட்டானில்லை;
வசையிலா அன்பின்முன்னே. 4

சாதியும் மதமுமில்லை,
சாத்திரம் சட்டமில்லை,
போதனைக் கிடமுமில்லை,
புத்திக்கும் புரிவதில்லை ;
நீதியும் நெறியும் தானே
நின்மல அன்பாய் மாறின்
ஏதுவும் புரிவதில்லை
ஏன்என்றும் தெரிவதில்லை. 5

அன்புக்கு ஆட்பட்டோரை
அசைத்திட முடியாதய்யா ;
துன்பத்துக்கஞ்ச மாட்டார் ;
துயரத்தில் கலங்கமாட்டார் ;
வம்புக்கு வணங்கமாட்டார் ;
வாய்மையை இழக்கமாட்டார் ;
தன்னலம் பேணமாட்டார்,
தகைமை சேரன்பர் என்றும். 6

அன்பொன்றே வடிவாய் நிற்போர்
அச்சமே கொள்ளமாட்டார் ;
இன்பமே விரும்பி என்றும்
இழிசெயல் புரியமாட்டார் ;
துன்பமே யடைந்தபோதும்
தூய்மைகைவிடவே மாட்டார் ;
என்பு நெக்கேங்கிப் பொங்கும்
இன்பமே அன்பாய் நிற்போர். 7

மாரிமா முகில் கறுத்து
மண்ணினைத் தழுவிக்கொள்ள
வாரியாய்ப் பொழியும் போது
வணமிகு பிரமன் செய் இப்
பாரிலே அதைத்தடுக்க
வல்லவன் உண்டுகொல்லோ?
நீரையே நிறுத்தமாட்டார்
நிறுத்த வல்லாரோ அன்பை? 8

அன்பெனுங்கத்தி கொண்டோர்
ஆண்மையே உருவாய் நிற்பார்;
அன்பெனுங் கண்கள் உள்ளோர்
அன்புடை நெஞ்சங் காண்பார்;
அன்பெனுங்கனியைத் தின்றோர்
அச்சுவை பிரியலாற்றார்;
அன்புக்கு முண்டு கொல்லோ
அடைத்திடும் நெடியதாழ்ப்பாள்? 9

கடலினைக் காலிரண்டால்
கடுகியே கடக்கலாமோ?
மடலவிழ் தாழைவாசம்
மந்திரத்தால் தடுக்கலாமோ?
தடையின்றிப் பாயும் கங்கை
தனைக்கையாற்றடுக்கலாமோ?
உடல், உயிர், உணர்ச்சி ஒன்றும்
உள்ளன்பைத் தடுக்கப்போமோ? 10

மனிதன் நல்லிதயத்தன்பு
மனிதனின் இதயம் கண்டால்
இனியதன் இயற்கை தன்னை
எவராலும் பிரிக்கப்போமோ?
பனிவரை மீது தோன்றும்
பால்நிலாக்கற்றைதன்னை
நுனியுடைத்தலைப்பினாலே
நிறுத்தியே மறைக்கலாமோ? 11

அன்புக்கு அன்பே இன்பம்,
அதுவன்றிப்பிறிது வேண்டாம்:
அன்புக்கு அன்பே செல்வம்,
அக்கரை இல்லை வேறு:
அன்புக்கு அன்பே தெய்வம்,
அல்லனவெல்லாம் கல்லே:
அன்புக்கு அடிபணிந்தேன்
அன்பெனுமணியைக்கண்டேன். 12

உள்ளத்தைக்கொள்ளை கொள்ளும்,
உடல் எலாம் புல்லரிக்கும்,
மெள்ளத்தன்னிடமிழுக்கும்
மேன்மை ஐம்புலனை வென்று,
தள்ளப்படாத தன்மை,
தண்மையாலுயிரளித்து
வள்ளலாய் நிற்குமன்பை
வாழ்விலே கண்டுகொண்டேன். 13

அன்பெனுமானந்த அற்புதத்திருமணியை
இன்பமாய் கண்டெடுத்தேன் யான். 14

சூரிய ஜோதி அல்லது காலை ஒளி

(31—10—57)

சூரிய ஜோதி, சூரிய ஜோதி,
சீரிய மாமறை தேடிடு ஜோதி,
கூர் வடிவேல் எனக்கொஞ்சிடு ஜோதி,
ஆரியர், அல்லவர் வணங்கிடு ஜோதி,
பாரத மாமணிப்பைம்பொற்ஜோதி,
ஆரமுதக்கடல் அழகுச்சோதி,
பந்தென உருளும், பழம் எனத்திகழும்,
செந்தமிழ்ச்சொல் என இன்சுவை
கொட்டும்,
அந்தமில் மணியென அழகொளி வீசும்:
நந்த குமாரன் சக்கரம் இதுவோ?
சுந்தர வேலவன் சுடர்விழி ஒளியோ?
பைங்கிளி வள்ளியின் பாதச்சிலம்போ?
சங்கரி செங்கை சூலத்தொளியோ?
சங்கரன் நெற்றிக்கண் பொறிதானோ?
ஐங்கரன் வெற்றி அங்குசத்தொளியோ?
இங்கிவை யாவும் ஒன்று திரண்ட
மங்கள பாஸ்கர மண்டல ஜோதி
இங்குனைப்புகழவும் என்தரமாமோ.

———

செல்வக் குழந்தைகாள்

(ஆதிதேவனே மெட்டு)

(9—12—54)

சின்னக் குழந்தைகாள்,
செல்வமணிகளே,
வன்னக்கிளிகளே,
வளரும் கொடிகளே. 1

பள்ளிச் சிறுமிகாள்,
பாடும் குயில்களே,
துள்ளும் மான்களே,
தோகைமயில்களே. 2

அன்னக்குஞ்சுகாள்,
அழகுப் பதுமைகாள்,
சொன்னச்சிலைகளே,
சோலைப் பறவைகாள். 3

வானம்பாடிபோல்,
கானம் பாடுவீர்,
ஞானவாணிதாள்,
நாளும் நாடுவீர். 4

கல்விக்கரசியை
கருத்தில் இருத்துவீர்,
சொல்லின் செல்வியைத்
தொழுது பேணுவீர். 5

அல்லும் பகலும் நீர்
அன்பு செய்குவீர்,
கல்விதன்னிலே
செல்வம் காணுவீர். 6

கேள்வி முயலுவீர்,
கலைகள் பயிலுவீர்,
நாளும் மதியைப்போல்
வளர்ந்து பெருகுவீர். 7

எந்த நாளுமே
இன்பம் காணுவீர்,
இந்தியாவின் பேர்
இலங்க வாழ்ந்திடீர். 8

நல்லகுணத்தினுல்
நாட்டைப் பேணுவீர்,
செல்வக்குழந்தைகாள்,
சிறப்பு எய்துவீர். 9

பாரதப்பெயர்
பாரில் நிறுவுவீர்,
வீரர் திலகமாய்
வெற்றி முழக்குவீர். 10

பள்ளிப் பிள்ளைகாள்,
பண்பை நாட்டுவீர்,
தென்தமிழ்க்குலச்
சிறப்பைக் காட்டுவீர். 11

செல்வக்கதிரவன் சீர்மை விளங்கிட

(24—4—54)

காலை எழும்பும் கதிரவன் போல
வேலையில் நாட்டம் கொள்ளுதல் வேண்டும்;
சோலையில் ஒளிரும் சூரியன் போலச்
சுற்றம் மகிழ்ந்திட வாழ்ந்திட வேண்டும்;
மாலை மயக்கும் மார்த்தாண்டன் போல்
மக்கள் மனங்கவர் மாட்சிமை வேண்டும்;
ஞாலம் பரவும் ஞாயிறுபோலச்
சீலச்சிறப்பால் திகழ்ந்திட வேண்டும். 1

உலகம் வாழ்ந்திட ஒளிர் பகலவன் போல்
தலையால் தொண்டு புரிந்திடல் வேண்டும்;
பலயுகம் ஒளிவிடும் பரிதியைப்போல
திலகம் எனதினம் சிறந்திடவேண்டும்;
நிலவி இலங்கிடும் நீள்கதிர் போல
உலகிடை ஓங்கி உயர்ந்திட வேண்டும்;
நிலையாய் நின்றெரி தினமணிபோல
நிலையுள பணி பல புரிந்திடல் வேண்டும். 2

எதுவந்தாலும் எரி கதிரோன் போல்
துதியும் வசையும் ஒன்றெனல் வேண்டும்;
அதிர முழங்கிடும் ஆழ்கடல் வாழ
நிதம் எரி நின்மலன் நேர்மையும் வேண்டும்;
கதியாய், உலகின் பதியாய், ஒளிரும்
உதய ஞாயிறுபோல் ஒளிவிடல் வேண்டும்;
மதிக்கும் தண்மையும் ஒளியும் அளிக்கும்
அதிசய வள்ளன்மை வேண்டும், வேண்டும். 3

மாரிவழங்கிட, மேகம் முழங்க,
வீறு கொண்டெரியும் வீரமும் வேண்டும்;
வாரிக்கொளுத்தி அழுக்கினைப் போக்கும்
சூரியன் தூய்மையும் துலங்கிட வேண்டும்;
ஏரி, குளம், நதி யாவையும் நிரப்பி
வாரி வழங்கிடு வண்மையும் வேண்டும்;
தேரில் இருந்தரசாட்சி செய்தாலும்
வீரியம் பேசா மேன்மையும் வேண்டும். 4

தலைவன் ஆயினும் தம்பட்டம் அடியா
உலகுபுகழ் குண உறுதியும் வேண்டும்;
கலைவலன் ஆயினும் கண்ணியம் குறையாத்
தலைவணங்கிச்செலும் தன்மையும் வேண்டும்;
மலையில் உதித்தும் மயக்கமடையா
நிலையும் நேர்மையும் நெறியும் வேண்டும்;
அலைகடல் வீழ்ந்தும் அடக்கம் கைவிடா
குலையா உறுதிக்குண நலம் வேண்டும். 5

எல்லாஉலகும் ஏத்தி வணங்கினும்,
பல்லாயிரம் உயிர் பரிந்து புரக்கினும்,
அல்லும் பகலும் ஆண்மை விளக்கினும்,
நில்லாதென்றும் நெடும் செயல் புரியினும்,
கல்லையுருக்கும் வன்மை பெற்றிருப்பினும்,
பல்லை இளித்துத்தன்புகழ் பேசா
மல்லன் வல்லன் மாமணி வண்ணன்
செல்வக்கதிரோன் சீர்மை விளங்கிட
எல்லையில் இன்பம் இந்தியர் துய்ப்போம். 6

வாழ்க தமிழ்மொழி

(12—2—52)

தமிழக நாயகி, தாய்மொழித் தாயகி,
தண்டமிழ் வஞ்சி மணிக்கொடியே!
அமுதகலாமய அன்னை, புராதனி,
ஆரணி, காரணி, நாரணியே!
சமரச பாவமும் சாத்துவிக போதமும்
ஜகத்துக் களித்திடுமம்பிகையே!
அமர மனோன்மணி, அம்பசிரோமணி,
அந்தரி, சுந்தரி வந்தனமே!

இயலிசை என்றிரு கயல்விழி கொஞ்சிடு
இன் கலைக் கடலுதி இந்துமதி!
அயில் விழிக் குயில் மொழி மயிலியலன நடை
பயில் ஒயில் பாஷைகள் தெய்வதமே!
சயில துரந்தரன் மலய மலை பெறு
செந்தமிழ்ச் சுந்தரக் கன்னிகையே
வெயிலிடை மணியென ஒளிவிடு முகமதி
வண்டமிழ் ஒண்டொடி வந்தனமே. 2

சீரிய ஆரியம் தோழி எனப்புகழ்
சீர்மை விளங்கிடு செம்மொழியே!
பாரினில் பண்டையச் சீரினில் வேறொரு
நேரிணையில் மொழிக்காரிகையே!
பேறினில், பேரினில், பெற்றி துலங்கிடு
பேசரும் தெய்விக மெய்ச்சுடரே!
யாருனைப் போலுளர் கூறிடு தேமொழி!
பூரணி! பூங்கொடி வந்தனமே! 3

திராவிட மென்றுயர் பேர்பெரு நாட்டினில்
குலவி நிறைந்திடு கொற்றவையே!
பூவிலில் ஈடிணையற்ற பெரும் புகழ்
புண்ணிய கண்ணியப் பெண்மணியே!
நாவிலில் தேன்பொழி நாமகளே! உயர்
நாவலர், பாவலர் நாயகமே!
ஆவிகலந்திடு ஆரமுதே வளர்
அன்னை யருந்தமிழ் வந்தனமே! 4

கம்பனளித்த கவின்மொழி இன்சுவை
கொண்டு சிலம் பளி ஒண்டொடியே!
உம்பர் உவந்திடு ஓர் குறள் பாடிய
உத்தமன் பொத்திய ரத்தினமே!
அம்புவி மேலரசாட்சி விலக்கிய
தம்பியுவந்திடு கொம்பனையே!
நம்பிய தொண்டர்கள் நாவகலாத
நிரஞ்சனி, ரஞ்சனி, வந்தனமே. 5

தென்றிசை நின்று சிறந்திடு தேன்மொழி
தெய்விகப் புலமை திகழ் திருவே!
குன்றில் பிறந்தனை; மன்றில் வளர்ந்தனை;
கொண்டனை கோயில் தென்பதியே!
என்று மிலங்கிடு இன்ப மகாநிதி,
எம்மவர் காவிய ஓவியமே!
வென்று விளங்குவை: வெற்றி முழக்குவை:
வாழ்க தமிழ் மொழி வாழியவே!! 6

பழந்தமிழ்த்தேனே

பாக்கியம் படைத்த பழந்தமிழ்த்தேனே,
நாக்கிலேயூறும் நறுங்கனிச்சுவையே,
வாக்கிலேவளரும் வண்டமிழ்க்கொடியே;
தூக்கியஅடியோன் அளித்த பைங்கிளியே,
வாக்கினுக்கரசர் வளர்த்த மாமயிலே,
தேக்கு நல்லமுதே, தெய்வீகமழையே,
கேட்க இனிக்கும் கிளர் ஒளிஇசையே,
பார்க்கத்தித்திக்கும் பைம்பொன்னஞ்சிலையே,
தொட்டால் மணக்கும் தோமில்மாமலரே,
கட்டிக்கரும்பே, காவியப்பயனே.

கிட்டிப்பொழியும் கீதமாமுகிலே,
வட்டமாமதியே, வானமெந்நிலவே,
ஞானசம்பந்தன்றரு ஞானமெய்விளக்கே,
ஆனவன்றொண்டன் அளித்தபெண்ணரசே,
மாணிக்கவாசகர் இழைத்தமாமணியே,
ஆணிப்பொன் ஆண்டாள் அமைத்த
பூம்பொழிலே,
கம்பன்அளித்த கவிதைக்குயிலே,
தம்பி சமைத்த தங்கமென்சிலம்பே,
புனிதவதியார் பூத்தபொற்கொம்பே,
திலகவதியினைத் தந்த என்னம்மே,

திருத்தக்கத்தேவர் தந்த சிந்தாமணி,
கருத்துடைச்சாத்தனார் கோத்தமேகலையே,
புகழேந்தி பூத்த பொன்மலர்க்குளமே,
இகழ்விலாக் கூத்தர் எழுதிய படமே,
அவ்வை துதித்த நவ்வியங்கண்ணி,

கொவ்வைக் கனிவாய்க் கோமளக்கொழுந்தே,
வள்ளுவர் அடித்தவான் மணிமுரசே,
கொள்ளைகொள் பாரதிகொடுத்த செங்கோலே,
புள்ளிமாமயிலோன் புகன்ற செம்மொழியே,
பிள்ளைக்கண்ணன் பின்தொடர் அரசி,

ஆழ்வார் வெட்டிய ஆழமாக்கடலே,
தாழ்வேயறியாத் தமிழ்எனும் சுடரே,
வாழ்வே, வளமே, வாழ்க்கையின்ரசமே,
குமரகுருபரர்கொட்டிய பணமே,
அமராவதியே, அளகாபுரியே,
தாயுமானவர் தந்ததோர் செல்வீ,
நேயவள்ளலார் பெற்றதோர் புதல்வீ,
தூயஅருணகிரிதொடுத்தநல்முத்தே,
தாயே, தமிழே, தண்டமிழ்க்கன்னீ,
நீயேஅருள்வாய் நின்மலஒளியே.

அவ்வையார்

(5—4—49)

அவ்வை என்னும் அன்புப்பெயரமைந்த
தமிழ்ச்செல்வி,
செவ்வி மிகும் செந்தமிழால் சீர் பெற்ற முதல்வி,
பவ்வியமும் பாரதியும் ஒன்ருன வடிவே,
செவ்வுரைத் தீந்தமிழ்த்தாயே, தவக்கொழுந்தே
வாழி. 1

வள்ளுவர்க்கு முன்பிறந்த வாழ்வரசி, அன்னே,
கொள்ளேச்சுவைக் கோலக்கவி கொட்டும்
தமிழ்ப்பொன்னே,
அள்ளுசுவைத் தண்டமிழை அள்ளி அள்ளிப்
பொழிவாய்,
எள்ளளவும் செருக்கறியா இன்மணியே வாழி. 2

ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் அறநூல்கள்
அருளி,
சூத்திரமும், தொடைகவியும் செந்தமிழிற்பாடி,
நாற்றிசையும் நாவலரும் பாவலரும் ஏத்திப்
போற்றிசைக்கப்புவியாளும் பெண்ணரசே வாழி. 3

பெண்குலத்தின் பேரொளியே,
பழமைத்தமிழ்ப்பண்பே,
மண்ணரசர் அடிபணியும் மங்கையர்க்கு அரசி,
விண்ணரசர் வியந்து நிற்கும் வித்தைக்கொரு
கடலே,
கண்ணெளியே, கற்பகமே, கவித்தாயே வாழி. 4

கம்பனையும், கூத்தனையும் கவிதையினால் வென்றாய்,
அம்புவியாள் பாரிமக்கள் அன்புக்குளம் நைந்தாய்,
சம்பு, கண்ணன், ஐங்கரனைச்சதா காலம் துதித்தாய்
தம்பியுடன் தமிழ் வளர்த்த தலைமகளே வாழி. 5

கபிலருடன் வள்ளுவரைச் சோதரராய்ப்படைத்தாய்,
கவிவலவர் கண்டெடுத்த கலைக்கோயில் அமைத்தாய்;
நவநவமாத்தமிழ் நூல்கள் நாடறியச்சமைத்தாய்,
சிவசக்தித்தனிவடிவே, சயமகளே வாழி. 6

கணபதியின் அருளாலே கயிலைப்பதி அடைந்தாய்,
குணமாரும் குமரன் செய்த குறும்புக்குளம் உடைந்தாய்,
துணிவுடைய கவிஞர் குலம் தூமொழியால் வென்றாய்
பணிவுடைய மொழித்தாயே, பாமகளே போற்றி. 7

அவ்வை எனும் அருமருந்தே, ஆருயிர்க்குத்துணையே,
ஔவியமில் தமிழ்ச்செல்வீ, அருந்தமிழ்த்தண்கடலே,
தெவ்வர் கொளும் கொட்டமழி தெய்வக்கலைத்தாயே,
உய்வழி எமக்குணர்த்தும் உத்தமியே போற்றி. 8

பெயர் மறந்து புகழ் நிலைத்த பேர்பெரிய கிழவி,
சயவாழ்வு வடிவான சங்கத்தமிழ்ப் புதல்வி,
சுயமதிப் பின் தனி நிதியே, செந்தமிழின் தலைவி,
சய அவ்வை, சய அம்மை, சய அன்னை, போற்றி. 9

போற்றி போற்றி பொன் மகளே, பொன்னி நாட்டுச்செல்வி,
ஆர்க்குமிணை இல்லாத ஆரமுதக்கிழவி,
ஏற்றமிகு இயலரசி, இசைகொண்ட தாயே,
போற்றுகிறோம் பொன்னடிகள் அருள்புரிவாய் நீயே. 10

திருவள்ளுவர்

(5—4—49)

மயிலை எனுந்திருப்பதியில் மறையோதுந்தமிழா,
குயில்நாணக்குரலிசைக்கும் கொஞ்சு தமிழ்க்குமரா,
வெயில் போல வீசு புகழ் வாசுகியின் கணவா,
அயில் விழி செந்தமிழ் மகளின் அருமைந்தா
போற்றி. 1

சீரிய செந்தமிழ் மறையைச் செப்பிடு தெள்ளமுதே,
நேர் நெறியைச் சீர்முறையில் எமக்களித்த அரசே,
பார்பணியக்குறள் பாடும் பாரதரின் செல்வா,
ஆரமுதத்தமிழ்ப் புதல்வா அடியிணைகள் போற்றி. 2

அவ்வை எனும் அறிவரசி பின்பிறந்த குமரா,
அவ்வியமில்லாத மணிவள்ளுவனே, வள்ளால்,
“எவ்வகையும் அற நெறியே அருள்நெறியாம்
பாதை;
இவ்வகையில் வாழ்க” எனவழி வகுத்தோய் வாழி. 3

கலைஞர் குலமணி விளக்கே, கவிதை தருபயனே,
கலையரசி மனமகிழும் கவின் குறளாசிரியா,
அலையாழிக்கடலுலகம் அடிபரவும் அதிபா,
தலையாலே வணங்குகிறோம் தமிழ்மகனே போற்றி.4

பொய்யறியாமொழிப் புலவா பொன்மயிலைக்குயிலே,
தெய்வத்தமிழ்த் தனிப்புலமைத் தரும மணிக்கடலே,
கொய்யாது, குமையாது மணம் வீசும் மலரே,
செய்ய குறள் வல்லவனே, செந்தமிழா போற்றி. 5

உலகநெறி ஒருவரியில் ஒடுக்கு உண்மைச் சிற்பி,
அலகில் புகழ் அருமுனிவா, அவ்வை இளந்தம்பி,
பலதேச மொழியில் வளர் குறள் நேசச்செல்வா,
நிலமகளும் கலைமகளும் மகிழ் மகனே போற்றி. 6

தமிழறிஞா, கலையறிஞா, குறளறிஞா, கோவே,
அமுதமொழி அருளாளா, ஆரமுதக்கவிஞா,
சமரச மெய்ந்நெறியரசே, சன்மார்க்கக்கடலே,
அமரகுண வள்ளுவனே, அடிமலர்கள் போற்றி. 7

ஒரு கடுகைத்துளை செய்தே எழுகடலைப்புகட்டிக்
குறுகத்தரி குறள் என்னும் நூல்தந்த புலவா,
சிறுஅணுவைத்துளை செய்தே கடல் ஏழும் புகட்டும்
அருமை இளந்தமிழாளா அன்புருவே போற்றி. 8

ஒப்புயர்வில்லாதவனே, உயர்புலமைக்குன்றே,
திப்பியவானமுது தனைச் " சப் " பெனவே செய்தாய்;
அப்படி நீ செய்த தமிழ் எப்பொழுதும் மறையாம்;
தப்புமொழி புகலாத திராவிடனே போற்றி. 9

குறள் நிதியம் அருள்கடலே, கோலத்தமிழ் முனிவா
மறைதந்த மாதவனே, மயிலைபுரிக்கிறைவா,
அறநெறிக்கோர் அசையாத ஆதார மலையே,
துறவறத்தின் தூய்மை சொல்லுந் திருவள்ளுவா
போற்றி. 10

இல்லறத்தின் இன்பநெறி இசைக்குந் தமிழ்மன்ன,
அல்வழியும் அறவழியும் அரசாங்க முறையும்
நல்லனவும் அல்லனவும் வகைதெரிந்து விரிக்கும்
வல்ல தமிழ் மல்லமணி வள்ளுவனே போற்றி. 11

வள்ளுவனே, வண்டமிழா, வாசுகியின் தலைவா,
கள்ளமறியா உளத்தோய், கடற்கரையில்
உறைவாய்.
தெள்ளமுதத் தீந்தமிழின் சுவைமணக்குங் கனியே
உள்ளங்கொள்ளை கொள் குறளின் தெய்வதமே
போற்றி. 12

போற்றி, போற்றி, பெருமகனே, திருமகனே, தமிழர்
நாற்றிசையும் போற்றிசைக்க நல்ல பொருள்,
உரைத்தாய்.
மேற்றிசையும் கீழ்த்திசையும் மேன்மைகண்டு
பிரமிக்கும்
ஏற்றமுள வள்ளுவனே போற்றி, போற்றி
எந்தாய். 13

இளங்கோவடிகள்

(14—3—51)

அலைகடல் சூழ்புவி அன்னை எம்மாதா
நிலமகள் நின்மல பதுமப் பதத்தில்
விலைமதிப்பில்லா வேலைப்பாடுடைய
சிலப்பதிகாரச் செல்வப்பரிபுரம்,
இலக்கண இலக்கிய இசைமணி பதித்த
குணச்சுடர் ஒளிவிடு கோமள நூபுரம்,
வணக்க மொடந்நாள் சாற்றினை வாழி!
ஆரமர் செல்வன் அச்சுதன் துயில்கொள்
சேரநாட்டில் வந்துதித்தனை வாழி!
அண்ணனுக்காய்ப்பல இன்னல் சகித்த

அண்ணல் இலக்குவன் அவனுக் கொப்பாய்
வண்ண மணிமுடி வகையாய்த் துறந்து
திண்ணமாய்த் துறவறம் பூண்டனை வாழி!
அரசகுலத்தில் அவதரித்தாலும் அவ்
விரச வாழ்க்கையை வீண் என நீக்கி
சரச காவியம் சகத்தில் புனைந்து
முரச துந்துபி முழக்கினை வாழி!
தந்தை பொருட்டாய்த் தன்னலம் துறந்த
எந்தை பீஷ்மர் போல் “ஏந்திழை திருமணம்
எந்த நாளிலும் இனிவிரும்பேன்: இனி

சந்ததிப்பேறும், அரசும் விரும்பேன்.
முந்திப் பிறந்தவன் மகிழ்ந்தரசாள
இந்த இல் வாழ்க்கையை இன்று துறந்தேன்:
தந்தையே” என்று தருண வயதினில்

சிந்தனைக் கெட்டாச் சீர் மிகுதியாகம்
வந்தனைக்குரிய துறவறயோகம்
நந்தியைப் போல நயந்தனை வாழி !
பெற்றோரிட்ட பெயரும் மறைந்து
நற்றவத்தாலே நானிலம் சிறக்க ;
கற்றவர் மகிழ ; மற்றவர் புகழ ;

“ இளங்கோ அடிகள் ” என்ற திருப்பெயர்
விளங்கச்சிறந்த எம்வேந்தே வாழி !
இளமையில் துறந்த எழிலோய் வாழி !
உளமதில் இனிக்கும் உத்தமா வாழி !
பத்தினிக்கடவுள் : பார் புகழ் செல்வி ;
உத்தமி கண்ணகிஇரத்தின ரவியின்
சத்தியத் தன்மை விளக்கினோய் வாழி !
கோவலன் பேதைமை : மாதவி மகிமை ;
காவலன் பாண்டியன் கடமையின் தவறு :
பாவிபொற் கொல்லன் பாதகத் தீச்செயல்;

சாவிலும் பொய் சொலாக் கோவலன் தன்மை ;
வெட்டுப் பட்டவன் வீர பத்தினியாள் ;
கட்டுக் கடங்காக் கற்புக் கனலாள் ;
மட்டவிழ் குழலாள் ; மாதர்கள் திலகம் ;
செட்டிமார் சீர்குலத்திருமணி மகுடம் ;
கட்டம் சகித்த கண்ணகித் தெய்வம் ;
அட்ட லட்சுமி அடிபணி தெய்வம் ;
வட்ட மார்பகம் வாரித்திருகி
துட்டர்கள் ஊரைச் சூறையாடிய
பட்டப்பகலில் படுகனல் மூட்டிய ;

சட்டம் திறம்பிய மன்னவன் முன்னே
கட்டுப் பாடழித்த காவலன் முன்னே

அட்டதிசையும் அதிர்ச்சியடைய,
துட்டனை விடுத்துத் தூயனைக் கொன்ற
கெட்டகாலம் சூழ் பாண்டியன் முன்னே
முத்துச்சிலம்பை முன்பறிகொடுத்த
கொத்துக்கிளர் முடிக் கொற்றவன் முன்னே
பத்தினித் தெய்வம் தன் பாதச்சிலம்பை ;
சத்த மொலித்திடும் சத்தியின் வடிவை ;
உத்தமி கழலில் ஒலி மணியணியை,

கத்திக்குக் கணவனைக் கடும் பலியாக்கிய
சத்தியச் சாட்சியைத் தரையில் உடைத்து
உத்தமன் கோவலன் உதிர்த்த மென் துளிகள்
இரத்தம் போன்ற ரத்தின மணிகள்
முத்துக்கள் அல்ல : முழு நவமணிகள்
தத்தித் தெறித்திட தலைதடுமாறிச்
சத்தியம் பிழைத்த பாண்டியன் வீழ்ந்திடச்
செத்த தலைவனின் தூய்மையை விளக்கிய
மெத்த மாசதியாள் மெல்லியல் தன்மையைச்
சித்தம் கனிந்திடத் தொகுத்தோய் வாழி !

தண்டமிழ்ச் செல்வி : தமிழ் மூதாட்டி
ஒண்டொடி பதத்தில் ஒளிவிடு சிலம்பு
கண்டபேர் வியந்து கற்சிலை போல,
அண்டர்கள் கும்பிடும் அதன் எழில் துதித்திட
மண்டலம் போற்றிடச் சமைத்தனை வாழி !
சிலம்பணியளித்த செல்வனே வாழி !
நிலம் புகழ் இளங்கோ அடிகளே வாழி !
கலங்கரை விளக்கெனக் காவிய உலகில்
இலங்கிடு எம்மான் இளங்கோ வாழி !
துலங்குக நின்னொளி ஊழிதோறூழி !!

கண்ணகி வந்தாள்

(27—5—53)

வெடித்த இதயம், விரித்த கூந்தல்,
துடித்த அதரம், தூய்மையின் சிகரம்,
வடித்த கண்ணீர், வெஞ்சினப்பெண்மை,
பிடித்த சிலம்பு, பொற்கொடி உடம்பு ; 1

புரண்ட புழுதி தவழ்ந்த மேனி,
இருண்ட கூந்தல் அவிழ்ந்த கோலம்,
திரண்ட கோபம் தீயுமிழ் கண்கள்,
நிறைந்த கற்புத்திகழ்ந்த வடிவம் ; 2

அக்ரமம் சகியா அனல் எரி உருவம்,
துக்கம் பொழிதரு சுந்தர வடிவம்,
நக்கன் உருவென நடுக்கும் நயனம்,
பக்கம் சுடர் விடு பத்தினிக்கானல் ; 3

அலைந்த கூந்தல், அழிந்த திலகம்,
கலைந்த ஆடை, கலங்கியகோலம்,
மலைந்த தோற்றம், மாதவள் சீற்றம்.
தொலைந்த பொறுமை, சுடர்விடு ஆற்றல் ; 4

பொங்கிய வெஞ்சின மிஞ்சிடு வதனம்,
துஞ்சிய கணவன் துயர் தவழ் நயனம்,
செஞ்சிலம்பொன்று செங்கையில் வேலாய்
அஞ்சிட வந்தனள் அம்பிகை தேவி. 5

மாடமதுரையில் மடமகள் வந்தாள்,
கூடல் தெருவினில் குலமகள் வந்தாள்,
பாடகச்சிலம்படிப் பத்தினி வந்தாள்,
ஆடகப்பொன்னுரு அனல் எழ வந்தாள் ; 6

பத்தினிக்கடவுள் பாய்ந்து நடந்தாள்,
உத்தமி உயர்சதி ஓடி நடந்தாள்,
செத்தவன் பத்தினி சீறி நடந்தாள்,
"பொய்த்தவன் அல" எனப்பொங்கி நடந்
தாள். 7

வெட்டுப்பட்டவன் வீர பத்தினியாள்,
கட்டுக்கடங்காக் கற்புக்கனலாள்,
மட்டவிழ் குழலாள், மடமயில் மடவாள்
சுட்டுப்பொசுக்கிடச் சுந்தரி வந்தாள். 8

கோவலன் மனைவி குமுறி நடந்தாள்,
காவலன் மனைவிகடுகி நடந்தாள்,
சேவகன் முன்னே சீறி நடந்தாள்,
யாவரும் கண்டிட ஏழை நடந்தாள். 9

கற்புக்கனல்கொடு கண்ணகி வந்தாள்,
பொற்சிலம்பேந்தியே பூங்கொடி வந்தாள்,
நற்பெயர்ப்பூம்புகார் நாயகி வந்தாள்,
அற்பரைப்பொடிசெய்ய அன்னையும் வந்
தாள். 10

கதறியே வந்தாள் கண்ணகிப் பெண்மணி,
பதறியே வந்தாள் பத்தினிக்கடவுள்,
உதறியே உள்ளம் உத்தமி வந்தாள்,
சிதறியே கூந்தல் சிலம்புடன் வந்தாள். 11

மதுரையதிர்ந்தது ; மக்கள் பயந்தார் ;
உதிரம் தவழ் விழி உத்தமி வரவால் ;
சதியர் நடுங்கினர், ஜனங்கள் பயந்தார் ;
அதிசய பத்தினி அரசனைக்கண்டாள். 12

வந்தாள் வள நகர் வண்மைக்கொருவள்
கொந்தார் குழலி கூடலில் வந்தாள் ;
அந்தோ, அன்றுடன் அரசன் அழிந்தான் ;
இந்தப்புவியினில் செந்தணல் கற்பே. 13

அணியமுதம்

(6—5—54)

பாவலர் நாடுறு பால்மதியமுதம்
பண்புள சிந்தாமணியாரம்,
நாவலர் நாடுறு நற்கடலமுதம்,
நன்மணி சிந்தாமணியாரம்,
தேவரும் காமுறு தேன்மழையமுதம்
தேவரின் சிந்தாமணியாரம்,
சாவினை வென்றிடு மூவா அமுதம்
சீவக சிந்தாமணியாரம். 1

தத்தையின் தத்தை மொழிக்கடல் மதியம்
சத்திய சிந்தாமணியாரம்,
வித்தையும் விஞ்சையும் வென்று புரள்கடல்
வியன்மணி சிந்தாமணியாரம்,
முத்தியும் பக்தியும் மூண்டு புரண்டெழு
மோகன வாரிதி மணியாரம்,
சக்தியும் புத்தியும் நர்த்தனம் செய்திடு
புத்தமுதக்கடல் புனையாரம். 2

விஞ்சையும் வீரமும் வெற்றி முழக்கிடு
பஞ்சாமிர்தமே மணியாரம்,
அஞ்சு புலன்களும் கொஞ்சி மகிழ்ந்திடு
அணி மலர்க்காவே மணியாரம்,
நெஞ்சு நிறைந்து நல்லின்பம் சுரந்திடு
நந்தன வனமே நல்லாரம்,
கஞ்ச மலர்த்திரு கலைமகள் மெச்சிடு
கர்ணாமிருதமே கவின் ஆரம். 3

போகமும் யோகமும் பொங்கிப்பொழிந்திடு
பொன்னகர் அமுதே புனையாரம்,

போகமும் நாகமும் நாணப்பொழிந்திடு
பொன்மலர் வனமே புத்தாரம்,
மோகமும் சோகமுதாகமு நீக்கிடு
மோகனப்புயலே மணியாரம்,
ஏகனனேகனிறைவ னைக்காட்டிடு
தூயபொற்சுடரே மணியாரம். 4

எண்மரின் காதல் எழில் மிக ஓதிடு
இணையில் சுதையே மணியாரம்,
கண்கவர் காளை இன் காதை உரைத்திடு
காவியமுகிலே மணியாரம்,
மண்மகள் பொன்மகள் நாமகள் நடமிடு
மாமணிச்சுரங்கம் மலர் ஆரம்,
தண்மழை யன்ன, தழைமுகில் அன்னதோர்
தமிழ் மொழி இசையே தண் ஆரம். 5

சிந்தாமணி யெனச்சீவகன் கதை சொல்லும்
சிந்தாமணியே, செம்மணியே,
நந்தாச்சுடரே, நனையாமலரே,
நாயகமணியே, மா நிதியே,
பந்தத்தொடர்பறு பண் ஒலி குயிலே,
பண்புறு மயிலே, பா அனமே,
சிந்தாமணி எனும் சிந்தனையமுதே,
எந்தேயத்தவர் எழில் மொழியே. 6

காவிய மழையே, கட்டுரை மொழியே,
ஓவியச்சுவையே, ஒளிர் சுடரே,
நாவினில் தேன்பொழி பூஇயல்கொடியே,
புண்ணிய மலையே, புத்தொளியே,
கோவில் வாழ்சிலையே, குரைகடல் அலையே,
கொம்பே, வம்பார் செந்தேனே,
ஆவியில் இனியாய் ஆரமுதனையாய்
அணிபொற்சிந்தாமணி வாழ்க. 7

மலைக்கோட்டை மாமணி

(21—11—52)

" ஓம், ஓம், ஓம்," என ஒலிக்குது நாதம் ;
" ஆம் ஆம் ஆம் " என அறையுது கீதம் ;
" நாம் வாழ்வோம் " என முழங்குது வேதம் ;
" தாம் தீம் தாம் " என லயிக்குது தாளம். 1

" எழு, விழி, எழு " என இயம்புது சத்தம் ;
" ஸரிகமபத " என முழங்குது நித்தம் ;
அருமறை ஓதுது திருமணி ஓசை,
கருவினை மாய்க்குது கணபதி கிரிமணி. 2

" டாண், டாண், டாண், " எனஒலிக்குது
கண்டா,
" காண், காண் கதிர் " எனக்கத்துது மலைமேல்;
மாணுயர் கிரிமேல் மாமணி முழங்குது ;
ஆண்டகை கணபதி ஆண்மை விளக்குது. 3

" காலையில் எழுவாய், கடவுளைத்தொழுவாய் ;
நூலைப்படிப்பாய், நோன்பு முடிப்பாய் ;
பாலவிநாயகன் பாதம் தொழு " என
நாலுமணிக்கே நவிலுது நன்மணி 4

" காரியம் செய்வாய், கண்ணை விழிப்பாய்,
கோரிய நந்நெறி சீர்பெறச்செல்வாய், "
வீறுயர் விக்ன விநாயகன் கிரிமேல்
ஆறுமணிக்கே அறையுது பொன்மணி. 5

"உத்தமனுவாய், உறுதியடைவாய்,
சத்தியம் கொள்வாய், சாந்திபெறுவாய்,
பக்தியில் மகிழ், புகழ் நித்தியம் பெறு," எனப்
பத்துமணிக்குப் பகருது பெருமணி. 6

"உச்சியின் காலம் உச்சிதவேளை
மெச்சிடு செயல் புரி, மேன்மை கடைப்பிடி;
நிச்சயம் ஞானம் கொள், நிமலனை நினை" என
உச்சிமலை முடி உணர்த்துது ஒண்மணி. 7

"அந்தியும் வந்தது, அர்க்கன் மறைந்தான்,
சந்தியாகாலம், சங்கரன் திருமகன்
தொந்தி விநாயகன் வந்தனை புரி," என
நந்தியின் குரல் போல் நவிலுது நன்மணி. 8

"நல்லன செய்தாய், நாளும் கழிந்தது,
அல்லும் புகுந்தது, ஆறுதல் கொள்" என
நல் நிசி வேளை வெண்கல ஒண்மணி
"கல், கல், கல்" எனக்கழறுது விரைவாய். 9

"போ, போ, போ" என பிணி, பயம் ஓட்டுது,
"வா, வா, வா" என வாழ்க்கை விளக்குது;
"மா தேவா" என மணியும் முழங்குது;
"ஓம் ஓம் ஓம்" என ஓங்குது நாதம். 10

திருச்சி மா நகர் தெய்விக புரியில்
உச்சிப்பிள்ளையார் உயர் கிரி முடியில்
மெச்சி ஓங்கிடும் வெண்கல மாமணி
அச்சிறப்பினை அறைவது தரமோ! 11

மாமணி நாதம் மலர்ச்சியூட்டுது;
தேமொழி மட்டுவார் குழலியம்மையும்
நாமுடைத்தாயுமான அப்பனும்
"ஓம்" எனும் வாய்மொழி ஒலியே மாமணி. 12

மங்கள அரங்க இரத்தினம்

(4—2—52)

கஸ்தூரி மணம் கமழக்கமழக்
காவேரி ஜலம் தவழத்தவழ,
விஸ்தார நுதல் விளங்க, விளங்க,
விதவிதப்பணியணி புரளப்புரள ; 1

மரகத மார்பொளி திகழத்திகழ,
மார்பினில் செந்திரு மகிழ, மகிழ,
அரையினிற்பட்டுடை அசைய, அசைய,
அல்லிமலர்த்திரு அருள, அருள ; 2

காரொளி மேனியும் சீரொளி வீச,
கண்மலர் கருணைபொழியப்பொழிய,
நாரதர் யாழொலி நிறைய, நிறைய,
நாற்புறம்தொண்டர்கள் குவியக்குவிய ; 3

நீண்டகரம் படைபூண்டு கிடக்க,
நெற்றியில் மரகதத்திலகம் மின்ன,
காண்டகு இரத்தின மாலை இலங்க,
கைகளில் சங்குடன் சக்கரம் விளங்க ; 4

புத்தப்புது மலர் மணக்க, மணக்கப்,
பூரண வேணு ஒலிக்க, ஒலிக்கக்
"கத்தாதே" எனக்கருடன் அடக்கக்
கற்பனைக்கெட்டா அற்புதம் சொலிக்க ; 5

ஆண்டாள் புனைந்த ஆரம் துலங்க,
அன்றுபறித்ததுளபங்கமழ
பூண்ட நின்கோலம் புகழச்சபையில்
புதுப்புதுப்பாவலர் நாவலர் கூட ; 6

பூமலர் காவிரிப்பொன்னரங்கத்தில்
நாமகள், பாமகள் பரவப்பரவ,
தீம்பொழில் தெய்விகத்தென்னரங்கத்தில்
கண்டனன் கண்கவர் மங்கள இரத்தினம்! 7

மங்கள மண்டபம் மணியணியாதனம்,
புத்தொளி வீச இரத்தின அங்கி,
எங்களரங்கன் இருந்தனன் கொலுவில்
மங்கள மூர்த்தி திருவரங்கத்தில். 8

அரங்கத்துக்கோர் அணியேயாவான்,
அரங்கத்தண்ணால் அரவில் கிடந்தான்;
தரங்கப்பாற்கடல் உறங்கும் பெருமான்
தென்னரங்கப்பதி தனியரசிருந்தான். 9

இவ்வித இரத்தினம் வேறெங்கும் காணேன்,
கொவ்வைக்கனி வாய், கோமள முறுவல்,
பவ்விய மேனி, பதும பதங்கள்.
பட்டுடை, பல்லணி, பஞ்சாயுதங்கள், 10

தோளுந்தாளும் நீலக்கோலம்,
வண்மலர் விழிகள், வச்சிரச்செங்கோல்,
நீளரங்கத்தில் நின்மலநாதன்
நீலமலர்ச்சுடர் நேரரசிருந்தான். 11

காவிரி மாமகள் பூமலர் சொரிய,
காவலர் கழலடி கண்டுவணங்க,
மாமலர் நாயகி, மண்மகள் உடனே
கோவலர் நாயகன் கொலுவில் இருந்தான். 12

ஆனைக்காவும் திரிசிரபுரமும்
அரங்கத்தெழில் ஒளி கண்டுளம் மகிழ,
ஞானப்பூங்குழல் கோதை மணாளன்
கானக்கண்ணன் காட்சியளித்தான். 13

குடதிசைமுடியும் குணதிசை பதமும்
வடதிசை பின்பும் காட்டி உறங்கும்
நடன சிகாமணி நளினக்கண்ணன்
அடியவர் வாழ அரசிருந்தானே. 14

திங்கட்குலச்செம்மல் தென்னரங்கப்பெருமான்
மங்கள மணிவண்ணன் எங்கள்குறை
தீர்த்தான். 15

இராமேச்சுரம்

(26—6—55)

அயோத்தி நாதனும், அம்பிகை சீதையும்
அன்று நடந்த அற்புத பூமி,
சயாதிபன் ஒரு சம்பகவன்னத்
தம்பி நடந்த மெய்த்தரும நற்பூமி,
இமாசலன்மகள் இறைவனுடனே
இனிது உறைந்த இன்பமென்பூமி,
யமாதி பாலகர் என்றும் வணங்கும்
இராமேச்சுரம் எனும் இலக்கிய பூமி. 1

வானர வீரர்கள் வந்து வளைத்து
வன்கடற் பாலம் கட்டிய பூமி,
தானவர் கோமான் தலையை உருட்டிய
தாசரதிகால் சுவடுதோய் பூமி,
மீனவிலோசனி கானவினோதினி
பர்வத வர்த்தனி திகழும் பூமி,
ஞானகலாகர இராமஇலக்குவர்
வான் இறைபாதம் வணங்கிய பூமி; 2

பூமியின் மடமகள், பூவுலகருந்ததி,
புண்ணியப் பொற்கொடி நண்ணிய பூமி,
காமியைக்கொல்ல கடலணைகட்டிய
காகுத்தன் கால்படி கடற்கரைப்பூமி,
சாமளதேகனும் சானகிதேவியும்
சத்தியம் முடித்த பவித்திரபூமி,
இராமன்எனும் பெயர் நாவில் இனித்திடு
இராமேச்சுரம் எனும் இரமணியபூமி. 3

இலிங்க உருப்பரன் இராமன் துதித்திடச்
சங்கரன் சங்கரி தங்கிய பூமி,
அங்கொருமணல் உரு அன்னை முன் நிறுவ
அதை அசை அனுமனும் தோற்றிட்ட பூமி;
சங்கை இலா துயர் சானகிராமன்
சங்கரன் பூங்கழல் வணங்கிய பூமி,
பங்கயக்கண்ணன் பதமலர் படிந்திடப்
பாக்கியம் செய்த பாரதபூமி. 4

தம்பி இலக்குவன்—தருமப்பெருமகன்
தங்கி இருந்த தாரகபூமி
நம்பி இராமனும் நங்கை வைதேகியும்
நக்கனைப்பணிந்த நாயகபூமி,
அம்புவிமங்கை அய்யன் கால்பட
ஆயிரங்காலம் தவம்செய்த பூமி,
எம்பெருமாட்டி, இளவல், எம்பிரான்
என்றும் விளங்கும் இலட்சிய பூமி. 5

வில்லுக்கொருமகன் வீரராகவன்
வெற்றி கொண்டாடிய வித்தக பூமி,
புல்லணைதனிலே புனிதன் புரண்டிடப்
பூரண மெய்த்தவம் பண்ணியபூமி.
கல்லணை எனுமோர் கடலணை கட்டிக்
கடும்போர் புரிந்தவன் கடுகிய பூமி,
வில்லி இலக்குவன், மெல்லியல் மைதிலி
மனக்குறை நீக்கிய மங்களபூமி. 6

சக்கரவர்த்தித் திருமகன் என்னும்
சற்குணன் தங்கிய சமரசபூமி,
இக்கரைதனிலே இவன்தவம்செய்து
அக்கரைக்கயவரை அழித்திட்டபூமி,

மிக்க கற்புடைய மேதினிச்செல்வியார்
மீண்டு திரும்பிய மோகன பூமி
ஆக்கமாண்புடைய தயரதன் மக்கள்
தருமம் விளக்கிய தாயகபூமி. 7

இராகவ நாயகன் வீரம் விளக்கிய
இராக்கதர் கொட்டமடக்கிய பூமி,
ஏரகன், அனேகன் இறையவன் தங்கும்
இராமேச்சுரம் எனும் இரஞ்சகபூமி,
ஆகமமெய்ப்பொருள் அருமறைதிருப்பொருள்
அன்புடன்பூசனை புரிந்திட்ட பூமி,
தோகை இளங்கொடி சானகிப்பொற்கொடி
இராமனையடைந்த இராமேச்சுரமே. 8

கன்னியா–குமாரி வண்ணம்

(10—1—48)

பன்னற்கரியதோர் பாரத நாடதில்,
மின்னற் கொடியென மேனி வளம் திகழ்
செந்நெற் கதிர் மணி செம்மை சிறந்திடு
அம்மை, பராபரை ஆளுடை நாயகி,
கன்னிப்பெயர் பெறு காரிகை, தீதறு
வன்னிக்கண்ணுதல் வெள்ளிக்கிரி இறை
அன்னமென் நன்னடை, அஞ்சுக மென்மொழி
கன்னற் கனி ரசக்கற்பகப் பொற்கொடி,
துன்னும் பனிவரை தந்திட வந்தவள்,
தன்னை மணந்திடத்தாமதம் செய்திடக்
கன்னங்கரிய முக்கடல் பொருமுனை இடை
"என்னை, இவர் செயல் இங்ஙனம் இருந்தவா,
சொன்னதோர் சொற்படிச் செஞ்சடைச் சிவபிரான்
இன்னம் வராதவாறு" என்றுளம் வெதும்பியே
மன்னர் மாமணி மாதவன் சோதரி,
சின்னஞ்சிறிய செம்பஞ்சடி சிறியே,
"என்னவந்தாலும் இக்கணம் முதலிறையவர்
தன்னை மணந்திடச் சம்மதியேன்" என
வன்மையின் வல்லமை விளங்கிடத்தவம் செயும்
சின்மய ரூபிணி சிதானந்த மூலிகை
அன்னையுங் கன்னியுமவள் எனமறை புகழ்
கன்னிக்குமரியின் கமனிய வடிவினை,
முன்னுக்கொரு கடல் முரசென முழங்கிடப்
பின்னொரு வாரிதி பெருமித நடமிடத்

தன்னொடு இணை சொலத்தாரணி மீதினில்
இன்னம் பிற பொருள் இல்லை, இலைஎன
இந்நில்லாதலை இந்து மகாக்கடல்
கன்னியின் முகமதி கண்டு உவந்திட;
தென்திசைத் திருப்பதி தெய்வக்கடற்கரை
நின்று தவம்புரி நின்மல சக்தியின்

மன்றுள் நடம்புரி மாமணி போற்றிட
அன்று நடம் பயில் ஆதி பொற் சோதியின்
வென்றிகொள் செங்கழல் வீரச்சிலம்பென
குன்று மணிப்புயக்குமரனை ஈன்றவள்
இந்திரமாமணி இருபத மலர்த்துணை,
வந்து வணங்கிடு வானவர் கோனிடு,
அந்தரித்தொடை என அந்தமிகுந்திட,
சந்திர சோதரி இந்திரை வண்மை சேர்
சுந்தர மாமணித்தாமரை மாளிகை,
கந்தமணங்கமழ் செந்திரு மந்திரம்,

வந்து வணங்குநர் வல்வினை இருளற
அந்த வசுந்தரை யன்புடனேற்றிய
நந்தாச்சுடரொளி நன்மணி விளக்கென
கொந்தார் மலர்க்குழல் கோதையின் சீதள
சிந்தாகுலமொழி சின்மய எழிலினை,
முந்தாயிரம் பல்லாண்டுகள் நம்முனோர்
எந்தாய் எனப்பணி நலமிகு நிலமகள்
விந்தைக்கொரு நிதி, விரிஞ்சன் கலைத்திறன்,
இந்தா, விடுதலை எனயாமளை தரு,
பந்தார்விரல்களில் பளபளவென ஒளிர்

சிந்தாமணிமலர்ச் சித்திரமாலையாம்
எந்தாய் இருப்பிடத்தெழிலையும் புகழையும்
செந்தேன் மணிமலர்க்குமரியின் தன்மையும்
மைந்தன் என்ஒருவனால் புகழவும் போமோ?

குற்ருலம் நீர் வீழ்ச்சி

பாற்கடல் பொங்கு மாபோல்,
பனிமதி எழும்பு மாபோல்,
கார்க்கடல் அலேயுமாபோல்,
கற்றவர் சிந்தையே போல்,
நூற்கடல் விளங்குமாபோல்,
நுண்ணறி வொளிருமாபோல்,
பார்க்குளே புதுமையூட்டும்
பால்நிறத்தருவிகண்டேன். 1

வானவர் வண்ணப்பூங்கா
வனமலர் வாசம் வாரிக்
கான கந்தருவர் நாட்டுக்
கற்பகமணமும் வாரி,
ஞான சம்பந்தன் பாடல்
நற்றமிழின்பம் வாரித்
தேன் எனத் தித்திக்கக் கொட்டும்
தென்மலேயருவி கண்டேன். 2

நண்புளோர் அன்பைப்போல,
நல்லவர் மனமே போலப்
பண்புளோர் பேச்சைப்போலப்
பைந்தமிழ்ச்சுவையைப் போலக்
கண்கவர் கந்தன் கைவேல்
காட்டுநல்லருளேப் போலச்
சண்பகத்தருவி கண்டேன்
சன்ம சாபல்யம் கொண்டேன். 3

நற்றவர் செய்கைபோல,
நால்வர் தீம் பாடல்போலப்
பெற்றவர் அன்பைப்போலப்
பொய்யிலார் இதயம் போலக்
கொற்றவர் மாட்சி போலக்
கோதையார் "பாவை"போலச்
சிற்றருவெழிலும் கண்டேன்
சிந்தையின் துயரம் விண்டேன். 4

கலியினர் துன்பம் வெட்டும்
காளிகைக்கத்திபோல,
வலிமைகொள் வண்ணக்கண்ணன்
வாய் முரல் குழலே போலத்
தலையிலோர் சடைக்காடேந்தும்
தலைவன் கண்ணருளே போலப்
புலிஎனும் பெயர் பூண்டோடும்
பொங்கு வல்லருவி கண்டேன். 5

குழல் மொழி யம்மையாரும்
குற்றாலத்தப்பனாரும்
அழல் தரு வெம்மை நீங்க
அநுதினம் ஆடு மெங்கள்
பழமறைத்தமிழ் மணக்கும்
பசியகுற்றாலக்காட்டில்
அழகெலாம் கொட்டியார்க்கும்
அற்புத அருவி கண்டேன். 6

ஆடுமாமயிலே போன்றும்,
அழகிய கிள்ளை போன்றும்,
பாடுமென் குயிலே போன்றும்,
பட்டுடலன்னம் போன்றும்,
கூடிவாழ் மானே போன்றும்,
குதிக்கும் சேங்கன்று போன்றும்,

ஓடிமாமலையினின்றும்
ஒழுகிடு மருவி கண்டேன். 7

கண்டவர் கண்கள் பூக்கக்
காதினால் அருவியோசைத்
தண்டமிழ் செல்வி செங்கால்
கிண்கிணி நாதம் கேட்டோர்
விண்டிட அறியாதென்றும்
வியப்பினால் திகைத்து நிற்கக்
கொண்டலைக்கீறி மீறிக்
கோமளப்பிறையின் காந்தி
வண்டலை வாரிக்கொட்டும்
வண்டமிழருவி கண்டேன். 8

தொட்டவர் உடல் சிலிர்க்கத்
தொன்மறைப்பொருளே போன்றும்
பட்டவர் பாவமெல்லாம்
பட்டெனத்தீர்ந்து நிற்கக்
கிட்டவே வந்த பேர்கள்
கிளு கிளுத்தின்பமார்க்கக்
கட்டி நற்கரும் பாயோடும்
கண்கவர் அருவி கண்டேன். 9

பால் பொழி அன்னை தானோ?
பரமன் கண்ணருளே தானோ?
தேன்மொழிக்குதலை தானோ?
திலோத்தமை நடனம் தானோ?
மீன்விழிக்கன்னிதானோ?
மீனவன் வில்லே தானோ?
நான்மறைச்செல்வம் தானோ?
நலந்தரு மருவி நீதான். 10

பேரிகை கொட்டி நிற்பாய்,
பேரரசான செல்வம்,
காரிகை மாதர் கூந்தல்
கவின் எலாம் தோன்றநிற்பாய்,
நேரிணை இல்லா நால்வர்
நினைவெலாம் பொழிந்து நிற்பாய்,
பாரிலே புதுமை செய்வாய்
பழந்தமிழ் அருவி நீயே. 11

கொல்லை மென் முல்லை வாசம்
குழந்தை வாய் பாடவைப்பாய்,
அல்லியங்கண்ணி பாதத்
தழகெலாம் சொரிந்து நிற்பாய்,
பல்லெலாங் காட்டியாடும்
பழ மரக்குரங்கின் ஏற்றம்
சொல்லிலே திகழ வைப்பாய்;
சொக்கியே நிற்க வைப்பாய். 12

குறவஞ்சி பாடவைப்பாய்,
குரங்கினைப்புகழ வைப்பாய்,
குரவகம், மல்லி, முல்லை,
கோமளப் பாரிசாதம்
நறவமார் மலர்களெல்லாம்
நகைத்திட நடித்து நிற்பாய்;
விரைவுடன் ஓடியாடி
வினையெலாந் தீர்த்துநிற்பாய். 13

அருமறைத்தமிழின் ஏற்றம்
அகத்தியன் பாடவைப்பாய்,
திருமணச்சந்தனத்தைத்
தென்றலில் கமழவைப்பாய்,

கிரியிலே கைலை நாணக்
கிரிசனைக்கொண்டு நிற்பாய்;
அருமையார் அழகுச் செல்வா,
அந்தமிழ் அருவிவாழி. 14

எண்ணிடும் போதென்னுள்ளே
இன்பமே சுரக்க வைப்பாய்,
புண்ணியப்பேராய் நின்று
புதுமையே சிறக்கவைப்பாய்,
கண்ணியக்கவிகள் எல்லாம்
கண்டுனைப்பாட வைப்பாய்
அண்ணலே அருவிச்செல்வா,
அழகனே வாழி வாழி. 15

குற்றால மாமலைமேல் குதித்துக்குதித்தோடும்
பொற்றாமரையருவி வாழ்க.

வர்க்கலை வளர் வள்ளல்

(21—8—52)

நற்கலை போல் ஒளிர் வதனு,
நளிர் கடலின் குளிர் கரையில்
சக்கரம் கைக்கொண்டுலகில்
ஜனர்த்தனனுய் நிற்பவனே
விற்கரத்தோய் விரிஞ்சன் எனும்
விரிகமலமலர் நாபா,
வர்க்கலையில் வளர் ஜோதி,
வந்தனையோ எந்தனிடம். 1

கற்கண்டுச் செங்கனிவாய்க்
கண்ணன் எனும் தண்ணமுதே,
தர்க்க நெறிக்கெட்டாத
தருமத்தின் அடிவேரே,
அற்புதமே, அற்புதமே.
அய்ய எனை ஆண்டருள
வர்க்கலை ஜனர்த்தனனுய்
வந்தனையோ நந்த குமார்! 2

மர்க்கடமாய் அலைகின்ற
மனப்பேயின் வசப்பட்டுத்
துக்கிக்கும் வேளையிலே
தோன்றியதோர் கொழுஞ்சுடரே!
பிற்பகலில் பெருமானுய்
பேரருளாய், ஆருயிராய்,
வர்க்கலை வாழ் வள்ளல், என
வந்தனையோ அந்தமிலாய்! 3

"சொந்தமிலே, துணையுமிலே,
சொற்கேட்பார் யாருமிலே,
பந்தனமே பட்டுமன்று
பரந்தாமா பரிதவித்தேன்;
சுந்தரனே" என்றவுடன்
ஜோதிமுகமதி காட்டி
வந்தனேயோ எந்தனிடம்
வர்க்கலே வாழ் சற்குருவே! 4

நிற்கின்ற நிலேகாட்டி
நீலநெடுங்கடற் கரையில்
விற்காட்டி, கதைகாட்டி,
வெண் சங்க மதுகாட்டி
பற்கள் சுடர் ஒளிகாட்டி
பத்மகரத்தாசமன—
அற்புதமெய் நிலேகாட்டிச்
சொக்கி விழச்செய்தனேயே! 5

அர்ச்சுனற்கும், விதுரருக்கும்,
அரும் பீஷ்மமுனிவருக்கும்,
பக்தமணி நகுலனுக்கும்,
பண்டைய நாள்வந்தது போல்
வர்க்கலேயில் வாழ் உருவாய்
வலக்கரத்தால் உலகுகுடி
தற்பரனுய் நின்ற நிலே
பிற்பகலில் காட்டினேயோ? 6

"அஞ்சாதே!" எனச்சொல்லி
அருமறைகள் தெரிவறிய

கஞ்சமலர் மணி நாபா,
கடல் நிலேயத் தெய்வதமே,
கொஞ்சு எழிற் கொழுந்தாகக்
கோவிந்தா வந்தனேயோ,
பஞ்சடிமென் பதுமத்தாள்
பள்ளிகொள்ளும் பசும் மார்பா! 7

தலேமாட்டில் உருக்காட்டிப்
பயமோட்டும் பரந்தாமா,
நிலேகாட்டி நெறிகாட்டும்
நெடு நீலமேனியனே,
அலேகாட்டி விளேயாடும்
அருங்கடலில் கரும் குருவே,
விலேகாட்ட முடியாத
வடிவெனக்குக் காட்டினேயோ! 8

சீரங்கம், திருவாங்கூர்,
சீவில்லிப்புத்தூர், மா
சீரங்கப்பட்டிணத்தில்
நீலமயமாய்க்கிடக்கும்
ஏ ரங்க பூபதியே,
எனேயாளத்துயில் நீத்து
"வா ரங்கா" எனுமுன்னே
வந்தனேயோ வர்க்கலேயோய்! 9

நின்ற நெடுந்திருக்கோலம்
நேரிடயான் கண்டதற்பின்
சென்றதையும் வருவதையும்
சிந்தித்து உழல்வேனே?

ஒன்றுமிலை உன்பாத
நேயமின்றி விரும்புவதும் :
அன்றெனை நீ ஆண்டவிதம்
இன்றன்றோ உணர்ந்தேன் யான் ! 10

கஸ்தூரி ரங்கபதே,
காவேரி தலையணையாய்,
கௌஸ்துப மாமணி மார்பா,
கௌசலையின் குலமதலாய்,
கொத்து மணிதிகழ் முடியாய்,
கோவிந்தா, குலபதியே,
இத்தினம் நீ எனையாண்ட
அற்புதத்துக்கிணையேது ! 11

மனாதிகளுக்கெட்டாத
மறைமுடிவே, திருநெடுமால் ;
ஜனாதிபர்கள் ஏவல்புரி
ஜலஜமலர்க் கொடி நாபா,
அனாதிபரம்பரனே, அச்சுதனே
அச்சமொழி
ஜனார்த்தனனே, ஜகந்நாதா
ஜகம் வெறுத்த பக்தை சரண். 12

வர்க்கலை வாழ் வடிவழகே வாஞ்சையுடன்
வந்து நின்ற
சற்குருவே நின்தாள் சரண்.

சபரிமலை மணிகண்டப் பெருமாள்

நீல உடலழகும், நீறணியும் நுதலழகும்,
சூலப்படையழகும், சூழ்புலித்தோலுடையழகும்,
மாலின்வடிவழகும், மகேசுவரன் திருவழகும்,
பாலமதலையிடம் படர்ந்திருக்கக்கண்டேனே. 1

உயர்ந்த வடிவழகும், ஓய்யார நடையழகும்,
நிமிர்ந்த உருவழகும், நின்மலத்திருவழகும்,
சிவந்த உதட்டழகும், செங்கமலக்கண்ணழகும்,
நயந்த நகையழகும் நடனமிடக்கண்டேனே. 2

மேகக்கொடியழகும், மின்வண்ணப்பொன்னழகும்,
தாகம் பலதீர்க்கும் தண்ணருளின் மெல்லழகும்,
ஆகச்சுடரமுத்தும் ஆகாய நிறத்தழகும்,
யோகநிலைப்பாலனிடம் ஒன்றாகக்கண்டேனே. 3

புலிமேல் வருமழகும், புலிச்சேனை ஆள்அழகும்,
வலியுள்ள தோளழகும், வள்ளல் சிரிப்பழகும்,
கைலாயன் வைகுந்தன் கருணைக் கனிபழுத்த
ஒயிலாம் குமாரனிடம் ஒளிவிட யான்கண்டேனே. 4

வெள்ளிமலைநாதன் வீரவனப்பழகும்,
பள்ளிகொள் பரந்தாமன் பச்சைவடிவழகும்,
ஒள்ளிழை உமைரமையின் ஒய்யாரப்பேரழகும்,
பிள்ளை மணிகண்டனிடம் பிறங்கிடயான்
கண்டேனே. 5

மோகினிப் பெண்அழகும், முந்திஉலகளந்த
மோகனன் ஆர்அழகும், முத்திக்குவித்தான
யோகவலிவழகும், போகத்திருவழகும்,
ஏகமாய் ஓரிடத்தில் இலங்கிட நான்கண்டேனே. 6

சபரிமலைவாழும் சற்குணனும் நீதானே?
எவருக்கும் நலம் புரியும் எம்மானும் நீ தானே?
கவலையழி காவற்கடவுளும் நீ தானே?
"எவரப்பா" என்றேனுக் "கையப்பா" என்றானே. 7

கைகொடுத்துக் காப்பாற்றும் கையப்பா சரணய்யா!
ஐயம் விலக்கியருள் ஐயப்பா சரணய்யா!
மையல் விரட்டியழி மணிகண்டா சரணய்யா!
உய்ய வழிகாட்டியருள் உலகப்பா சரணய்யா! 8

சபரிமலை ஐயப்பா, சரணம், சரணமய்யா!
அரிஹரப்பெருமானே அய்யா, சரணமய்யா!
அறிவிலிக்கருள் சுரந்த அரசே சரணமய்யா!
அறிவுக்கு அறிவான அப்பா சரணமய்யா! 9

உமைக்கும் ரமைக்கும் ஒரு ஒளி மைந்தா
சரணமய்யா!
நமையாள் அரி அரர்க்கு நடுப்புதல்வா சரணமய்யா!
தமையன் கணபதியே தம்பி வடிவேலன்
இமையோர் பெருமானே இருவர் பெறும் குமரா! 10

ஐயன் பெருமானே, ஆற்றல் மிகும் பெருமான்,
மெய்யே வடிவான மேகமணிகண்டா,
உய்யும் வழி காட்டி ஒன்றுமறியேனை
அய்யனே ஆட்கொண்டாய் அதற்குண்டோ
கைம்மாறு! 11

தெய்வமிருவர்க்கும் திருமகனாய் வந்தவனே,
மெய்யின் நிலை விளக்க மேதினியில் வந்தவனே,
பையவே வந்தென்னுளப்பதுமம் அமர்ந்தவனே!
ஐயா, எம் ஐயப்பா, அரி அரன் நீ தானப்பா! 12

பழனியழகன்

(28—11—58)

கழனிகள் கதிரே சாயும்,
கதிரெலாம் தலையே சாயும்,
பழமெலாம் கிளையில் சாயும்,
பைங்கிளி பழத்தில் சாயும்,
அழகெலாம் ஒருங்கேசாயும்
அன்பெனுங் கனியேயான
பழனியைக்கண்ட போதே
பாரெலாம் மறந்து நின்றேன். 1

பக்தர்கள் கோடிக்கோடிப்
பாற்குடம் தலையிற்றூக்கிச்
சக்தியின் புதல்வனான சரவணன்
பாதம் காணச்
சித்தமு மகிழ்ந்து தெய்வப்
பழனிமாமலையில் ஏறும்
கிருத்திகைக்கோலம் கண்டேன்,
கிழக்கு, மேற்கற்று நின்றேன். 2

கிழவர்கள் ஓடுவார்கள்,
கிண்கிணிச்சதங்கை நாத
மழலையர் தாவுவார்கள்,
மடப்பிடி, அன்னம் நாண
அழகுறு நடையே கொண்ட
அரிவைமார் விரைவர், ஆங்கே
பழனியின் படிகள் எல்லாம்
பக்தர்கள் தலையேயம்மா. 3

"அரோகரா" என்ற சத்தம்
அண்டமுங் கிடுகிடாய்க்கும்,
அராவணி அழகன் மைந்தன்
அற்புதக்கோலம் காணப்
பராவரும் பக்தர் கூட்டம்
பழனியை மூடி நிற்கும்;
சராசரம் திரண்டு வந்து
சரவணன் மலையில் ஏறும். 4

சரவணப்பொய்கை சூழச்
சதுமுகன் நளினக்கையின்
திறமையே திரண்டு வந்து
திருமலையானாற் போல
மறை புகழ் மகிமைக்கந்தன்
மலை எனும் பழனி கண்டேன்,
குறையெலாம் தவிர்ந்து நின்றேன்,
குளூமையார் உவகை கொண்டேன். 5

செங்கையில் சக்தி வேலும்,
சின்மயச்சிரிப்பும் தோளும்,
மங்கள முகமுந்தாளும்
மனத்தை விட்டகல மாட்டா;
செங்கதிர்ச்செல்வன் வெட்க
ஜகஜ்ஜோதியாக மின்னும்
வெங்கனல் உருவங்கண்டேன்,
வேதனை மறந்து நின்றேன். 6

கோமகன் ஆண்டியாகிக்
குகன் எனுங் குழந்தையாகி
மாவனைத்தளிர் ஆர் மேனி
மறை புகழ் திரு நீருடிக்

காவலுக்காகக்கையில்
கதிர் வேலுந்தண்டுந்தாங்கி
ஆவலும் அன்புஞ்சொட்ட
அய்யனும் நின்ருனுங்கே. 7

பரிமள வெண்ணீருடி,
பால் வண்ண மேனியாக,
நறுமண்ணம் சூழ நிற்கும்
நாயகன் மகனைக்கண்டேன்,
சுருதியின் பொருளாய் நிற்கும்
சுப்பிரமணியன் கண்டேன் ;
இறைமகன் முறுவல் பூத்தான்
என்னையே காணுமம்மா. 8

தங்கமா மயிலின் மீது
தனிச்சுடர் வேலைத்தாங்கி
அங்கயற்கண்ணி பாலன்,
ஆனந்த வேலன், சீலன்,
எங்களோர் பழனியப்பன்,
இளையவன், எழிலார் வேந்தன்
மங்களமாகவந்தான்
மாணிக்கமலையேபோல. 9

புன்னகை வதனம் பூக்கப்
புத்தொளி திக்கில் பூக்கக்
கன்னங்கள் அழகு பூக்கக்
கையிலோர் கதிர் வேல் பூக்க;
மின்னிடை பட்டுப்பூக்க
மிளிர் விழி சோதி பூக்கப்
பொன்னெளி மேனிபூக்கச்
சொன்ன மா மயில் மேல் வந்தான். 10

கனமார்பு கடம்பம் பூக்கக்
கண்கடை கருணை பூக்க,
வனமேனி வனப்புப்பூக்க
வாயிதழ் நிலவு பூக்க,
மனங்கவர் அன்பு பூக்க,
மயிற்சிறை அழகுபூக்கக்
கனமுடன் கண்முன் வந்தான்
கண்ணுதல் பாலன் வேலன். 11

நிலவொளி சுற்றும்பூக்க,
நினைவெலாம் அவனே பூக்க,
மலமழி ஞானம் பூக்க,
மா நிலத்தமைதி பூக்கப்
பலபல வண்ணம் பூக்கப்
பணிமணியணிகள் பூக்கத்
தலமெலாம் சோதி பூக்கச்
சண்முக நாதன் வந்தான். 12

ஆறு மா முகங்கள் பூக்க,
அம்புயப்பாதம் பூக்க,
நீறிடு நெற்றி பூக்க,
நின்மலச்சோதி பூக்க,
ஈராறு தடந்தோள் பூக்க,
இன்பமே எங்கும் பூக்க,
ஏறுமா மயிலின் மீது
ஏறூர்ந்தான் செல்வன் வந்தான். 13

சக்தி வேல் கையில் பூக்கச்
சமர் ஒளி முகத்திற் பூக்கப்
பக்தர்கள் மகிழ்ச்சிப் பூக்கப்
பழனியில் அருளே பூக்க,

முக்தியின் வித்துப்பூக்க,
மோகன முறுவல் பூக்கச்
சத்தமார் தண்டை பூக்கச்
சரவணன் கண்முன் வந்தான். 14

அரன் திரு நெற்றி பூத்து,
அக்கினி கரத்திற்பூத்து,
வரன்றரு கங்கைமங்கை
வண்மகன் ஆகப்பூத்துச்
சரவணப்பொய்கை பூத்துத்
தங்க மா மயில் மேற்பூத்து
அருமறை பூத்த வாயன்
அறுமுகன் ஆடி வந்தான். 15

இமய மால் வரையிற்பூத்து,
இறையவன் நெற்றி பூத்து,
உமை, கங்கை மகனுய்ப்பூத்து,
உம்பர்கள் அன்பிற் பூத்து,
ரமை மகள் காதல் பூத்து,
இரமணியத்தமிழிற் பூத்து
நமையெலாமுடைய செல்வன்
நாயகன் காட்சி தந்தான். 16

சோலை மா மலையிற் பூத்துச்
சுந்தரச்செந்தில் பூத்துக்
கோலமார் தணிகை பூத்துக்
கோமளக்குன்று பூத்து
ஆலவாயருகிலாங்கே
அரும்பரங்கிரியிற் பூத்துச்
சீலமார் பழனி பூத்துத்
திருச்சுவாமி மலையிற் பூத்து ; 17

ஆறு மாபடை வீடென்னும்
அற்புத இடங்கள் பூத்துக்
கூறிடு பக்தர் நெஞ்சே
குடிகொண்டு பூத்த அய்யன்
நீறணி மெய்யன், செய்யன்,
நீலி மா காளி பாலன்
வீறுடன் காட்சி தந்தான்
விந்தையாய்க்கந்தன் கண்முன். 18

தங்க மா மயிலின் மீது
தமிழின்பந்தவழக்கண்டேன்,
மங்களப்பழனி வெற்பில்
மாணிக்கப்பழமே கண்டேன்,
சங்கரி பாலன் என்னும்
சரவணன் கண்முன் கண்டேன்,
திங்களைச்சூடுமய்யன்
திருமகன் அருமை கண்டேன். 19

எங்கள் மெய்த்தெய்வமான
இளையவன் பழனி கண்டேன்,
தங்கமா மேனியானைத்
தங்க மென் மயில் மேற்கண்டேன்,
மங்களச்சுடர் வேற்கையன்,
மணிவண்ணன் தங்கை பாலன்
அங்கு தென் பழனி கண்டேன்
அகிலமெல்லாம் மறந்தேன். 20

வாழி காவேரி

(15—6—53)

தேவர் கோனும் திசை முகனும்
திருவடி மலர் துதிக்க,
பூவில் புனித இலங்கையர் கோன்
பூமலர் மழை சொரிய,
யாவரும் கண்களிக்கப்பரமன்
கண்டுயில் தென்னரங்கப்
பூஞ்சோலை புகுந்து ஓடும்
பொன்னியன்னை வாழி. 1

மயில்கள் அகவக்கிளிகள் கொஞ்ச,
மாம்பழக்குலை குலுங்கக்
குயில்கள் கூவக் கோழி யழைக்க,
குழந்தை மழலை மொழியத்
துயிலும் பரமன் தலையின் பக்கம்
"தத்திமி" என ஆடும்
சயில சஹ்ய மலையின் புதல்வி
ஜலமகளே வாழி. 2

பூக்கள் மலரப் பொழுது புலரப்,
புட்கள் கீதம் பாடத்
தேக்கலரிய திரையெனும் கரம்
இருகரை புறம் மருவத்
தூக்கம் தூங்கிக்காக்கும் துய்யன்
தொல்லரங்கப் பதியில்
காக்க ஓடிவரும் எம்மன்னை
காவேரி நிதம் வாழி. 3

கங்கை மகளைப்பழித்து நிற்பாய்
பொங்கும் புனித நீரால் ;
சங்கநாதம் செய்து சிந்துவும்
சிந்தை நாணச்செய்வாய்,
மங்கை கிருஷ்ணை, வையை, பொருநை
மகிழ்ந்து போற்ற நடப்பாய் :
எங்கள் குலதெய்வதமே
இனிய பொன்னி வாழி. 4

தண்ணென்ற கைகளினால்
தாபம் ஒழித்து நிற்பாய்,
வண்ண நீரின் வண்டல் வளத்தில்
வசுதை வாழ வருவாய்,
அண்ணல் அந்த அரங்கநாதன்
அன்பைப்போலப் பொழிவாய்,
கண்மணியே, கடல் மனையே
காவேரி வாழி. 5

திருச்சி, தஞ்சை வளம்பெருகச்
சிரித்துக்குதித்து வருவாய்,
பரிச்சய மில்லாதவர்க்கும்
பரகதி நீ தருவாய் ;
தரிச்ச தண்டை சிலம்பு கொஞ்ச
தலைநிமிர்ந்து வருவாய்,
திருப்பராய்த்துறை தவழும்
தெய்வப்பொன்னி வாழி. 6

மைசூரில் மலையினின்று
“ மடமட ”வெனக்குதிப்பாய்,
நயிச்சியமாய்த் தரையைத்தொட்டு
நடனமிட்டு நடப்பாய் ;

வசியம் செய்ய அணையெடுத்தால்
வரம்பு மீறிக்குதிப்பாய் :
" மசிவதில்லை மனிதருக்"கென
மடக்கும் பொன்னி வாழி. 7

குடகுமலையில் நடனமாடிக்
குறத்திபோலே வருவாய்,
அடக்கமுடியா அன்புடனே
அரங்கப்பட்டணம் நுழைவாய் ;
" தடதட "வென ஓடிப்பாய்ந்து
தரைமகளை அணைப்பாய்
கடலில் கலக்கக்கடுகி ஓடும்
காவேரிமகள் வாழி. 8

மனிதகுலத்துக்குயிரளிக்கும்
மணிநதியே வாழி,
இனிய நீரால் எம்மைப்புரக்கும்
இறைவிதலைவிவாழி,
புனித அரங்கன் தலையணையாய்,
பொன்னிநதியே வாழி,
கனிகள், பயிர்கள், கதலிசெழிக்கும்
காவேரியே வாழி. 9

கண்டேன் கண்ணம்பாடி

(19—7—52)

மதுசொரி புதுமலர் விரிபொழில் தவழ,
புது ஒளிவிரிசுடர் கதிர் எழில் பரவ
நதிவளர் ஜல அலை நகைமுகம் திகழ,
மதிபொழி விரிநில வொளி இடை மகிழ,
"அதிசயம் அதிசயம்" என ஜகம் புகழ; 1

இருபுறம் மருவிய அணைஎழில்கொஞ்ச,
பொறிவிரிமின்சுடர் பொன்ஒளிமிஞ்ச,
விரைமலர்மணம்முனம் நந்தனம் கெஞ்ச,
விரைவினில் பொழிஜலகதி உலகு அஞ்ச, 2

வருபவர் அனைவரும் கண்டுஉளம் மகிழ,
"கிறு கிறு"வெனச்சுழல் மின்பொறி திகழ,
"சர சர"வென அணைச்சங்கிலி புரள,
ஒருதரம் எழில் நலம் கண்டவர் மருள; 3

பலவித நிறக்கதிர் பகல் ஒளி வீச,
"சல சல"வென அலைசாகரம் வீச,
பலப்பலமனிதரும் பலபுகழ் பேச.
"இலைஇதற்கிணை"யென இந்திரன் கூச 4

"திமித்திமிதிமி"என ஜலம் நடம் புரிய,
அமுதினும் இனிதென அமரர்கள் நிறைய,
அமரரின் நந்தன வனத்திமிர் குறைய,
இமையவர் மலைவுற பலசுடர் எரிய, 5

ஒளியினில் ஜலநிறம் பலவணம் காட்ட
அளிமுரல் மலர், செடி, அற்புதம் தீட்ட,
களிநிறை மகளிர் மென்கரம் என நீட்ட,
குளிர் புனல், ஒளி, ஒலி ஓவியம் தீட்ட, 6

ஜலத்துளி தாளமிட ஒளிக்கதிர் ஆட,
பல ஒளி நடமிட புனல்தாளம் போட,
"கலகல" என ஒலி மனிதர்கள் நாட,
அலை எழில்தனில் அனைவரின் நினைவோட ; 7

வளைசர வில்லென வளைபொறி ஒருபால்,
குளிரிளம் கொடி எனக்குழைபொறி ஒருபால்,
தளர்நடை மகவென வளர் பொறி ஒருபால்,
இளமலர்க் கொத்தெனத் திகழ் பொறி ஒருபால், 8

அளவிடலரிய விளக்குகள் மின்ன,
"பளபள"வென அதில் ஜலநிறம் துன்ன,
"குளுகுளு"வென இளம் மாருதம் மன்ன,
உளம் களிகொளும் வகை பொழில் எழில்
மன்ன : 9

கண்ணன் எனும் கடவுளின் வடிவிதுவோ ?
மண்ணினில் வந்துதி வைகுந்தம் இதுவோ ?
அண்ணலின் கைலையங்கிரி எழில் இதுவோ ?
எண்ணவும் அரிய பிருந்தாவனம்
இதுவோ ? 10

அமராவதியுடன் அழகா புரியோ ?
" கமகம " மணம் நிறை கந்தர்வபுரியோ ?
புவியினில் வழுவறு ஒரு போகவதியோ ?
எதுவெனப் புகல்வது இதை எனமயக்கும். 11

கண்ணம்பாடியைக் கண்டேன், கண்டேன் !
விண்ணவர் நந்நகர் மண்ணினில் கண்டேன்!
கண்ணன் பிருந்தாவனம் மைசூர் கண்டேன் ;
எண்ணத்தில் தித்திக்கும்
இன்பமுதுண்டேன் 12

ஜோக் - நீர் வீழ்ச்சி

(22—4—59)

ஆஜா நுபாகுவாகி,
அழகியவடிவம் பெற்று,
வாசாலத்தனம் மிகுந்து,
வளமையுந்திறனுங்கொண்டு,
தேஜோபிராமனுகத்
தேசமே ஆளும் வெற்றி
“ராஜா”வாய் “ஜோக்” நீர் வீழ்ச்சி
இரமணிய நடையே போடும். 1

ஆணிப்பொன், முத்து வேய்ந்து,
அழகுடன் இளமை பொங்க,
காண்போர்கள் மனங்கவர்ந்து,
கருவமும், மிடுக்கும் துள்ள,
நாணமும், நளினப்பண்பும்
நடையிலே துள்ளி மின்ன,
“ராணி”யாம் மடந்தை வந்தாள்
இரஞ்சகச்சிலம்பு கொஞ்ச. 2

நோக்கெட்டா மலை பிளந்து,
நூதன வடிவம் கொண்டு,
பூக்கொட்டும் குடலை போலப்
பொலிவுடன் விசையுங்கொண்டு
வாக்கெட்டா வனப்புக்கொஞ்ச,
வாய் திறந்தாரும் நோக்க,
“ராக்கெட்”டாம் மல்லன் வந்தான்
இராம பாணத்தைப்போல. 3

அர்ச்சனைக்குரியதாகி,
ஆங்காரம், அகந்தை கொண்டு,
சற்சனர் நடுநடுங்கச்
சங்கரன் சடையுருட்டும்
விற்புருவத்துக்கங்கை
விண்ணின்று கொட்டுமா போல்
கர்ச்சித்து வந்ததம்மா,
“கத்து மா” அருவி கண் முன். 4

“கர்ச்சிப்போன்” “ககனம் பாய்வோன்”.
“காரிகை” “அரசன்” என்று
உச்சிதப்பெயர்கள் கொண்டு,
உயர் மைசூர் மலையினின்றும்
கச்சிதமாய்க்கைகொட்டும்
கண்கவர் அருவி கண்டோர்
விக்கித்து நிற்பாரம்மா,
வியப்பினால் தனை மறந்து. 5

கரனையே கொன்றஇராமன்
கைச்சரம் ஒன்றால் பூவில்
“சராவதி” எனப்பிறந்து
“சலசலத்”தோடும் ஆறும்,
அருவியும், மலை வனப்பும்,
அமைதி சூழ் நிலையுங் கண்டோர்
பிறவியின் பயனை கண்டார்,
பிரமன் கைவண்ணம் கண்டார். 6

தொள்ளாயிரம் அடிக்கும் மேலே
துங்கமார் மலையினின்று
பள்ளமே நோக்கிப்பாயும்
பாவன “ஜோக்”நீர் வீழ்ச்சி

உள்ளமே கொள்ளை கொள்ளும்,
உயரத்தால் மனதையள்ளும்,
வெள்ளமும் தெய்வமாகி
வெள்ளிப்பூ சொரியுதாங்கே. 7

பாலாறோ? பணிமென்பூவோ?
பாற்கடல் உருவோ? பாரில்
நாலாக உருவம் பெற்ற
நான்முகன் மனையாள் தானோ?
பால் நிலாக்கடலோ? அன்றிப்
பரசிவன் முறுவல் தானோ?
நூலிலே நுவலப்போமோ?
நுண்ணிய அருவி வண்ணம்? 8

முப்பெரும் பாறையின் கீழ்
மூண்டெழுந்தோடிப் பாயும்
அப்பெரும் அருவி நான்கும்
ஆகாய வில்லின் வண்ணம்
செப்பிடுவித்தை போலச்
செய் மாயம் என்ன சொல்வேன்?
ஒப்பிலை, உயர்வுமில்லை,
உலகிலே "ஜோக்" உனக்கு. 9

ஏழேழ் மா வண்ணம் காட்டும்
இந்திர வில்லின் தோற்றம்
ஆழாழி வண்ணன் கையில்
அரும் வில்போல் வளைந்து மின்னும்,
ஊழூழி தோறும் மாறு
'துன்னடி வானவில்லே.
தோழி, நல் வான வில்லும்
தோற்றதுன் வில்லுக்காங்கே. 10

மழை பெய்தால் வானங்காட்டும்
மணி இந்திர வில்லுமாங்கே
அழகுடன் தோன்றினலும்
அக்கணம் மறைந்து போகும்.
தழை மழையருவியே, உன்
தாளடி தோன்றும் வில்லோ
அழகி நீ வாழும் மட்டும்
அவனியில் மிளிருமம்மா. 11

பாக்கியம் பெற்ற பேர்கள்
பார்ப்பார்கள் உன்னை வந்து,
பூக்கரம் பொழியும் தாயே,
புண்ணியம் மிகுந்த மாயே,
"ஜோக்"எனும் அருவி நீயே,
சுந்தர வண்ணத்தோயே,
பாக்கியச்செல்வி நீயே,
பாரதம் பெற்ற சேயே. 12

"ஜெர்சப்பா" வீழ்ச்சி என்பார்,
"ஜோக்"எனும் அருவி என்பார்,
தரிசனம் கண்டபேர்கள்
தன்மயமாகி நிற்பார்,
அருமையாம் பெருமையாலே
அருவி என் பெயர் பெற்ருயோ?
அருமையாம் பரதநாட்டு
ஆருயிர்ச்செல்வி நீயே? 13

தோப்புகள், துரவு சூழ,
சுந்தரச்சோலை மின்ன,
தேக்கமா மரங்கள் ஓங்க,
தென்னை, மா, வாழை சூழ,

கோப்பை போல் பூக்கள்பூக்கும்
குளிர் ஒளிர் கன்னடத்து
ஹெப்ளியின் எழிலார் பக்கம்
ஆர்ப்பரி அருவி வாழி. 14

காடெலாம் தேக்கு,
கண்ட இடமெலாம் பசுமை, பார்க்கும்
வீடெலாம் வளமை, வாய்ந்த
வயலெலாம் செழுமை, மின்னும்
ஏடெலாம் கவிதை, எங்கும்
எழில் எலாம் கொள்ளை போகும்
நாடறி கன்னட தேசம்
நடனம் செய் அருவி வாழ்க. 15

மைசூர் என் மகிட நாட்டில்,
மங்களக்கன்னட தேசத்
தெய்வீகச்சோதி வீசும்
தேம்பொழி மலையின் மீது
ஜொர்சப்பா பெயர் கொண்டோடும்
தேன் சுவையருவியே உன்
வரிசைகொள் வனப்பு, வண்ணம்
வாழிய, வாழி, வாழி. 16

பண்டரிபுரவரதன்

(10—3—59)

தொண்டர்கள் சூழ்ந்திடத்தொல்வினை மாய்ந்திடத்
துளப மணம் எங்கும் கமழ்ந்திடவே,
அண்டர்கள் கும்பிட, அன்பர்கள் மகிழ்ந்திட,
அன்னை ருக்மிணி உடன் நின்றிடவே,
பண்டையப்பெருமையும், பாரதத்தருமையும்
பாரெங்கும் பொன்னொளி வீசிடவே,
பண்டரிபுரந்தனில் பக்தனுக்கருள்செயக்
கொண்டல் நிறச்சுடர் நின்றிடுமே. 1

இடுப்பினில் இருகரம் இணைந்து விளங்கிட
இன்முகம் புன்னகை காட்டிடவே,
மடக்கொடி ருக்மிணி பொன்ஒளி வீசிட,
மாமறைச்சோதி ஒளி விடவே,
தடப்பெருங்கண்ஒளி தண்ணருள் பொழிந்திடத்
தாமரைப்பாதங்கள் வருந்திடவே,
திடத்துடன் செங்கல்லில் அன்பனுக்காகவே
சின்மயப்பேரொளி நின்றிடுமே. 2

காண்பவர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தெழில்
கருணை வெள்ளம் பொங்கிடவே,
பூண்டிடு பட்டுடை, பொன்மணியணி பணி
பூதலம் சோதி நிரைந்திடவே,
மாண்டகு மனைவியும் மறுபுறம் நின்றிட,
மாநிலங்கண்டு வணங்கிடவே,
ஆண்டகை அச்சுதன் ஆதிபராபரன்,
அருமறைப்பொருள் கல்லில் நின்றிடுமே. 3

புண்டரிகன் எனும் பக்த சிகாமணி
“பொறு, கல்லில் இரு” எனச்சொல்லிடவே,
அண்டர்கள் தாயகம், அருந்திருநாயகன்
அன்றவன் சொற்படி நடந்திடவே,
வண்டமர் பூங்குழல் உருக்மிணி தன்னுடன்
வானகம், வையகம் பிரமித்திடவே
பண்டரி புரந்தனில் பீம நதிக்கரை
பாங்குடன் பசுமணி நின்றிடுமே. 4

மீரா கும்பிட, மேலவர் வாழ்த்திட,
மின்னொளி மேகம் கொஞ்சிடவே,
பாரினில் புரந்தர தாசர் பணிந்திட,
பக்தர்கள் பஜனை செய்திடவே,
ஆராவமுதனும் அழகியும் ஆங்கொரு
அணிமணிப்பீமா நதிக்கரையில்
பேராயிரமுடைப்பெம்மான், எம்மனை
பேரருளாளர்கள் நின்றிடுவார். 5

பீமா நதிக்கரை, பேசரும்பழமறைப்
பெம்மான், எம்மான், பேர் பெரிய
கோமான், சீமான், கோமளன், சாமளன்,
கொண்டல் வணத்தொரு கோபாலன்,
பாமாமணியொரு பொன்மணி ருக்மிணி
பாற்கடலமுதம் தன்னுடனே
தாமாய் வந்தொரு தாசன் இடும் கல்லில்
தயையுடன் அருள் செய நின்றிடுவான். 6

செங்கல்லில் நின்றிடும் சீதரன், மாதவன்,
செங்கோலோச்சிடு மாமாயன்,
தங்கமணிக்கொடி தன்மனை தன்னுடன்
தாங்கித்திருவரை கைஇரண்டும்,

அங்கு கம்பீரமும், அழகொடு ஆண்மையும்,
அருளும், திருவும்சோதிவிட,
மங்களமாயவன் நின்றிடுந்தன்மையை
மண்டலங்கண்டு வணங்கிடுமே. 7

முத்தொடுபவளம், பச்சை, இரத்தினம்,
மோகன நீலம் சோதிவிடும்
சுத்தமணிமயமாலையும், துளசியும்,
கௌத்துப மணியும் போட்டியிட,
கொத்துக்கிளர் முடிக்கோவிந்தராயன்
கோலப்பண்டரி புரந்தன்னில்
அத்தன் நின்றிடும் அழகைக்கண்டவர்
இத்தரை மீதினில் முத்தர்களே. 8

பூனு நகரில் இயற்கை மாயை

(21—7—52)

புண்ணியத்தாயார் பூமி மகள்,
கண்ணியத்தந்தை ககனபிரான்,
எண்ணரும் உயிர்கள் இவர்மக்கள்,
புண்ணிய நகரின் புது எழில் பார். 1

வாரியடிப்பது வானமழை,
பூரித்தெழுவன புதுமலர்கள்,
நேரில் புரள்வது நதி மூலா,
பார்மகள் பொங்குதல் பயிர் பச்சை. 2

நீருண்டெழுவது நெடுமேகம்,
"சோறுண்டெ"ன்பது சோனை மழை,
பார் கண்டெழுவது படர்வானம்,
ஊரைச்சூழ்வன உயர் மலைகள். 3

"குளுகுளு" என்பது குளிர் காற்று,
"பளபள" என்பது பசும் நாற்று,
"சளசள" என்பது நதி வெள்ளம்,
"தளதள" என்பன தளிர், கொடிகள். 4

பூத்துச்சொரிவன பூஞ்செடிகள்,
பார்த்து மயங்குவர் பட்டணத்தார்;
நேற்று வரட்சி, இன்று வளம்,
பார்த்து உணரலாம் உலக நிலை. 5

மாறுதல், மாறுதல் மண்ணுக்கும்,
ஆறுதல் உண்டுவிண்ணுக்கும்,
சோருதல் உண்டு இயற்கைக்கும்
யாரிதை மாற்ற வல்லோம் உலகில். 6

வரட்சி புரட்சியை விளைவிக்கும்,
புரட்சி மாறுதற்கறிகுறியாம்,
இயற்கையின் தொன்முறை இதுவன்றோ,
மயக்கும் மாயையின் வினையன்றோ? 7

கல்யாணுக்கும் பூனுவுக்கும் இடையே இயற்கை எழில்

(8—7—49)

வெள்ளிக்கோடு போல் துய்ய நீரருவி
துள்ளித்துள்ளிப்பாயும்,
வெள்ளைமுத்து மணியன்ன நீர்த்திவலை
மெல்லமெல்லத்தோயும்,
நல்ல நீல நிற வல்ல மேகம் மழை
வில்லைப் போலச்சாயும்,
சொல்லவும்மரிய செல்வமேற்குத் திசைத்
தொல்லைக் கிரித்தொடர் வளமே. 1

இருண்டமேகம் உயர் சுருண்ட கூந்தலே,
இசைந்த கானம் இடையே,
மருண்டு மேலிருந்து புரண்டு ஓடும் நதி
மங்கை கழுத்தின் தொடையே,
திரண்டு தீரமாய் நிமிர்ந்து நிற்கும் மலை
தெய்வ நாரி வடிவே,
பரந்த பாரதத்தின் சிறந்த மேற்கு மலைத்
தொடரின் அழகுக்கிலை முடிவே. 2

பார்க்குமிடமெலாம் பயிரின் பச்சொளி
பச்சைப்பட்டுடையின் எழிலே,
நோக்கும் மார்க்கமெங்கும் பூத்து நிற்கும் மலர்
முல்லைமணி முறுவல், பொழிலே
ஆர்த்தெழுந்தது போல் அடிக்கும் வாசனை
அன்னை அலகபர மணமே,
போர்த்த நீல உடை போல நிற்கும் வான்,
பரத மேற்கு கிரி வனமே. 3

இனியமாருதம் இசை இசைக்கப்பயிர்
பரதநாட்டியம் ஆடும் ;
கனியும், கானமும், கவினும் கொண்டகிரி
முடியை மேகம் மூடும் ;
முனிவர் மோனமும் முத்தியர்த்தமும்
முடிவிலாமலே தேடும்
தனிமை நாடிடும் துறவிமார்களா
தத்வம் அறிய இங்கு கூடும். 4

"வாரும் வாரும்" என வரவு கூறல் போல்
வானம் மதிமுகம் காட்டும் ;
பாரும் எம்முலக வயிரப்பான்மை எனத்
தாரகைகள் கரம் நீட்டும் ;
"நீரும் பிரகிருதியும் நிசத்தில் ஒன்றென"
நித்தமும் நினைவு ஊட்டும்
சீருயர்ந்த நம் செல்வமாமலைச்
சிறப்பும் சொல்லத்தரமாமோ ? 5

காட்டாற்றின் ஆறு

(24—4—53)

உயர்ந்த மலையிடைப்பிறந்து தாழ்ந்தாய்,
உரம்கொள் கற்களை உளுக்கத்தேய்த்தாய்,
அயர்ந்த துரும்பினை அலக்கழித்தாய்,
அழகிய பூக்களை அழுகச்செய்தாய்,
நிமிர்ந்த மரங்களை வேருடன் சாய்த்தாய்,
நின்றதோர் செடிகொடி நிலத்திடைச்
சாய்த்தாய்
பயந்த பறவைகள் கீச்சிடப்பாய்ந்தாய்,
பக்கமிருப்பவர் திடுக்கிட நடந்தாய்; 1

உறுதிகொள் பாறையை உருட்டி உவந்தாய்,
உன்னிடம் வந்தவர் தன்னையடித்தாய்,
சிறுசிறு கற்களைச் சீறியடித்தாய்,
செஞ்சிறுபுட்களைச் சிதறச்செய்தாய்,
மருட்டி, உருட்டி, விரட்டியே வந்தாய்,
"மட மட" வென மலைமீது நடந்தாய்,
இருகரையுடைத்து இரைச்சலுமிட்டாய்,
எவரையும் பக்கத்தில் அண்டவும் ஓட்டாய். 2

பாசிபிடித்த உன்பற்களைக்காட்டிப்
பயன்தரு அருவியை, ஓடையைச்சுனையை,
ஏசிச்சிரித்துடன் ஏளனம்செய்தாய்;
இருகைகொட்டியே எக்களித்தாய்;
தூசிபடர்ந்தனை, குளமே, வாவீ,
"தூ, தூத்தூ" வென நீ நர்த்தனம் செய்தாய்;
ஓசைஒலித்திட ஓடி நடந்தாய்,
'"ஒருவரும் இணையிலை" என இறுமாந்தாய். 3

பெற்றவன் மேகத்தை " பேதை "
என் றிகழ்ந்தாய்,
பேரன்னை மலைதனைக் கைவிட்டு வந்தாய்,
உற்றநன் நதிகளை உபேட்சை செய்தாய்,
உடற்பிறப்பாகிய ஊற்றினைப்பழித்தாய்,
சுற்றமாம் சுவைதருகிணறினை நகைத்தாய்,
சூழ்புவிகடலையும் " சுவையிலோன் " என்ருய்,
மற்றவர்யாரையும் துச்சமென்றெதுக்கி
மார்தட்டி ஓடினை " மடமட " வென நீ. 4

வெள்ளச் செருக்கால், வெற்றியின் முறுக்கால்,
வேதனை செய்தனை தீதிலர் உள்ளம் ;
பள்ளத்தை நோக்கிப்பாய்ந்திடுநீரால்
பக்கமிருந்தோர்க்குத் துக்கமளித்தாய் ;
அள்ளக்குறையா அன்பெனும் செல்வம்
அதனைவிடுத்தனை ; மதம்கைக்கொண்டனை ;
துள்ளிப்பாய்ந்தனை தூய்மை மறந்தாய் ;
துன்பமும் இன்பமும் துணை எனத்தேருய். 5

புதுப்பணம் பெற்ருய், பொங்கிவழிந்தாய்,
புனல்பெற்றபெருமையில் பூமியை இகழ்ந்தாய்,
புதுப்புனல்சுழித்திடப் புத்திமயங்கிப்
போதை கொண்டாடினை தலைக்கிறுக்காட்டம் ;
சதிசெயும் வஞ்சகர், குண்டர்கள், கோளர்,
தன்மைகொண்டாடினை தலைக்கிறுக்காட்டம் ;
இதுவோஉன்கதி, ஏகாட்டாறே,
இறுதியில் கண்டனை என்னவிளம்பாய் ? 6

காலம் சுழன்றது ; கதிரவன்வெகுண்டான் ;
கோடையும்வந்தது ; கொடும்வெயில்தீய்த்தது ;
ஞாலக்கதிரவன் நன்னீர்குடித்தான் ;
நன்குவரண்டனை, நாணமிலாதாய் ;
மூலைக்கொன்றாய் நின்றன கற்கள் ;
முறுவல் பூத்தன முதுபெரும் பாறைகள் ;
காலைச்சுட்டன கருங்கற்பொடிகள் ;
கண்டுமகிழ்ந்தன கருமணல் துகள்கள் : 7

பாசி உலர்ந்தது, பார்த்தன புட்கள் ;
பள்ளம் வெடித்தது, பாறை சிரித்தது ;
வீசின கானல், வெட்கினை உள்ளம் ;
வெதும்பியதுன்னுடல் வேதனைப்பட்டாய்:
தூசுறுகுளம் உனைத்துக்கம் வினாவ,
துல்லிய அருவிகள் மென்னடை போட,
ஏசறுகிணறுகள் எழில் முகம் காட்ட,
ஈனமில் ஊற்றுக்கள் இன் நீர்சுரக்க, 8

சுனைகள் சுழிக்க, ஆறுகள் கொழிக்க
சுந்தரக்குட்டைகள் மந்தநகைசெய,
நனையும் ஈரம் குறையா நதிகள்,
வினவிட நின்நிலை, வெட்கமுறுத்த,
"கனவிலும் உனை இனி, கருதேன்" என்று
கருணை வரண்ட மேகமொளிக்க,
மனமது மாழ்கினை மதியில்லாயே !
மானமிழந்தனை, மாட்சிகுறைந்தாய். 9

புல்லியர்புன் கதிபெற்றனை என்னே ?
புனலும் அவர் நிதி நிலையை யடைந்தது ;
வல்லமை பெற்று வாழ்ந்த சமயம்
எள்ளினை எளியவர் எளிமையைக்கண்டு:
“ இல்லை ” எனாத இயல்பினை உடையோர்,
இழிநிலையடைவதும் இல்லை, இல்லை.
செல்வம் கண்டு செருக்கு அடைந்தோர்
சிறப்புடன் வாழ்வதும் நிலைப்பதும் இல்லை. 10

உயர்ந்த குலத்தில் பிறவி எடுத்தும்
உன்செயலாலே உலகினில் தாழ்ந்தாய்;
பயந்தவர், அடைந்தவர், அடக்கமுடையோர்,
பண்புமிகுந்தோர், பதட்டமில்லாரை,
நயந்தனை அல நீ, நடுங்கிடச்செய்தாய்.
நதிஎனும் பெயரையும் நலத்தையுமிழந்தாய்.
சயம் பெறக்கருதினாய், தருக்கி நடந்தாய்:
வழுக்கி விழுந்தாய், வரண்டு உலர்ந்தாய். 11

பஞ்சவடி

(8—7—49)

பஞ்சவடி, பஞ்சவடி, பச்சைவண்ணன் குடிலே,
கொஞ்சமலநெஞ்சமதில் கொண்டிருந்த தாகம்;
அஞ்சு உயர் ஆலமரம் கொஞ்சு குடில் காண
அஞ்சிறிய வயது முதல் ஆசை மிகவாச்சு. 1

சீதையுடன் இராகவனும், சிறிய இளங்கோவும்,
பாதகங்கள் நாசமுறப்பாதம் வைத்த பூமி;
மாதவளும், மாதவனும் தவம் செய்த தேசம்,
ஈதலது சுவர்க்கமிலை என்றெண்ணி உவந்தேன். 2

தியாகமணி இராகவனின் தங்குமிடம் காண
யோகியரும், போகியரும் பேணும் குடில் காண,
ஆகமமும் ஆரணமும் அன்றருளும் இர்ாமன்
லாகவமாய் லட்சுமியுடன் அறம் வளர்த்த பூமி. 3

சூர்ப்பனகை மூக்கரிந்த சூரமணி நாடு,
ஆர்ப்பரிக்குமந்நியரை யழித்த உயர் காடு,
சீர்ப்பதமளிக்குமுயர் சீராமன் வாசம்
யார்க்குமிது காண்பரிது என்று இறுமாந்தேன். 4

ஏமாந்தேன், ஏமாந்தேன், ஏபஞ்சவடியே,
பூமான்றன் பொன்னடியைத்தாங்கி நின்ற படியே,
தாமோதரன், திருவும் தவம் பயின்ற நிலமே,
நாமமது பஞ்சவடி நாம்காண்பதென்ன? 5

இராமபிரான் வசித்த உயர் ரஞ்சக மேதினியே,
சாம முதல் நால் வேதம் சஞ்சரித்த இடமே,
சியாமளனும் சானகியும் தான்புகழ்ந்த நிலமே,
நாமமது பஞ்சவடி, நாரணனும் எங்கே? 6

அஞ்சு மரம் ஓர் புறத்தில் எஞ்சியிருப்பது தான்
தஞ்சமுன்னர் தானளித்த கொஞ்சு பஞ்சவடியோ?
கஞ்சமலர்க்கண்ணனடி கண்டுவந்ததேசம்
நஞ்சமென நாற்றத்தின் நடு அழியலாச்சு. 7

நாலுபுறம் நாகரிக நாற்றமும் வீச,
சீலம், பண்பு ஓடிவிட, மக்கள் பலபேச,
ஆலமரம் அஞ்சு, அவையும் அதிகம் பட்டாச்சு,
ஞாலம் புகழ் பஞ்சவடி என்பதுவும் இதுவோ? 8

இராமனுடை நன்நினைவை யாரும் மறந்தாரோ?
கோமகளின் கோலகுணம் குறிப்புமறந்தாரோ?
நாமகளும், பாமகளும், நடனம் செய்தபூமி,
நாம் பார்க்கும் பஞ்சவடியல்ல, இதுவல்ல. 9

பஞ்சடிமென் பாவைமணி, பார்மகளின் புதல்வி,
கொஞ்சியடி வைத்தஇடம் பஞ்சவடி என்பார்,
அஞ்சுமட, அஞ்சும் என் நெஞ்சம் அஞ்சிடுமால்,
பஞ்சவடிநின் நிலைமை பார்க்க என் உள்ளம். 10

இலக்குமணன் இலட்சியமும், ராமன் இன்னருளும்,
இலக்குமியின் குண எழிலும் இக்கணத்தில்எங்கே?
பக்கணமும், பசி, பிணியும், பல சரக்குக்கடையும்,
கொக்கரிக்கும் சிறு நகரோ கொஞ்சு பஞ்ச வடியே? 11

ஆண்மை, அருள், ஆனந்தம், அமைதியஞ்சாமை,
கேண்மை, குணம், ஞானம், எழில், கேள்வி,
தவம் எங்கே?
சாண் வயிறு தான் வளர்க்கத்தாளமிடும் மனிதர்
நாள்முழுதும் கதறுவதோ நல்ல பஞ்சவடியே? 12

இட்டமுடனிருஞ்செல்வம் இளையவனுக்கீந்து,
கட்டமுறு மானிடரைக்கண்ணிமை போற் காத்த
சிட்டனுயர் சீராமன் செல்வப்பஞ்சவடியில்
குட்டமுடன் குறையுடலர் குமுறுவதும்
என்னே? 13

பாரதத்தின் தவப்புதல்வர் பஞ்சவடியதனில்
கோரக்குட்டநோய்ப்பேயால் குறைந்தழியலாமோ?
யாருமிலையோ உண்மை நிலை இதனைக்காண?
சீருயரும் பஞ்சவடி யார் காப்பதுன்னை? 14

கோதாவிரி துதி

(4—11—49) "மதுவன சாரிணி" மெட்டு

சதுமுகக்கிரிக் கொடுமுடியிடைக் குதிகொளும்
கமனியத் தெய்விகப் பெருநிதியே,
அடியிணை தொழுபவர் அகமலமறவருள்
அற்புதநாயகி, அம்பிகையே,
துடிஇடைப்பிடிநடைச் சனகி நீராடிய
சுந்தரத்துய்ய மகா நதியே,
ஜய கோதாவிரி, காவிரி சோதரி,
பூவிரி பொற்கொடி கதி தாராய். 1

"கல கல" என ஒலி "சல சல" கிண்கிணி
இரமணியப் பதமலர்ப் பூங்கோதாய்,
அலேஒலி நகைமுக அழகிய வடிவுடை
அமரகுமரி நதிக்கன்னிகையே,
உலகினில் ஒருவரும் உறுதுணே இலே, இனி
உன்னரும்பொன்னடி என் புகலே,
ஜய கோதாவிரி, காவிரி சோதரி,
பூவிரி பூங்கொடி கதிதாராய். 2

பெருமிறைத்தசரதன் திருமகன் இருவரும்
உரிமை கொண்டாடிய உத்தமியே,
கருவிழிக்கருங்குழல் குணமணி சானகி
கொஞ்சிய ரஞ்சித நர்த்தகியே,
அறிவினில் உயர் குருகோதமன் பசுவதைப்
பாதகம் நீக்கிய வித்தகியே,
ஜய கோதாவிரி, காவிரி சோதரி,
பாரத நாயகி கதி தாராய். 3

மேற்றிசை நோக்கிய மாமலை மேலுதி
மங்கள தீப மணிச்சுடரே,
நாற்றிசை போற்றிடு நாயகன் நான்முகன்
நாயகியுடன் வளர் நற்றிடரே,
காற்றினில் தூற்றிடு மணமலர்த்துகள் படர்
தண்ணெனும் புண்ணியப்பொற்கதிரே,
ஜயகோதாவிரி, காவிரி சோதரி,
பூவிரி மென்கொடி, கதி தாராய். 4

நாசிகை மா நகர் தூசியழித்திடும்
நன்னதியன்னை, நடம்புரியும்
வாசனைப்பொன்மலர் வாரியடித்திடு
பாசவிமோசனி, பத்தினியே,
ஆசியுடன்னருள் ஆனந்தமே பொழி
அம்பிகை, ஆதிபரம்பரையே,
ஜய கோதாவிரி, காவிரி சோதரி,
பூவிரி பைங்கொடி கதிதாராய். 5

பாரத மக்களின் பாவமொழித்திடு
பாலகி, பயிரளி பண்டிதையே,
வீர விசாரதை, வேகமகா நதி,
உயிரளி புதுஔி முகமதியே,
"ஈரமிலா முனி என்னைத்தொடேல்" எனச்
சீறியொளிந்திடு மங்களையே,
ஜயகோதாவிரி, காவிரி சோதரி,
பூவிரி பைங்குழல், கதிதாராய். 6

காவிரிக்காரிகை, கன்னிடபவானி,
கனங்குழைப்பெண்ணைத் திருவைகை,
தாமிரவருணி, மகாநதி, தப்தி,
சுவர்ண முகீ, கருங்கிருஷ்ணையுடன்

நாமுடைத்திராவிட நாடுசெழித்திட
ஓடும் நிலத்தில் உதித்தவளே!
ஜயகோதாவிரி, ஜயகோதாவிரி,
காவிரி சோதரி கதி தாராய். 7

நருமதை நாணிடக் கங்கை மயங்கிடப்
பொங்கிப்பூரித்தெழு புங்கவியே,
பிரும்ம புத்திரை எழில்யமுனேயும் வெட்கிடச்
சிங்கநாதம் செயும் சித்திரையே,
சரசுவதி வெட்குறத்தவள வண்ணமணி
மேனி விளங்கிடச்சஞ்சரிப்பாய்,
ஜயகோதாவிரி, ஜயகோதாவிரி,
காவிரி சோதரி, கதிதாராய். 8

இந்து திகைத்திடத் "தந்தினத்தோம்" என
அந்த நடம்புரி அங்கனேயே,
வந்து விழுந்தெழு சொந்த அலேச்சுடர்
மந்தகாச முக நந்தினியே,
வந்தனம், அந்தமில் சுந்தரி, நின் எழில்
எந்தன் பாடல் தனில் அடங்கிடுமோ?
ஜயகோதாவிரி, ஜயகோதாவிரி,
காவிரி சோதரி, கதிதாராய். 9

திரியம்பகேசுவரன் கிரி முடி வந்துதி
திரிபுர சுந்தரி, பஞ்சவடிக்
கருகினில்ஓடுவை, பார்தனில்நீடுவை,
பழம்பெரும் ஆந்திரம் தழுவிடுவாய்,
ஒருவரும் ஈடிலே, இணேயிலே, எனஒளிர்
ஓங்கு ஜலக்கொடி, ஒய்யாரப்
பிரும்மவரைக்கொடி, ஜயகோதாவிரி,
காவிரி சோதரி, கதிதாராய். 10

கௌதமி—கங்கை எனப்புகழ் பெற்றதோர்
சௌந்தர நாயகி, தாயகியே,
பௌர்ணமி நிலவினில் "பளபள" வென ஒளிர்
படிகமணிக்கொடி, பஞ்சவடி
தழுவியே ஓடிடும் தாயிற்சிறந்தவள்,
சியாமளன் பூசித்தகோமளேயே,
ஜயகோதாவிரி, ஜயகோதாவிரி,
காவிரி சோதரி, கதிதாராய். 11

தேவலாலியின் மாலை அழகு

(31—10—57)

நீலமலையின் நீண்ட தொடர்கள்,
கோலமா மேகம் கொஞ்சிடு வானம்,
சீலமனத்தார் மனம் போல் ஆறு,
நாலாபுறமும் நல்லதோரமைதி,
வான்படைப்பொருள்கள் வைத்திடவென்று
வானளாவ நின்றோங்கி வளர்ந்து,
பார்ப்பவர் மனத்தைப்பரவசமாக்கும்,
ஈர்க்கும், இராணுவக்கொட்டகை தாங்கும்,
தேவலாலியின் தெய்விக அழகைப்
பாவலர், நாவலர் உளங்கனிவிக்கும்
மேற்குத்திசையின் மேன்மைகொள் அழகைப்
பார்த்துரசித்துப்பரவசமானேன் :
யார்க்கும் கிட்டா நிம்மதி பெற்றேன்.
பேற்றில் பேரும் பெரும் சுகம் கண்டேன்.
ஊர்க்குள் சிறந்தது, உயர்வில் நிறைந்தது,
மூர்த்தியில் சிறிது, கீர்த்தியில் பெரிது,
நேத்திரானந்த நின்மல வடிவே,
பார்க்குள் உன் வனப்பு பகருந்தரமோ.

எல்லோரா எழில்

(30—12—57)

எல்லோரும் சென்று பார்க்கும்
இவ்வுலகத்தெழிலார் சோதி
எல்லோரா காணச்சென்றேன் ;
இன்பமெலாமொருங்கு வாய்ந்த
பல்லோரும் புகழும் வெற்றிப்
பாரதத்தின் சிகரமான
கல்லோவியத்தைக் கண்டேன்
கல்மனம் கனிந்து நின்றேன். 1

உயரத்தை அளக்கப்போமோ ?
உலகெலாம் பிரமித்து நோக்கும்
அயர் விலாக்குகையின் நீளம்,
ஆழத்தை மதிக்கலாமோ ?
உயர்வுற்று, உறுதி பெற்று,
உம்பர் நாடளாவி நிற்கும்
சிகரத்தைச் சொல்லப்போமோ ?
சிற்பத்தை நினைக்கலாமோ ! 2

மலையினைக்குடைந்து தோண்டி,
மதியினால் கலவை செய்து,
விலைமதிப்பற்ற தேனும்,
கரும்புடன், பாலும், சேர்த்து,
அலகிலா அமுதக்கூட்டால்
அமைந்ததோர் கலை என்பேனோ ?
தலையினால் வணங்கல் அல்லால்
தமியனேன் என்னசெய்வேன் ! 3

புத்தரின் சிலைகள் எல்லாம்
புத்தொளி வீசி நிற்கும்;
அத்தனை சிலைகள் கண்ணும்
அருளையே பொழிந்து நிற்கும்;
நர்த்தனச்சிலைகள் எல்லாம்
நாட்டிய பாவம் காட்டிப்
பித்தமே ஊட்டுதம்மா,
பேசவும் இயலவில்லை. 4

கமலத்தில் அமர்ந்த புத்தர்,
கைகளை மடித்த புத்தர்,
நிமலனாய் நிற்கும் புத்தர்,
நிலை எழில் தெறிக்கும் புத்தர்,
அமலனும் தியான புத்தர்,
அங்கை செங்கமலப்புத்தர்;
சமரஸ பாவப்புத்தர்;
சமாதியில் அமர்ந்த புத்தர்; 5

அப்சரஸ் ஆடலுக்கும்
அசையாத ஆண்மைப்புத்தர்;
கொத்து மாமுடிகள் வேய்ந்த
கோமள ராஜப்புத்தர்;
முத்து மாமுடி துலங்கும்
மோனமா முனிவர் புத்தர்;
எத்தனை புத்தரம்மா?
எழிற்கடற்குவமை யுண்டோ!! 6

தாமரை போன்றகண்கள்,
தளிரன்ன பெரியபாதம்,
நாமமும் தித்திக்கும் தெய்வ
நாயக சோதிரூபம்;

கோமகன் முனிவனுகிக்
குவலயமாண்ட தன்மை
ஆம் : ஒரு கல்லில் தோன்றும்
அதிசயம் என்னசொல்வேன் ! 7

பருமனும், அழகும், நோக்கும்,
பார்ப்பவர் கண்கள் பூக்கும் ;
உருவமும், நிலையும், போக்கும்,
உருக்கிடு முள்ளந்தன்னை :
சருமமும், எலும்பும் கொண்டு
சாக்கியர் எதிரே நிற்கும்
அருமையைக் கண்டேனய்யா,
அழகிய எல்லோராவில். 8

ததாகதர் சிலைகள் எல்லாம்
தருமமே உணர்த்தி நிற்கும்,
அதாவது அன்பும், மெய்யும்,
அகிம்சையும், பெய்து நிற்கும் ;
எதாவது சொல்லப்போமோ ?
எல்லோரா வனப்புக்கண்டோர்
சதாயுசும் நொடியாய்க்காண்பார்
சாக்கியர் சிலையின் முன்னே. 9

ஆடையின் மடிப்பும், தூய
அணிபணி வேலைப்பாடும்,
நாடக நடையும், நம்பன்
நளினக்கண் கருணை வீச்சும்,
கூடமாம் தரும பாவம்
கொப்புளித்திடு நல்வாயும்,
பாடமே யாச்சுதம்மா !
படிந்ததெம்மனத்திலம்மா !! 10

விரல்களின் அசைவும், நல்ல
வயிறு தவழ் மடிப்பும், தெய்வக்
குரல் கமழ் கழுத்தும், திவ்யக்
கொடிமலரிடையும், கோலப்
பரல் புரள் தண்டை வேய்ந்த
பதும மெல்லடியும், தேசும்,
நிறைவுடன் கொப்புளிக்கும்
நீண்டதோர் குகையிலம்மா. 11

அழகுக்கு அழகு செய்யும்,
ஆண்மைக்கு ஆண்மையூட்டும்,
விழவுக்கு விழாவெடுக்கும்,
வித்தைக்கும் வித்தையூட்டும்,
பழகிய தந்தை போலப்
பண்புடனெதிரே நிற்கும்,
எழில் மிகு புத்தர் தோற்றம்
எல்லோரா குகையுள் அம்மா! 12

சூரியன் கதிரும் போகாச்
சுந்தரக்குகையின் உள்ளே,
வாரியே வனப்பை எல்லாம்
வைத்தனர் கொட்டியாங்கே!
பேரிலே, பெருமை தன்னில்
பேச்செலாமயர்ந்து நிற்கும்,
நேரிலே கண்டபோதே
நினைவெலாமினித்த தம்மா. 13

முப்பது குகையின் உள்ளே
மூவுலகடைத்து விட்டார்;
செப்பிடு வித்தை போலச்
சகமெலாங்கலையில் பெய்தார்;

எப்படிப்புகழுவேனே ?
என்ன தான் எழுதுவேனே ?
இப்படிக்கண்ட தில்லை,
இறைவனும் வெட்கும்,செல்வம். 14

மேற்கினில் நீண்டுவாழும்
மேகமார் வரையின் சூழல்,
நோக்கினில் கதிர் புகாத
நுண்ணிய குகையின் உள்ளே,
தேக்கியே வைத்தாரம்மா,
தேம்பிழிக்கலையின் செல்வம் !
பாக்கியம் என்னசொல்வேன் ?
பாரத நாட்டுள்ளீரே. 15

கல்லினைக்கனிய வைத்தார்,
கலையினைப் பேசவைத்தார்,
மெல்லிய உருவினாலே
மேலவர் மருள வைத்தார் ;
சொல்லினை ஊமையாக்கிச்
சிலையினைப் பேசவைத்தார் ;
எல்லோராக்குகையின் உள்ளே
இனிமையைக்கொட்டி வைத்தார். 16

கருங்கல்லை கனியவைத்தார்,
கண்முனே பேசவைத்தார்,
பெரும் பாறையிளகவைத்தார்,
பேச்செலா நிறுத்திவைத்தார் ;
அரும்பாறை அழகியாகி
அருள்மழை பொழியவைத்தார்,
இரும்பினைக் குழையவைத்தார்,
இவர்செய்த மாயம் என்னே ? 17

உளியினாற் செதுக்கவில்லை,
உள்ளத்தால் செதுக்கிவைத்தார்,
களிமண்ணைப் பிசையவில்லை,
கலையையே பிசைந்து வைத்தார் ;
பளிங்கினைக் குடையவில்லை,
பக்தியைக் குடைந்துவைத்தார் ;
எளிதல்ல எடுத்துச்சொல்லல்
எல்லோராக் கலைஞர் ஜாலம். 18

சிலையினைச் செய்யவில்லை,
சித்தத்தைச் செய்து வைத்தார் ;
மலையினைக் குடையவில்லை,
மனத்தையே குடைந்து வைத்தார் ;
கலையினைக் காட்டவில்லை,
கவிதையைக் காட்டிவைத்தார் ;
விலையிலா இதயம்தன்னை
விண்டங்கு வைத்திட்டாரே. 19

புத்தரைச் செதுக்கவில்லை,
புத்துயிர் செதுக்கிவைத்தார் ;
முத்தரைக் காட்டவில்லை,
மோனத்தைக் காட்டிவைத்தார் ;
நர்த்தனம் செதுக்கவில்லை,
நடனத்தை ஆடவைத்தார் ;
எத்தனை சொல்வேனப்பா ?
எல்லோரா எழிலின் மாயம் ! 20

செடிகளும் பூத்துத்தொங்கும்,
சுவரெலாம் ஜாலம் காட்டும்,
கொடிகளும் வளைந்து தொங்கும்,
குகைக்கோயில் மாயம் செய்யும்,

வடிவெலாம் வனப்புப்பொங்கும்,
வாயிலும் சொர்க்கமாகும்,
முடிவிலா அழகை எல்லாம்
முப்பது குகைகள் காட்டும். 21

நடந்து தான் வருகின்றளோ ?
நடனம் தான் புரிகின்றளோ ?
படம் தனைத்தூக்கித்தூக்கிப்
பாம்புதான் ஆடும் கொல்லோ ?
இடம், வலம் இருவர் வீச,
இப்புத்தர் மொழிகின்றரோ ?
படம்பிடி கலைகள் எல்லாம்
பார்த்ததும் நாணவேண்டும். 22

இந்திரன் கொலு விருக்கை,
இமையவர் அருகிருக்கை,
இந்திராணி கொலுவிருக்கை,
இளைஞர்கள் பிரமித்து நோக்கல் ;
சந்திரன் முறுவலிக்கை ;
ஜாதகக்கதைகள், எல்லாம்
விந்தையாய்க்கண்முன் நிற்கும்
விந்தை எல்லோரா தானே. 23

முத்துடையணிந்த புத்தர்,
மோகன முறுவற் புத்தர்,
அத்தராம் அரசபுத்தர்,
அரசினைத்துறந்த புத்தர்,
சுத்த யோகீசனுன
சுந்தரக்கோலப்புத்தர்,
மெத்தையில் தூங்கும் புத்தர்,
மேதினி புரளும் புத்தர். 24

அசோதரை யணைந்த புத்தர்,
அரசிளங்குமர புத்தர்,
விச்சாதரர் வணங்கு புத்தர்,
வித்தைக்கோர் கடலாம் புத்தர்,
பிச்சாடனர் ஆன புத்தர்,
பெரும் மொழி புகலும் புத்தர்,
லட்சாதிபதிகள் யாரும்
வந்தடி வணங்கும் புத்தர் : 25

கலியாணக்கோலப் புத்தர்,
கமலத்திலமர்ந்த புத்தர்,
மெல்லியல் தனைக்கைவிட்டு
மிளிர்கானம் செல்லும் புத்தர் ;
அல்லலை யறுக்கும் புத்தர்,
அகிம்சையைத்தெறிக்கும் புத்தர் ;
அல்லியங்கண்களாலே
அன்பினைச்சொரியும் புத்தர் : 26

பிள்ளையைப்பிரிந்த புத்தர்,
பிச்சையை ஏற்கும் புத்தர்,
கள்ளமில்லா மனத்துக்
கமலாசனத்துப்புத்தர்,
அள்ளியே உள்ளம் கொள்ளும்
அண்ணலாமகிம்சைப் புத்தர்,
வள்ளலாம் துறவி புத்தர் ;
வானவர் வணங்கு புத்தர் : 27

ஓரேகல்லில் ஆனபுத்தர்,
உலகெலாம் வியக்கும் புத்தர் ;
நிரதிசயானந்தப் புத்தர் ;
நின்றருள் சுரக்கும் புத்தர் ;

வரோதயனுகி யார்க்கும்
வண்மையைப்பொழியும் புத்தர் ;
சரோருக நயனப்புத்தர் ;
சயனத்தில் இருக்கும் புத்தர் : 28

நின்றிடும் நீண்டகோலம்,
நின்மலத் தியானக்கோலம்,
ஒன்றி உட்கார்ந்தகோலம்,
உறவினை யறுத்தகோலம்,
வென்றிசெய் துறவுக்கோலம்,
வீரமாய் முழங்கு கோலம்,
கன்றினுக்கிரங்கும் ஆப்போல்
கருணையே பொழியும் கோலம் : 29

எத்தனை கோலமுண்டோ,
எவ்வகைப் பாவமுண்டோ,
அத்தனை கோலம், பாவம்,
அந்த எல்லோரா காட்டும் !
பித்தனைப்போல் பிரமித்துப்
பேச்சு மூச்சற்றேனம்மா !!
வித்தக எல்லோராவின்
வியப்பிலே மூழ்கி நின்றேன். 30

ஆடலும் பாடல்தானும்,
அழகுடன், வனப்பும், தேசும்,
வாடலும், பிரிவும், கொஞ்சும்
குழந்தையும், பெரியர், பெண்கள்,
நாடகம், நடனம், சிற்பம்,
நற்கலைப் பண்பும் யாவும்
ஏடவிழ் கவிதையாகி
எல்லோரா விளங்கும் எங்கும். 31

எல்லோரா கண்ட பின்பே
எல்லோரும் சாகவேண்டும் !!
வல்லோரும், மாட்டார் தாமும்
வந்தங்கு காணவேண்டும் !
நல்லோரும், பிறரும், யாரும்
நற்கலை காணவேண்டில்
எல்லோரா மலைக்குச்செல்வீர்,
ஏதென்று கேட்டிடாமல். 32

கைலாச நாதர் கோயில்

(12—1—58)

ஒண்ணுதல் இமயவல்லி
உடனருகணைந்த ஜோதிக்
கண்ணுதல் வாழுகின்ற
கைலையங்கிரியைப்பண்டு
மண்ணுடன் பேர்த்தசைத்தான்
மந்தோதரி கணவன் என்னும்
வண்ணமாக்கதையை ஈங்கு
வடித்தனர் கோயிலாக. 1

அரக்கனும் மலையசைக்க,
அம்பிகை பயந்து நோக்க,
உருக்கிளர் விரலில் ஒன்றை
ஊன்றினுன் உலக நாதன் ;
தருக்கிய அரக்கன் கீழே
தகைவுடன் அகப்பட்டேங்கி,
உருக்கிடு சாமகீதம்
ஓதினுன் என்பர் முன்னோர். 2

அந்தவோர் காவியத்தை
அண்டரும் வியந்து நோக்க,
விந்தையாய்க் கல்லில் பெய்தார்
வித்தகக்கலைஞர் அம்மா !
எந்தையைத்தாயை ஏற்கும்,
இமயமாமலையைத்தூக்கும்,
அந்த மாஅரக்கன் தன்னை
அடித்தனர் வடிவு தோன்ற. 3

கைலாச நாதர் கோயில்
கட்டாயம் காணவேண்டும் !!
ஓயிலான சிற்பச்செல்வம்
உயிரெலாமினிக்க நிற்கும் ;
அயில்மூன் றுமெரித்த தேவன்
அற்புதக்கைலைத் தோற்றம்
வெயிலிடை மணி போலாக்கி
விளக்கினர் கல்லிலம்மா. 4

பிரும்மாண்டமான யானை
பெரியதோர் வாயில் காக்கும்,
அம்மா அண்ணாந்து நோக்க
அங்கொடித் தம்பம் தோன் றும் ;
எம்மாடும் சிற்பச்செல்வம்
இளநகைபுரியும் கோலத்
தம்மானின் கோயில் கண்டால்
அதுவே பேரின்பந்தானே. 5

இந்துக்கள் தெய்வமெல்லாம்
எழில் நகை காட்டி நிற்கும் ;
பந்துக்கள் போலக்கற்கள்
பண்புடன் எதிர்சிரிக்கும் ;
கந்தர்ப் பனிரதியைப்போலக்
கண்கவர் சிலைகள் எல்லாம்
அந்தப் பொன்னாட்டை வென் று
ஆனந்தமயமாய் நிற்கும் : 6

யாளிகள், சிங்கம், மாடு,
யானைகள், எருமை, பூனை ;
கூளிகள், குயில்கள், கூகை,
கோபுரக்குரங்கு, காக்கை ;

தூளி, நிர்த்தூளி செய்யும்
பூதவேதாளக் கூட்டம் ;
காளிகள் கடவுள் யாவும்
கண்ணிணைப் பறிக்குதம்மா. 7

இந்திரன், வருணன், அக்கினி,
இமையவர், குபேரன், வாயு ;
சந்திரன், சமுத்திரம், கானம் ;
சந்தனம், கவரி மான்கள்,
நந்தனம், புரவி, தேர்கள்,
நடைபயிலழகு மங்கை,
நந்தி, ஏரம்பன், கந்தன்,
நடனமிட்டாடுவார்கள். 8

கொடி, இலை, காய்கள், பூக்கள்,
கோமளக்கனிகள், கொம்பு,
வடிவழகுடைய மாதர்,
வானவர், அரசர், மக்கள்,
பொடிதவழ்முனிவர், சாது,
புங்கவர், வீரர், தீரர்,
முடிவிலா திருப்பரம்மா
முக்கியமாக இங்கே. 9

அங்குலம் இடம் வீணில்லை,
அனைத்திலும் சிறப்பக்காட்சி ;
பைங்கிளி பேச, மஞ்ஞை
பரவசத்துடனே யாட,
அங்குயில் கீதம் பாட,
அன்னங்களருகு கேட்க,
மங்கைமார் போல மெல்ல
மானினம் மருண்டு நோக்க ; 10

நர்த்தனம் செய்வோர் ஓர் பால்,
நாடகம் பயில்வோர் ஓர் பால்,
மத்தளம் அடிப்போர் ஓர் பால்,
மணிவிழா எடுப்போர் ஓர் பால்,
கொத்தளம், கோட்டை காக்கும்
கொற்றவர் ஆட்கள் ஓர் பால் ;
முத்துருள் ஆதனத்தில்
முழுக்கொலு இருப்போர் ஓர் பால் ; 11

மகிடத்தைச்சாடி நிற்கும்
மங்களச்செல்வி ஓர் பால்,
உகிரினல் உரம் பறிக்கும்
உயர் நரசிங்கம் ஓர் பால்,
முகில்வண்ணன் நிற்பான் ஓர் பால்,
முனிவரர் துதிப்பர் ஓர் பால்,
துகிலுடுத்தேகும் சாயல்
தோகைமார் கூட்டம் ஓர்பால் ; 12

வில்லாண்ட தோளன், வேத
வித்தகனிராமன் ஓர் பால் ;
மல்லாண்ட திரண்ட தோளன்
மாணிக்கத்திளவல் ஓர்பால் ;
சொல்லாண்ட செல்வன் ஓர்பால் ;
சுமித்திரை மைந்தன் ஓர்பால் ;
அல்லாண்ட கூந்தற் செல்வி
அம்பிகை சீதை ஓர்பால் ; 13

பரதனும் பண்பன் ஓர்பால்,
பார்வதி குமாரன் ஓர்பால்,
விரதமே காத்து நிற்கும்
வித்தகர், வேந்தர் ஓர்பால்,

அரசிளங்குமரர் ஓர்பால்,
அவரிளம் மனைவி ஓர்பால்,
புரவிகள், தேர்கள் ஓர்பால்,
பிளிறுநல்களிறு ஓர்பால், 14

உலகினைப்புரட்டி ஓடும்
உத்தமி கங்கை ஓர்பால்,
விலைமதிப்பில்லா வெள்ளிப்
பனிவரை விளங்குமோர் பால் ;
உலகெலாந் தாங்கி நிற்கும்
உயராதி சேடன் ஓர்பால்,
"கலகல" வென நகைக்கும்
கோபிமார், கண்ணன் ஓர்பால் : 15

குதிரையிலமர்ந்த வீரர்,
கொற்றவர் காக்கும் வீரர்,
மதுரமாம் வெற்றி பெற்று
மாநகர் திரும்பும் வீரர்,
அதிரவே ஓடிப்பாயும்
ஆனையைச்சாடும் வீரர்,
துதி பெற அணி வகுத்துத்
தொன்னகர் காக்கும் வீரர் : 16

சிவலிங்கச்செல்வக் காட்சி,
சீதளக்குகையின் காட்சி,
நவ நவ வனப்புத்தோன்றும்
நந்தியின் நளினக்காட்சி ;
உவமையே சொல்லொணுத
உலகத்துக்கலையின் நுட்பம்
தவம் செய்து பெற்றதம்மா
தலைமை கைலாயக்கோயில். 17

புகழுவோ தெரியவில்லை !
புண்ணியக்கோயிற் சிற்பம் :
திகழுமால் செல்வமெல்லாம்
திரண்டெழுந்தொன்ருயிங்கே :
சகமெலாந்திகைத்து நிற்கச்
சமைத்தனர் சிற்பக்கோயில் :
அகமெலாந்துளிர்த்துப்பூத்தென்
ஆன்மாவும் மலர்ந்ததம்மா. 18

கைலைக்குச் செல்லவேண்டாம்,
கவலையை வீட்டவேண்டில்,
இளைபுரி என்று சொல்லும்
எல்லோரா சென்று நீவிர்
கைலாய நாதர் கோயில்
கற்சிற்பங்காண்மின், காண்மின் !!
கைலையே கண்முன் வந்து
காட்சி தந்தாளுமய்யா. 19

எப்படிச்செய்தார் கொல்லோ ?
எத்தனை வருடமாக,
இப்படிச்செய்யவென்று,
எண்ணியே முடித்தார் கொல்லோ ?
செப்பிடு வித்தை கொல்லோ ?
ஜகபதி மருண்டு நோக்க,
ஒப்பிலாக்கருங்கல்லாலே
ஓவியந்தீட்டி வைத்தார். 20

அஜந்தா அதிசயம்

12—1—58

புஜந்தாங்குந் தெய்வமெல்லாம்
பூரண எழில் பெற்றேங்கும்,
கஜந்தாங்கும் மன்னரெல்லாம்
கண்டதும் பிரமித்து நோக்கும்,
நிஜந்தானு, கனவா என்று
நானிலம் திகைத்து நிற்கும்,
அஜந்தாவைக்கண்டேனய்யா
அற்புதம் என்னசொல்வேன் ? 1

ஓராயிர வருட முன்னர்
இப்புவிக்கலைகள் எல்லாம்
ஓருயிர் பெற்று வாழ
உயர் மாயம் செய்து வைத்தார் ;
நேரிலே கண்ட பேர்கள்
நெஞ்செலாமினித்துச்சொட்டப்
பாறையைக்கற்கண்டாகப்
பண்ணிய விந்தை கண்டேன். 2

சிற்பங்கள் அழகென்பேனே ?
சித்திரம் அழகென்பேனே ?
ஒப்புயர்வில்லா வண்ணக்
கலவை தானுயர் வென்பேனே ?
சொற்பதங்கடந்து நிற்கும்
சோதியாய்க்கலைகள் வீசும்,
அற்புதமென்ன சொல்வேன்
“ அபாரம் ” என்றழைப்பதல்லால். 3

அகிலத்தின் அழகை எல்லாம்
அஜந்தாவில் கொட்டி வைத்தார் ;
மகிதலத்தெழிலை எல்லாம்
மலைக்குளே எழுதிவைத்தார் ;
சகதலத்தருமை எல்லாம்
சுவரிலே வரைந்து வைத்தார் ;
மிகுதியே இல்லையம்மா,
மேதினிகலையின் நுட்பம். 4

மேற்கு மாமலைத்தொடர்ச்சி
மலையினைக்குடைந்து தோண்டி,
நோக்கவே அருமையான
நுண்ணருங்கலைகள் பெய்து,
வாக்கினுக் கெட்டாவண்ணக்
கலவையைக் குழைத்துப்பூசிச்
சாக்கியர் கதைகள் எல்லாம்
சமைத்தனர் வடிவமாக. 5

பாக்கியம் என்னசொல்வேன் ?
பாரத நாட்டில் வந்து,
சாக்கிய முனிவர்கோயில்
சாந்தமாய்த் திகழுகின்ற,
ஆக்கினை செலுத்தும் காலம்
அழிக்கவும் முடிகிலாத,
பூக்குளே உயர்ந்த செல்வப்
புண்ணிய அஜந்தா கண்டேன். 6

அருமறைப் பயன்களெல்லாம்
அஜந்தாவில் திகழுதம்மா,
பெருமுனி புத்தர் வாழும்
பேர் பெரும் குகைகள் எல்லாம்

திருவினுக்கரசாய் வாழும்
தெய்விகக்கோலம் கண்டோர்
பிறவியின் பயனைக்கண்ட
பேர்பெறுந்தவத்தர் அன்றோ. 7

நீண்டு, மாவரி சுமந்து,
நிறைந்து, நல்லின்பஞ்சூழ்ந்து,
ஆண்டபேர் அழகை எல்லாம்
அள்ளியே வீசி, நீலம்
பூண்டு, பொன்னருள் சுரந்து,
பொங்கு தாமரையைப் போன்ற
காண்டகு கண்கள் மாட்சி
கண்டபேர் மறக்கமாட்டார். 8

புத்தரின் கண்கள் எல்லாம்
புத்தொளி வீசி நிற்கும்,
அத்தனின் கண்கள் எல்லாம்
அன்பையே சொரிந்து நிற்கும்,
முத்தரின் கண்கள் எல்லாம்
மோனத்தையுணர்த்தி நிற்கும்,
சித்தத்தில் தித்தித்து நிற்கும்
தெய்விகக்கண்ணின் மாட்சி. 9

ஆடையின் அழகைச்சொல்ல
ஆயிரமாண்டு போதா;
மேடையில் வீசும் தென்றல்
மெல்லிதாயலைக்க வந்து,
ஆடையின் மடிப்பு ஆங்கே
அலை அலையாய்ச் சுருண்டு,
ஓடையின் நீர்போல் துன்னும்,
உயர்வெலாமெழுதி வைத்தார். 10

வளைந்து, மேல் சரிந்து, நீண்டு,
வானவர் கோனும் வெட்கத்
திளைந்து பேராகம், வண்ணம்
திரண்டொளி இணைந்து சேர்ந்து,
களைந்திடாத்தன்மை கொண்டு,
கனகாம்பரம் இடையில் தோன்றும்
மணங்கமழ் வடிவைக்கண்டால்
மனமுயிர் இனிக்குமம்மா. 11

விரல்களின் வளைவும், வண்ண
வீரமார் தோளும், தாளும்,
குரல் முரல் கழுத்தும், கோலக்
குஞ்சியும், குஞ்சி வேய்ந்த
அரசமாமுடியும், யாரும்
அன்புடன் நோக்கும் தெய்வ
நகங்களின் பொலிவுமன்றே
நலம் பெறச்செதுக்கி விட்டார். 12

புருடர்கள் ; பூவை வண்ணப்
பூவையர் பறக்கும் தோற்றம்,
கருடனைப்போல ஓங்கிக்
கந்தருவர் பறக்கும் தோற்றம்,
அருடனைப் பொழியும் புத்தர்
அமர்ந்திடும் அழகுத்தோற்றம்,
இருள் தவழ் குகையின் உள்ளே
எப்படி எழுதிவைத்தார் ! 13

அழகெலாம் கொள்ளை கொண்ட
ஆரணங்கெல்லாமாங்கே
பழகிடும் பான்மையெல்லாம்
பாங்குடன் எழுதிப்பார்ப்போர்

நுழையுமுன் கருத்தைஈர்க்கும்
நூதனக் கோயில் வாயில்
மழையெனக் கலையைப் பெய்து
மாநிலம் மருள வைத்தார். 14

பெண்களின் தோற்றமெல்லாம்
பேரெழில் கொட்டி நிற்கும்,
கண்களின் தோற்றமெல்லாம்
கலையெழில் கொட்டி நிற்கும்,
நுண்துகள் திறனும் கூட
நூதன வடிவு காட்டும்;
பண்களின் சிகரமய்யா
பார்மிசை அஜந்தாச் சிற்பம். 15

மலர் எலாம் பூத்து நிற்கும்,
மல்லிகை குலுங்கி நிற்கும்,
தலையலங்காரம் கண்டு
தாரணி பிரமித்து நிற்கும்,
விலையிலாக் கலையின் செல்வம்
விரல் நுனி தேங்கி நிற்கும்,
அலகிலா அஜந்தாச்செல்வம்
அதிசயச் சிகரமய்யா. 16

பச்சிலை வண்ணத்தாலே,
பாரெலாம் பிரமித்து நிற்க,
உச்சிதமாக ஓங்கி உயர்ந்த
வெம்பாறை பூசி,
மெச்சிடும் கலையின் மாதை
மேன்மையாயமர்த்தியாரும்
இச்சை கொள்வடிவம் தீட்டும்
இந்தியக்கலையின் பண்பே. 17

நாலு மான் தனக்குமாங்கே
நடுவிலோர் தலை நிறுத்திக்
கோலமார் சிற்பஞ்செய்த
குழைவினைச் சொல்லுகேனே?
காலையும் பின்னால் ஊன்றிக்
கவர்ச்சியாய் வளைத்துக்கற்பக்
கோலமென் கொடியாய் நிற்கும்
கொம்பினைச் சொல்லுகேனே!! 18

ஆடலிற் சிறந்து நிற்கும்
அப்சரஸ் அழகும், அன்பும்
கூடவே முழங்கி தோன்ற
கொம்பொடு, குரிசில் தானும்
பாடியே பறக்கும் வண்ணப்
பாறையில் திகழும் சோதி
ஜோடியைச் சொல்லுகேனே!
சுடரொளி சொல்லுகேனே! 19

நானிலந்தாங்குகின்ற
நாக மாராஜராஜன்,
பானிலா பொழியும் வண்ணப்
பாங்கிமார் கவரி வீச,
தேனிலா நாகராணித்
திடமுடன் அருகிருக்க,
மானினம் மருண்டு நோக்கும்
மாட்சியைச் சொல்லுவேனே! 20

பிறந்து மாயா வயிற்றில்,
பேரிளவரசு மாகிச்
சிறந்து வாலிபனாய், நங்கை
அசோதரை வதுவைசெய்து,

மறந்தவள் தனையும், மைந்தன்
ராகுலன் தனையும், நீங்கித்
துறந்து மாகானம் சென்று
தூநெறித்தவமே செய்து ; 21

ஆலமார் மரத்தின் கீழே
அருஞானமடைந்து, நல்ல
சீலமார் புத்தன் என்று
திருநாமம் பெற்றுப் பாரில்
ஞாலமெல்லாம் கடந்த
ஞான ஆசானுமாகி,
வாலறிவாளன் பாதம்
அடைந்தது ஈருய்க்கல்லில், 22

ஒவ்வொரு கதைகளாக,
உலகெலாம் வியக்குவண்ணம்,
செவ்வனே செதுக்கிப் பின்பு
சித்திரத் தெழுதியாரும்
அவ்வகைஅருமை இந்த
அவனியில் இல்லை என்று
சொல்வகை பெற்று நிற்கும்
சோதியைச் சொல்லுகேனே !! 23

பாறையைக் குடைந்தெடுத்துப்
பாங்குடன் பதப்படுத்தி,
நீர்நிலை, கடல், என்றேதும்
நீல ஆகாயவண்ணப்
பேர்பெறும் சமுத்திரத்தைப்
பெருமலை, கரைகளோடு
கூரையில் செதுக்கிவைத்த
குதூகலம் சொல்லுகேனே ? 24

புது ஒளி வீசும் கோலப்
பூரண எழிலார் தோற்ற
மதுமலர் மங்கை தன்னை
மறைத்தவள் பளிங்குபோன்ற
முதுகினை வளையக்காட்டி
முகத்தையும் மறைத்து வைத்த
அதிசயம் சொல்லுகேனோ
அஜந்தாவே என்ன சொல்வேன் !! 25

சிலை நயம் உயர்வென்பேனோ ?
சித்திரம் உயர்வென்பேனோ ?
கலை நயம் உயர்வென்பேனோ ?
கண்எழில் உயர்வென்பேனோ ?
மலை நயம் உயர்வென்பேனோ ?
மனமெலாங்கொள்ளை கொள்ளும்
அலகிலா தெய்வக்காட்சி
அஜந்தாவே, என் சொல்வேனே !! 26

அருமையில் அருமையாகி
அகிலத்துக்கதைகள் சொல்வாய் ;
பொறுமைக்கு உறையுளான
புண்ணியன் மகிமை சொல்வாய் ;
ஒருமையும், உயர்வும்காட்டி
உலகத்துக்கலைகள் சொல்வாய் ;
பெருமையை உரைக்கப்போமோ
பேர்பெறுமஜந்தா என்னால். 27

பௌத்தர்கள் மகிமை சொல்வாய் ;
பதிவிரதை பெருமை சொல்வாய் ;
சுத்தர்கள் தன்மை சொல்வாய் ;
சூரர்கள் திறமை சொல்வாய் ;

நித்தர்கள் நிலைமை சொல்வாய் ;
நின்மலர் மேன்மை சொல்வாய் ;
பக்தர்கள் பான்மையாவும்
பாரினில் எடுத்துச் சொல்வாய் : 28

முப்பது குகையினுள்ளே
முதலவன் அண்டம் காட்டி,
நிற்பது, நடப்பதென்னும்
நிலைஎழில் முழுதும் காட்டித்
தப்பிலாக்கலைகள் எல்லாம்
தலைகளை வணங்கி நிற்க,
ஒப்பிலாதுயர்ந்து நின்றாய்
உலகிலே அஜந்தா நீயும் !! 29

எப்படிச் சொல்லு கேனோ ?
எவ்வகை புகழு வேனோ?
செப்பிடு வித்தைதானோ ?
சிலர்கள் செய்கைதானோ ?
கற்பது, கேட்பதெல்லாம்
கல்லிலே வடிந்து நிற்கும்
இப்பெரும் புதுமை தன்னை
என்ன நான் சொல்லுவேனோ !! 30

படிகளில் எல்லாம் வேலை,
பாறைகள் எல்லாம் தெய்வம் ;
முடிகளில் எல்லாம் கோலம் ;
மூலைகள் முடுக்கில் எல்லாம் ;
இடைவிடாதெழிலார் சிற்பம் ;
இடுக்குகள் எங்கும் ஜாலம் ;
முடிவிலாக்கலையின் மாட்சி
மூண்டெழுந்தார்த்து நிற்கும். 31

காலவைக்கும் இடத்தில் சிற்பம் ;
கைதொட்ட இடத்தில் சிற்பம் ;
மேலெலாம் சிற்பம், சிற்பம் ;
மதில் எலாம் கோலம், கோலம்,
நூலிழை நுழையமாட்டா
நுண்ணிய இடத்தில் எல்லாம்
ஜாலம் செய் சிற்பம் செய்து
சகத்தினை அடிமை கொண்டார் !! 32

பாறையை நிமிர்ந்து நோக்கின்
பார் எலாம் பிரமித்து நிற்கும் ;
கூரை அண்ணாந்து நோக்கின்
குவலயம் மயங்குமாங்கே ;
நேரிலே சேதி சொல்லும்
நீண்டதோர் சிற்பமெல்லாம்
" நீரிதைப்போல எங்கும்
நினைத்ததுமுண்டோ " என்னும் ; 33

கண்டதும் இல்லை, ஐயா,
கேட்டதும் இல்லை பூவில்,
மண்டலந்தனிலே இந்த
மாபெருமஜந்தா போல !
உண்டனம் அமுதமாங்கே,
உருகினோம் கல்லைக்கண்டு :
விண்டிடத்தெரியவில்லை ;
விக்கினோம் : சொக்கி நின்றோம் ! 34

கஜபதியான புத்தர்,
கருணையைக்கொட்டு புத்தர்,
புஜபலமதனினாலே
புவனியைத்துறந்த புத்தர்,

நிஜக்குரங்கான புத்தர்,
நேர்மையைத்தேடு புத்தர்,
அஜந்தாவில் விளங்குகின்றார்
அழகெலாம் பெருகி ஓட. 35

புத்தர்கள் பள்ளி என்பார்
பூவிலே இதனை ஐயா,
வைத்தகண் வாங்கமாட்டார்
வந்தவர் இதனைப்பார்த்து ;
எத்தனைதரம் சொன்னாலும்
எனக்கொரு திருப்தி இல்லை ;
அத்தனை உலகத்தாரும்
அஜந்தாவைக் காணவேண்டும் !! 36

பாரதப்பெருமை சொல்ல
பாரிலே வேறு வேண்டாம் ;
மாரதச்சேனை வேண்டாம் ;
மண்டலத்தாட்சி வேண்டாம் ;
நேரிலே சென்று வந்தால்
நீரிந்த அஜந்தா ஒன்றே
பாரிலே போதும் என்பீர்
பாரதச்சிறப்புக்காட்ட. 37

அம்மட்டோ அஜந்தா ஒன்றோ ?
அதுபோல பல கற்கோயில் ;
விண்முட்டும் குகைகள், சிற்பம்,
வேண்டியதுண்டு இங்கே ;
கண்எட்டும் காட்சி எல்லாம்
கற்களின் விந்தை தானே ?
பண்ஒன்றில் சொல்லப்போமோ
பாரதக்கலைஞர் பெற்றி !! 38

மாமல்லபுரத்துக்கீடு
மாநிலத்தில்லை, பாரும் ;
ஆம் ; இந்த அஜந்தாபோல
அகிலமுங்கண்டதில்லை :
சேம சித்தன்ன வாசல் ;
சேர்ந்த எல்லோராக்கோயில் ;
சேமஞ்சேர் கைலைநாதன்
சுந்தரக்கோயில் எல்லாம் ; 39

எம்புகழ் காட்டி நிற்கும்,
எழில் எலாம் கொட்டி நிற்கும்,
அம்புவிதனிலே இந்த
அஜந்தாபோல் கண்டதில்லை ;
நம்புவீர் வையத்தீரே,
நாலந்தா, தக்ஷசிலம்,
தம்பெயர் நாட்டும் பீஹார்,
தனைப்போலே அஜந்தாப்பள்ளி. 40

ஆயினுமகில மெல்லாம்
அதனடி பணியக்கண்டோம் ;
தாயினும் பெரிய செல்வம்
தண்குகை வளரக்கண்டோம்,
ஆயிரமாண்டு காலம்
அழிவின்றி இருக்கக்கண்டோம் ;
பாயிரமிது போதாதா
பாரதச்சிறப்பினுக்கு !! 41

ஸாயி பாபாவின் சமாதி

(28—12—57)

பாரிலே ஸாயிபாபா
பெயரறி நாட்களாகச்
சீரடி என்ற ஊரைச்
சிந்தனை செய்திருந்தேன். 1

நாட்கள் மாதங்களாக,
மாதங்கள் ஆண்டாய் மாற,
போய்த் தவப் பதியைக்காணும்
புண்ணியம் கிட்டவில்லை. 2

எல்லாம் வல்ல இறைவன் தன்னால்
இவ்வுயிரிருக்கும் போதே
எல்லோரா இனிமை கண்டேன் ;
ஈடில்லா அஜந்தா கண்டேன். 3

ஔரங்கா பாத்தும் கண்டேன் ;
அப்புரியழகும் கண்டேன் ;
சௌரியமார் தௌலதாபாத்
கோட்டையும் கண்டுவந்தேன். 4

நேரங்களாச்சு தென்று
நினைவறியாமல் ஓடிச்
சீரடி சென்று நின்றேன்
சிந்தனை செய்திருந்தேன். 5

கோயிலுங்குளமுமாகக்
கொள்வார், கொடுப்பாருமாக
ஆயிரங்கோயில் போல
அதுவுமொன்றென் றிருந்தேன். 6

கண்டனன் காட்சி ஒன்று,
கண்டதை என்ன சொல்வேன்?
விண்டுமே உரைக்க வொண்ணு
விந்தையே விந்தையம்மா. 7

தலையிலோர் தொப்பி சூடி,
காலை ஓர் காலில் வைத்த
நிலையிலே ஸாயி பாபா
சிலையினைக்கண்டு நின்றேன். 8

கூட்டமும் நிறைய இல்லை;
கொட்டுமேளங்கள் இல்லை;
ஆர்ப்பாட்டமும் அதிகம் இல்லை;
ஆயினும் அழகு கண்டேன். 9

பேச்சுடன் பிடுங்கல் இல்லை,
புண்ணிய மூட்டை கட்டும்
ஆசாரர் அரட்டை இல்லை,
அமைதியே தவழ்ந்ததம்மா. 10

பண்டாக்கள் பாட்டுமில்லை,
பணம் பறி பேய்களில்லை;
திண்டாடி நிற்க வில்லை;
தெரிசனம் செய்துகந்தேன். 11

சாதியின் பூசல் இல்லை ;
சண்டை, சச்சரவு இல்லை ;
மோதிடும் முரடர் இல்லை ;
முக்யமாய் வேஷம் இல்லை ; 12

இந்துக்கள் அடியில் வீழ,
ஈடிலா யேசு பக்தர்
பந்துக்கள் போலச்சூழ,
பஜனை செய் பான்மை கண்டேன். 13

இஸ்லாமியர் இருகை கூப்பப்
பார்சியர் பணிந்து போற்ற,
விச்ராந்தியே சூழ்ந்து நின்ற
விந்தையாம் கோயில் கண்டேன். 14

பௌத்தர்கள் பக்கம் சூழப்
பணிவுடன் ஜைனர் போற்றச்
சுத்தர்கள் வணங்கி வாழ்த்தும்
தூயனின் சமாதி கண்டேன். 15

சமரச பாவம் சூழும்
சமாதியைக் கண்டு வந்தேன்
நமது பண்பாட்டைக்காட்டும்
நாயகம் இதுவே யன்றோ ! 16

சாயி, நின் சமாதி முன்னால்
சகலமாமதங்கள் கூடி
கோயிலைக் கோயிலாகக்
கும்பிட்டு வாழக்கண்டேன். 17

அய்யனே, உனது ஞானம்
அன்பரைக் கட்டிற்றப்பா,
துய்யனே, நினது கோலம்
தூய்மையைக் காட்டிற்றப்பா. 18

நீ தொட்ட நெருப்புஜ்வாலை
நீண்டங்கு எரியக்கண்டேன் ;
நான் தொட்டு வாழ்ந்தேன் நின்றன்
நளினமென் பாதம் தன்னை. 19

உன்னையே கண்டு நின்றேன் ;
உலகினை மறந்து நின்றேன் ;
தன்னையே இழந்து நின்றேன் ;
தன்மையை பருகுகின்றேன். 20

குனிந்துனை நமஸ்கரித்தேன்,
குளிர்ந்ததென் நெஞ்சமப்பா,
கனிந்து நான் வேண்டி நின்றேன்,
காட்டினாய் காட்சி கண்ணில். 21

தூணிலே சாய்ந்து நின்றேன்,
தோன்றினாய் என்றன் முன்னே ;
பேணினேன் உன்றன் நாமம்
பெரும, நீ பதிலும் சொன்னாய். 22

சாயி, ஓ சாயி பாபா,
சஞ்சல மறுத்த தேவா,
மாயிருள் துடைத்த தெய்வ
மா பெரும் சோதி போற்றி !! 23

கோயிலுக்கெல்லாம் உன்றன்
கோயிலே சிகரமய்யா,
சாயி நின் சமாதி கண்டேன்
ஜன்ம சாபல்யங் கொண்டேன். 24

துவாரகை துரைமகன்

(15—1—59)

அவாவெலாம் அறுத்து நிற்கும்,
அவலமே நீக்கி நிற்கும்,
நவாதிபர், அரசர் எல்லாம்
நாளும் வந்தடி வணங்கும்
உவாமதி வதனசோதி
உருக்குமிணி நாதன் வாழும்
துவாரகை கண்டு வந்தேன்,
துயருடன் கவலை தீர்ந்தேன். 1

இரமணகத்தீ வென்றேதும்
இரமணியப் பதியுமாகும்,
கமழ் மணக்கோயில் சூழும்
கடல் நடுத்திடலுமாகும்,
தமனியத்திருவினளைத்
தாமரைக் கண்ணன் வேட்ட
கமனியப்பதியைக் காணக்
கண்களும் உவகை பூத்த. 2

நீலமார் கடலின்மீது
நின்றிடும் பழையதீவுக்
கோலமே கண்டபோது
கொண்டல்மா வண்ணன் செய்த
ஜாலமே கண்முன் வந்து
சகமெலாம் நிறைத்ததம்மா ;
ஆலமார் இலையில் தூங்கும்
அழகனைக் கண்டுவந்தேன். 3

கரிய மாமேனி கொண்டு,
கையிலே முரளி கொண்டு,
உரிய நற்பணிகள் இந்த
உலகினில் உள்ளதெல்லாம்
திருமுடி தொடங்கித் தெய்வத்
திருவடி வரையில் பூண்டு,
அரி எனும் நாமம்பூண்டு,
அழகனும் நிற்கக் கண்டேன். 4

காலினிற் சிலம்பு கொஞ்சக்
கைகளில் வளையல் மின்ன,
மேல் எலாம் சோதி வீச,
மூக்கினில் நத்து ஆட,
நூலுடன் பதக்கம், ஆரம்,
நுவல் பெரும் மார்பில் ஆடப்
பாற்கடற்பரமன் தன்னைப்
பரிவுடன் நிற்கக்கண்டேன். 5

பட்டுடை இடையிற் கட்டிப்
பதக்கமும் மார்பிற் சாத்தி,
மட்டிலா ஆழி, சங்கம்,
மணிக்கதை, பதுமம் கொண்டு,
எட்டிடாதருமறைக்கும்
ஏகமாய் விளங்கும் சோதி
விட்டுணு, விமலன் கண்முன்
வந்தெதிர் நிற்கக்கண்டேன். 6

கீதையிற்கண்ட வேந்தன்
கிளர் மணிமுடியும் சூடிச்
சோதியும் சுடருமாகத்
துவரையில் நிற்கக்கண்டேன்,

பாதையைக்காட்டுகின்ற
பார்த்தசாரதியுமான
வேத மா முதல்வன் தன்னை
விளங்கிடக்கண்டவாறே. 7

சேடனாய் அண்ணனை
திவ்விய நாகராஜன்
வேடமும் அழகும் கண்டு
வியப்பிலே திளைத்து நின்றேன்;
மாட மாளிகைகள், வண்ணக்
கூட கோபுரங்கள் சூழும்
ஆடலில் வல்ல கண்ணன்
அரும்பதி கண்டுவந்தேன். 8

உருக்குமிணி, பாமை, பத்ரை,
இலக்கணை, மித்ரவிந்தை,
நப்பின்னை, கரடி பெற்ற
நங்கை, காளிந்தி என்னும்
ஒப்பிலா அரசிமார்கள்
உயர் அந்தப்புரமும் கண்டேன்,
எப்படிப் புகல்வதேயோ
இப்பதி வனப்பை எல்லாம்? 9

அந்தமார் அவந்திவாசி,
அன்பிலே தோய்ந்து நின்ற
செந்தண்மை பூண்ட செம்மல்,
செம்மனக்குசேலர் அன்று
நந்த கோபாலன் ஆகம்
நட்புடன் தழுவி நின்ற
அந்த வோரிடத்தைக் கண்டு
அகிலமே மறந்து நின்றேன். 10

சடைதனை வகிர்ந்து பின்னிச்
சந்திரப்பிரபையும் சூடி,
சடைநாகம் சதுராய்ப்பூண்டு,
சாதி மல்லிகையும் சூடி,
கடைகுழற் குஞ்சம் ஆடக்
காரிகை வெட்க நிற்கும்
இடைக்குல வேந்தன் பின்னல்
எழில் தனை எழுதப்போமோ? 11

கண்டவர் மனதைக்கவ்வி,
கருமாயப் பிறப்பறுத்து,
தண்டையும் சிலம்பும் பூண்டு,
தண்மதி நிலவை வீசி
மண்டலம் குளிர நிற்கும்
மாமறை தேடலாகா
புண்டரீகப் பொற்பாதம்
புத்துயிர் தந்து நிற்கும். 12

அண்டங்கள்அளவளாவி,
அம்பிகை கங்கை பெற்று,
மண்டல மனிதர்க்கெல்லாம்
மா நிதி வழங்கவென்றே
விண்டலம் கிழித்துநின்ற
விட்டுணு வீர பாதம்
கண்டதும் கருத்தழிந்தேன்,
கண்ணனை மட்டும் கண்டேன். 13

சிறையில் நள்ளிரவில் தோன்றி,
சிறந்த ஆய்ப்பாடி சென்று,
மறைகளும், அயனும் தேட,
மது வனம் தனில் வளர்ந்து,

மதுரையில் கஞ்சன் மாய
மல்லரை மாட்டி வீழ்த்தித்
துவரையில் அரசு செய்யும்
துரைதனைக்கண்டவாறே. 14

துவரைமாணிக்கந்தன்னைத்
தூமணிச்சோதியானை,
அவலமெல்லாமழிக்கும்
அம்பிகை அண்ணன் தன்னைக்
கவலையை வேரறுக்கும்
கஞ்ச மா நாபன் தன்னைத்
துவரையம் பதியிற்கண்டேன்,
துக்கமெல்லாமொழிந்தேன் ! 15

அண்ணனுந்தானுமாகத்
தண்கடற்றீவில் வாழும்
கண்ணனைக்கமல மாதின்
கேள்வனைக்கருணைப்பச்சை
வண்ணனை வளரும் சோதி
வண்டமிழ் பின்னே சென்ற
அண்ணலைத்துவரை கண்டு
அடியனேன் மகிழ்ந்தவாறே. 16

அரசனும் ஆண்டியும்

(21—11—52)

அரசனும் ஆண்டியும் அன்பால் ஒன்றும்,
வரதனும் துறவியும் வந்தணைவாராம்;
புரவலன் புவிபதி புல்குவன் ஏழையை;
இரவலன் தன்னை இறைவன் அணைவான். 1

வாடிவதங்கி, வாட்டமிகுந்து,
நாடி தளர்ந்து, நரம்பு தெரிந்து,
கூடுமார் பின்னி, கூன்முதுகேறி,
ஆடியசைந்தே வந்தனன் ஒருவன். 2

தேகம் வரண்டு, தெம்பு குறைந்து,
ஆகம் வெளுத்து, அழகு மறைந்து,
வேகம்குறைந்து, வீரம் தளர்ந்து,
போகம் கண்டறியாப்புலவன் வந்தான். 3

கன்னங்கள் ஒட்டி, கண்குழி விழுந்து,
பின்னிய காலும், பதறிய உடலும்,
கன்னங்கருத்ததொர் கந்தையணிந்து,
அன்னங்கண்டறியா ஆண்டியும் வந்தான். 4

நடையும் தளர்ந்து, நரைதிரைவந்து,
கடைப்பல் விழுந்து, கண்கள் குழிந்து,
உடையொரு கந்தை, உடலொரு கூடு,
நடைபிணமென்ன நடந்தான் ஒருவன். 5

சதைகள் சுருங்கி, சக்தி மழுங்கி,
விதியின் விளக்கப் பதுமையதேபோல்,
அதிகம் முதிர்ந்து, அயர்ந்து நடந்து,
முதியவன் ஒருவன் யதுபுரி வந்தான். 6

" துவரையும் இதுவோ, யதுபுரி இதுவோ ;
சதுரன் விளங்கும் நகரமும் இதுவோ
பதியவன் வைகும் பதியும் இதுவோ ?
இதுவோ துவரை," என்றவன் வந்தான். 7

அரசகுலம் வாழ் அரண்மனை வந்து,
மரகத வாசற் தோரணம் கண்டு,
" வரிசை கொள் காவல, வழிவிடு " என்றான்
புரிதனைக்காப்பவன் பிரமித்துவிழித்தான். 8

" இது என்ன கோலம், யாரிவன் பேதை,
யதுபுரி மரகத மாளிகை வாயில்
பதியவன் போலப்புகநினைகின்றான்,
அதிசய மனிதன் அறிகுவம் " என்று 9

" யார்நீர், பெரியீர், யாது உம்நாமம் ?
யாரைப்பார்க்க விருப்பமுமக்கு ?
ஊர் பேர் யாது, உறைபதி ஏது ?
கூறும் என்றான் " குறுநகை பூத்து. 10

" யான் ஓர் ஏழை, என்பதி அவந்தி,
ஞானக்கண்ணனைக் காணவிழைந்தேன்,
ஆனமெய்ந்நாமம் அறிநீ ஸுதாமா,
நான்இனி உட்புகலாமா ?" என்றான். 11

மாளிகைகாவலன் மனதுள் சிரித்தான் ;
“கோளரியவனைக்குவலயவேந்தர்
நாள்முழுதாயினும் காணப்பெறுர்கள் ;
ஆள் இவன் அவரைக்காணுதல் என்ருே ?” 12

என்றுநினைத்து இளநகை பூத்தான்,
“நன்று, நீ காவல, நாதனிடம் போய்
அன்று உன்தோழன், அவந்தி வாஸி,
வந்திருக்கிருன் என்று சொல்” என்ருன். 13

காவலன் மீண்டான் கணப்பொழுதினிலே
“வா” வென அழைத்தான் வளர் மனையுள்ளே ;
மூவுலகாளும் முகுந்தனின் முன்றில்
யாவுமிலாததோர் ஏழையடைந்தான். 14

கொடிவளர் கோபுர மாளிகை முன்றில்
அடியவன் வந்ததும் அதிசயம் கண்டான் :
இடையினில் பட்டு, இடுப்பினில் உடைவாள்,
நடையினில் மிடுக்கு, நயனத்தில் ஜொலிப்பு ; 15

அதரத்தில் சிரிப்பு, அகமதில் துடிப்பு,
வதனத்தில் பிரமிப்பு, வாத்ஸல்ய வடிப்பு ;
மதன மனேகர மஞ்சுள மூர்த்தி,
உதயமாகிவர உத்தமன் கண்டான். 16

பஞ்சணை மெத்தையில் பரன் துயில் நீங்கிக்
கஞ்சமலர்ப்பதம் நொந்து வருந்த,
அஞ்சனவண்ணன், அம்புயக்கண்ணன்
கொஞ்சி ஓடிவரக்குசேலன் கண்டான். 17

அபயமளிக்கும் அம்புயக்கையால்
சுபமணிவண்ணன் துறவியின் பாதம்
நவமுகில் என்னக் குனிந்து பிடித்தான் ;
'' தவமுயர் தமையா " எனத்தழுவினனே. 18

" அண்ணு " என்றுன் அஞ்சன வண்ணன்.
" கண்ணு " என்றுன் கந்தையணிந்தோன் ;
கண்ணீர் வெள்ளம் கரைபுரண்டோட
நண்பர்கள் அணைந்தனர் ; நாணினர்
உலகோர். 19

ஒருபிடியவலை உண்டனன் திருமால் ;
இருவரும் விசிற இருந்தனன் ஏழை ;
அரியுடை அரியாதனமிசை அந்நாள்
சரியாய் அமர்ந்தான் சமரஸயோகி. 20

ஆக்ரா அல்லது அன்பு நகர்

(17—3—59)

அல்லி மலர்த்திரு வைகும் அழகான தலைநகராம்,
தில்லிக்கும், மதுரைக்கும் துணையான மணியாரம். 1

ஷாஜஹான் மன்னர்பிரான் தனியன்பு
சொலிக்கின்ற
“ தாஜ்மஹால் ” மணிக்கோயில் தான் வளரும்
தங்க நகர். 2

அன்பென்னும் ஒரு சக்தி, அரசபிரான் திரு இதயம்,
இன்பமணி மாளிகையாய் எழுந்து நிற்கும் தனி
நகரம். 3

அன்புக்கும் உண்டு கொலோ அடைக்குந்தாழ்
எனும் உண்மை
“ மும்தாஜ் ” பெயர் அரசி முழங்குகின்ற மணி
நகரம்; 4

“ ஓருயிர்மேல் அன்புவைத்தால் உண்மையன்பு
அழியாது,
பாரும் ” எனப் பளிங்குக்கல் பறைசாற்றும் எழில்
நகரம். 5

மும்தாஜின் அன்புக்காய் முது டில்லிப்பேரரசர்
அன்புருவாம் மணிக்கோயில் அமைத்த திருநகர்
ஆக்ரா. 6

பார்க்குளே தலைசிறந்த பளிங்குக்கல்லறை விந்தை
ஆக்ராவில் நின்றொளிரும் அதிசயத்தை
என்சொல்ல ? 7

முழு நிலவைக் குழம்பாக்கி, முக்கனியின்
சாறெடுத்து,
அழகுமிழும் அமுதத்தால் அமைத்த
திருமாளிகையோ? 8

பாற்கடலைப் பிழிந்தெடுத்துப் பனிமலையைச்
சாந்தாக்கி,
ஆர்க்குமெட்டா முழு மதியால் ஆக்கியதோர்
கட்டடமோ? 9

அமுதத்தை வடித்தெடுத்து, அழகென்னும்
கடல்பிழிந்து.
இமையவர்கள் பொற்றச்சன் எடுத்ததொரு
மாளிகையோ? 10

கலைகள் எலாம் வடித்தெடுத்து, கற்கண்டுப்பொடி
தூவி,
அலைகடலின் ஆரமுதால் அமைத்ததொரு
காவியமோ? 11

எழில் எல்லாம் பிழிந்தெடுத்து, இனியபால்,
தேன் சேர்த்துத்
தொழில், திறமை, கலைக்கெல்லை தொட்டதொரு
கட்டடந்தான்? 12

பளிங்கல்ல, பாலமுதம்; பாறையல, பனிக்குழம்பு,
தெளிந்த திருநீர் யமுனைக்கரை திகழும்
“நிலாமன்றம்” 13

சந்திரனைப்பிழிந்தெடுத்து, சந்தனத்தை மேற்பூசி,
இந்திரனர் கற்பகத்தால் வரைந்ததொரு ஓவியமோ?
14

நந்தனத்தின் வனப்பையெலாம் நானிலத்தில்
கொண்டு வந்து,
அந்தரத்தோர் பிரமிப்படைய அமைத்ததொரு
" அரசி மகால் ". 15

கந்தருவ நன்னகரோ? கற்பனையின் பொன்னகரோ?
கந்தர்ப்பன் மணி நகரோ ? கந்தபிரான் எழில்
நகரோ ? 16

இந்திரனின் பொன்னுடோ? இமையவர்கள்
திருநாடோ ?
மந்திரத்தால், மாயையினுல், மனிதர்களே
செய்தனரோ ? 17

என்றென்று பிரமிப்பூட்டும், எல்லோர்க்கும்
வியப்பூட்டும்
நன்று, நன்று, " தாஜ்மகால் " நானிலத்தின்
அற்புதமே. 18

கன்னங்கரேல் என்ருெளிரும் காளிந்தி நதிநீரும்,
மின்வண்ண மாளிகையின் மோகனப்பால்
நிற ஒளியும், 19

தன்னிகர் ஒன்றில்லாத சந்திரனின் மணிநிலவில்
மின்னுகின்ற வனப்புக்கு என்ன தான்
உவமை சொல? 20

சொன்னபுரி, வன்னபுரி, சொர்க்கபுரி, பூமி வந்த
மின்னல் புரி, மதுர புரி, மாயமணிக்கனவு புரி, 21

பார்க்குள் அறக்குர்–ஆனின் பல உரைகள்
எழுதித்திகழ்
ஆக்ரா வென்றுலகு புகல் அதிசய
மாத்திரு புரியே. 22

ஈரானின் கலைவண்ணம், இந்நாட்டின்
கை வண்ணம்
நேராகக்கலந்தொளிரும் சீரான "தாஜ்மகலில்". 23

நான்கு புறம் "மினார்"கள், நடுவில் பெரு
மண்டபமும்,
தாங்குகின்ற சுவர்கள், மதிள், தளவரிசை
மின்வெட்டும். 24

நடக்கும்வழி நீர்நிலையம், நாற்புறமும் பூஞ்செடிகள்,
கிடக்கும் அந்தப்புனல் நடுவில் மாளிகையின்
நிழல் வடிவம். 25

மோகன மா நிழல்வடிவம் காண்போரைக்
கவர்ந்துவிடும்,
வாகான தலைவாசல் குர்-ஆனின் உரைதிகழும். 26

நடுமன்ற மணியுச்சி மணிக்கும்ப உரு மிளிரும்,
அடுக்கடுக்காய்ப்பல வடிவம், அவைமீது பிறை
திகழும். 27

உச்சி முடி உருவழகு உலகளழில் பழித்து நிற்கும்,
கச்சிதமாம் கல்லறையும் கனபூமியடி திகழும். 28

ஷாஜஹான் அரசருடன் அவர்
அன்புக்கிருப்பிடமாம்
"தாஜ்" அரசி கல்லறையில் தனியமைதி ஒளி
விளங்கும். 29

மலர், இலைகள், காய், கொடிகள், கனி, செடிகள்,
குயில், கிளிகள்,
பலப்பலவாய், வகை வகையாய் பார்ப்பவரைத்
திணறவைக்கும். 30

கம்பீரமானதொரு கட்டடமோ? அல்லதன்று
அன்புக்கு உயிர்கொடுத்து அமைத்த ஒரு
பேருருவோ? 31

இன்பத்தை வடித்தெடுத்து, இருங்கலையைக்
கல்லடுக்கி,
அன்பென்னும் ஆரமுதை அள்ளி அள்ளிக்
குழைத்து அதில், 32

அழகென்னும் ஜரிகைப்பொடி அற்புதமாய்
மேல்தூவி
"வழ வழெ"ன்னும் சலவைக்கல் கவிசெய்தார்
மனிதர்கொலோ? 33

பார்க்கமுடியா மனித இதயத்தின் அன்புருவை
ஆக்ராஎன் நகர் சென்றால் அதிசயமாய்க்
கண்டுணர்வோம். 34

அக்பர் பெருங்கோட்டையுடன், அவ்வரசர்
வெற்றிபெற்ற
திக்விசய அடையாள திரு "பதக்பூர் சிக்ரி"யுடன்
35

ஒப்பரியகட்டடங்கள் ஓங்கி வளர்ந்துயர்வு திகழ்
இப்பழைய நகர்ப்பெருமை செப்பலரிதாகும்
கண்டீர். 36

அதிசயக்கட்டடங்கள், அழகு வளர்கலைகாண்க,
முதிய நகர் ஆக்ராவில், மிளிர் கலையில்
ஆவலுளோர். 37

மத்ரா அல்லது வடமதுரை

(17—3—59)

உத்தமனும் இராமபிரான்
உடன் பிறந்த அருஞ்சோதி,
இத்தரைமேல் இளவலுடன்
இரட்டை என வந்துதித்த
முத்துருக் கொண்டமைந்தனைய
முழு வெள்ளிக்கொழு நிறத்துச்
சத்துருக்கினன் வெற்றி கொண்ட
சயம் மிகுந்த பொன் நகரம். 1

சிற்றன்னை சுடுசொற்கள்
செவி மடுக்க மாட்டாமல்,
பெற்றவளின் துயர் சகியான்,
பெருமாளின் உருக்காண,
உத்தானபாத மன்னன்
உத்தம நற்சிறுமதலை
அத்துருவன் தவம்புரிந்த
அருமந்த மணி நகரம். 2

வஞ்சனையே உருவெடுத்து
வாழ்வெல்லாம் கொடுஞ்செயலே
அஞ்சாமல் செய்துகந்த,
அரக்ககுணம் மிகப்படைத்த
கஞ்சன் எனுங்கொடுங்கோலன்
காலமெலாங்கொடுமைசெயத்
தஞ்சமெனத்திருமாலைச்
சரணடைந்த தனிநகரம். 3

அற்புதமாம் பாகவதம்
அக்காலத்ததன் எழிலைக்
கற்பனைக்குமெட்டாத
கனக மணி மாளிகைகள்,
பொற்கதவு, கோட்டை திகழ்
பொன்தோரணம் பொலிந்த
சிற்பம் எனச்சீர் பாடத்
திகழ்ந்து நின்ற திருநகரம். 4

யமுனை எனுங்காளிந்தி
எந்நாளும் வற்றாது
அமுதமணி நீர் பொழிய
அனைவர்க்கும் புகலாகிக்
குமுதமலர்க்கண்ணபிரான்
குவலயத்தையாள வந்த
நமது வடமதுரை எனும்
நாயகப்பொன்மணி நகரம். 5

"வில்விழாக்காண்பீர்" என்று
வீரர்களை வரவழைத்துப்
பொல்லாங்கு செயநினைத்தப்
புன்மையனும் கஞ்சன் செயல்
எல்லாமுந்தாமுணர்ந்து
இரு சிறுவரரங்கேறி
மல்லர்களை மண்கவ்வ
முடிசாய்த்த திருநகரம். 6

அண்ணன் எனும் பலதேவன்
அறை கொடுக்க, வெம்புலிபோல்
வண்ணமணிப் பொன்முடியை
வளைத்திழுத்துத்தரை சாய்த்து,
எண்ணமெலாம் வஞ்சனையே
வடிவான கஞ்சனுயிர்
கண்ணபிரான் நொடிப்பொழுதில்
குடித்தார்த்தமுது நகரம். 7

குவலயாபீடக்கரி
கூத்தாடிக்கொன்றொழித்து,
அவலமிகு மாந்தர்களை
அன்பினால் காத்தளித்து,
கவலை, துயர், பிணி, கண்ணீர்
கையினால்தான் துடைத்துத்
தமையனுடன் மணிவண்ணன்
தனியரசு செய்த நகர். 8

யாதவர்கள் வண் நகரம்,
யமுனை பொழி எழில் நகரம்,
மாதவனின் மணி நகரம்,
மலர் மாது வளர் நகரம்,
ஆதவனும் வெட்கமுற
அழகொளி சூழ் அணி நகரம்,
வாத ராயணர் துதித்த
வடமதுரைத்திரு நகரம். 9

இராச கோபாலமணி
அரசாண்ட அருநகரம்,
வாசமலர் மழைக்கூந்தல்
வைதர்ப்பி வாழ் நகரம்,
வாசவனும் அடிபணிய
வசுதேவர் திருமக்கள்
நேசமுடன் மானிடரை
நெடுநாட்கள் ஆள் நகரம். 10

மதுரை எனும் பெயர் மருவி
“மத்ரா” வாத்திகழ் நகரம்,
மதுரமிகு “பேடா”க்கள்
மானிடர்கள் சுவை நகரம் ;
மதுரம் எனும் சொல்லுக்கு
இலக்கணமாய்த்திகழ் நகரம்,
மதுரையம்பதி என்று
மக்கள் புகழ் வடமதுரை. 11

மது புரியாய், மதுவனமாய்,
“மத்ரா”வாய், மாட்சி மிகு
யது புரியாய், யமுனை திகழ்
எழில் பிருந்தாவன நகராய்,
சதுரமணியச்சுதனின்
தலை நகராய் இலக்கியத்தில்
இதுவரைக்கும் இலங்குவதும்
இந்தியர்கள் வடமதுரை. 12

டில்லியில் தமிழ்

(26—8—53)

மாமறை நீதியும் பாரத சோதியும்
மன்னும் தொன்னகர், மாறில்லா
நாமுடை பாபுவும், நன்மணி ஜவஹரும்
என்றும் வென்றிகொள் எழில்நகரம்,
சாமளயமுனையின் கோமள அலைகளின்
தீங்குரல் ஓங்கிடு தில்லிபுரி,
வீமனும், விஜயனும், வில்லிகள் இருவரும்
வெற்றிமுழக்கிய வேதபுரி, 1

இந்திரனும் சந்திரனும் கண்டுவியந்திடு
இந்திரப் பிரஸ்தத் திருநகரம்,
அந்த யுதிட்டிரன் சாந்தி விளக்கிய
அத்தின மாபுரி, ஆதிபுரி,
சொந்தத் தலைநகர், விந்தைத் திருநகர்
எங்கள்நந்நாட்டின் இதயநகர்
இந்தத்திருநகர் இன்புற, அன்புற
செந்தமிழ்ப் பைந்தொடி வந்தனளே. 2

செந்தமிழ்ப் பைந்தொடி வந்தனள், வந்தனள்,
சிலம்பும் மாலையும் சோதிவிட,
அந்தமிலாதொளிர் சங்க இலக்கியம்,
கம்பன் நம்பன் காட்சி தர,
பைந்தமிழ்த் தேவியின் பாதம் பணிந்திடு
பண்பு சிறந்தொளிர் பான்மை மிகு
சொந்தச் சகோதரச் சோதரிகாள் நும்
சிந்தையின் மேன்மை சிறந்திடவே. 3

தில்லித்திருபுரி, தேசத்தலை நகர்
தேமொழி நாமம் சிறந்திடவே,
வல்லமை மிக்க எம் வண்டமிழ் வாழ்ந்திட,
வானுற ஓங்கி வளர்ந்திடவே,
" இல்லை, இதைவிட இனியது வேறென "
எல்லா உலகமும் போற்றிடவே
எல்லைகடந்தொளிர் தொல் தமிழ் வாழ்ந்திட
என்றும் வென்று விளங்கிடவே. 4

சிம்லாச் சிறப்பு

(2—7—49)

சியாமளகிரி, சியாமளகிரி, சியாமளகிரி, வனப்பே,
யாவரும் புகழ் பாரத நில இயற்கையன்னை
அமைப்பே
மூவர், முனிவர், தேவர் வதியும் மூடிய
பனிப்பொருப்பே
பாவலர்முதல் நாவலர் துதி சியாமளகிரிச்
சிறப்பே! 1

இயற்கை தேவி சிரத்தில் பதிந்த இனிய
இரத்தினமௌலி
செயற்கைக் கலையைச் செயித்து நிற்கும்
தெய்வ திவ்யஜோதி
உயிர்க் குலத்துக் குண்மை புகட்டும் உயர்ந்த
ஆத்மபூதி
மயிற்குலம் என மேகம் ஆடும் மகிமை
வாய்ந்த பூமி! 2

அமைதி யெனும் அதிசயத்தை அகிலத்துக்
கெடுத்துரைக்கும்
இமய வரையின் இனியகவினை இதுவென
எடுத்தூட்டும்
சமய சாதி பேதமின்றி சமத்துவ நிலைகாட்டும்
நமது நளின சியாம கிரியின் நலமும் நவிலல்
ஆமோ! 3

மலையைக் குடைந்து பாதை செய்து
மக்கள் திறமை யாலே
சிலையின் சிகர நடுவில் நகரம்
செய்தமைத்து மேலே
விலையிலாத கலையின் செல்வம்
விரும்பிக் குவித்து மாலே
மலைவுறும்படி வாழும் இந்தியர்
மனிதப் புலிகள் தாமே. 4

காட்டின் நடுவில் கைத்திறமையைக்
காட்டி, யாரும் வியக்க,
மேட்டை இடித்துப்பள்ளம் தூர்த்து,
மலையில் நகரம் சமைத்து
நாட்டுப்புறத்து நலமும் நகர
நாகரிகமும் ஒன்றாய்க்
கூட்டிக் குழைத்து வாழும் பாரத
குமரர்க் கிணையுமுண்டோ? 5

பல விதத்தில் ஆடையணிந்த
பற்பல மதத்தினரும்
"கலகல" வெனச்சிரிக்கும் ஒலிமுன்
கடலும் கொஞ்சம் நாணும்;
நிலமகள் முகதிலகம் எனவே
நின்று சொலிக்கும், மேரு
மலையும் வெட்க, மகிமைசிறந்த
சியாம கிரியும் வாழ்க. 6

பஞ்ச நதத்துப் புண்ய பூமி
பாரத நிலம் நடுவில்
கொஞ்சும் சிமயகிரியின் புதல்வி
சியாமள கிரி வரையே!
மிஞ்சும் அழகும், மிளிர்ந்த குளிரும்
மேதினி எங்கும் ஓங்க
நெஞ்சம் உவக்க நடனம் ஆடும்
நமது சிம்லா வாழ்க. 7

ஹரித்துவாரம்

(10—3—59)

அரித்தோடும் கங்கை மகள் அற்புதமாய்க்
குதித்தோடும்
அரித்துவார வனப்பதனை ஆராலும்
சொலப்போமோ? 1

பச்சைமணிக் கண்ணுடிப் பளிங்கு பதித்ததுபோல்
சுத்தகங்கை ஓடிவரும் தூய அரித்துவாரம். 2

வெள்ளை வெளேர் என்ற வீரகங்கை நீர்வெள்ளம்
துள்ளிக்குதித்து வரும் சுந்தரமா நகரம். 3

மாயாபுரி என்று மக்கள் துதிபாடும்
மாயவன் கால்பிறந்த மந்தாகினி நகரம். 4

இமய மலைபிறந்து இசைபாடி ஓடிவரும்
தமக்கை எனுங்கங்கை தண்டை ஒலி நகரம். 5

மானசரோவரத்தில் மலைமகளாகப் பிறந்து,
ஆன அரன் சடைபாயும் அம்பிகையின்
பொன்பாதை. 6

தக்கன் வேள்வி தகர்த்து தனிக்கல்லில் உட்கார்ந்த
நக்கன் நடராசன் நாளும் வளர் கோயில். 7

அம்பிகை மந்தாகினியாள் ஆடிக்குதித்து வரும்
செம்பொன் மணிக்கண்ணுடி, தெய்வத்
திருப்பாதை. 8

சுவர்க்க சோபானம் எனச் சொற்கள் கவிபாடும்
நற்கலையின் பொற்சிகரம், நல்லோர் மனமகுடம். 9

ஆருக்குமெட்டாத அம்பொன் மலைமுடிபிறந்து,
போர்மகள் போல்கங்கை வரும்
பொற்றாமரைக்காடு. 10

கங்கோத்திரி பிறந்து, கண்ணன் மணிக்கால்
தவழ்ந்து,
எங்கோன் சடைபுரட்டும் இனியாள் தனிராஜ்யம். 11

அத்தனை அண்டங்களையும் அடித்துப்
புரட்டவென்றே
சுத்தகங்கை பாய்ந்து வரும் சூரமணிச்சூழல். 12

அரனார் வடிவழகும், அண்டங்கள் உண்டுமிழும்
அரியின் திருவழகும் அகலாது வாழ் நகரம். 13

யமுனையுடன் கைகோக்க எம்மன்னை ஓடிவரும்
அமுதமணி வெள்ளம் ஆறாய்ப்பொழி நகரம். 14

அன்னைஎனக்கன்னி என அலகநந்தை
தானும்எனச்
சன்னுமகள் பாய்ந்து வரும் தெய்வமணிப்பாதை. 15

சகரன் பெருமக்கள் சற்கதியைத் தானடையப்
பகீரதனார் கொண்டுவந்த பாவை வளர் நகரம். 16

அரியின் கழல் காட்டும், அரனார் பதங்காட்டும்,
பிரமன் புரி காட்டும் பேரின்பச்சீர் நகரம். 17

பாரதத்தின் சிர்மகுடம், பாரதத்தாய் பொற்றிலகம்,
பாரதரைத்தாங்கி வளர் பகீரதப்பெண்
பொன்நகரம். 18

மாணிக்கக்கண்ணுடி மாநிலத்தே இழைத்ததுபோல்
ஆணிப்பொற்கங்கை நதி ஆடிவரும் அருஞ்சோலே.
19

உள்ளம்குளிர, உணர்வு, உயிர் குளிர
வெள்ளத்தமுது விரைந்து வரும் நன்னகரம். 20

வண்டு இசைபாட, வாஞேர் துதிபாட,
மண்டலத்தோர் கண்மகிழ மங்கை வருநகரம். 21

கங்கைத் திருநகரம், கண்மணியாம் பொன்னகரம்,
திங்கள்முடிச்சிவஞர் திருவருள் பொழி நகரம். 22

இமய மலே எழில் எல்லாம் இங்கே
கொணர்ந்து கொட்டும்
நமையாளும் ஜான்னவித்தாய் நடனமிடுமரங்கு. 23

புத்துயிர் பொன்வளமும் பொங்கும் ப்யிர்வளமும்
நித்தநித்தம் பொழி கங்கை நிறை கற்பகச்சோலே.
24

அரித்துப்பிடுங்குகின்ற அரும்பிறவித்துயர்
தீர்க்கும்
அரித்துவாரக்கங்கை எழில் அயனும் துதிக்கறியார்.
25

தண்டை "கலகலென"த் தாமரைப்பூங்கழல் சொலிக்க,
விண்டலம் கிழித்தன்னை விரைந்து வருமழகை, 26

கண்டோர் மனங்களிக்கக் காசினியும் தான்செழிக்க,
அண்டர் மகள் ஓடிவரும் அற்புத நிலையழகை, 27

அரன் சடையும், அரி கழலும் அருங்கங்கை பொழி எழிலை,
அரித்துவாரப்பெயர் பெற்ற அமரபத மணிப்படியை, 28

பூத்துக்குலுங்கிவரு பொற்கொடியைப்போல் அன்னை,
ஆற்றரசி ஆடிவரும் ஆனந்தக்காட்சியினை, 29

ஆடிவரும் மயிலோ அருஞ்சோலைக்காவினிலே,
பாடிவருங்குயிலோ பாரதமாம் மாமரத்தில், 30

ஓடிவரும் மான்கன்றோ உத்தியானவனத்தினிலே,
நாடிவரும் அன்னமோ நற்றாமரைக்குளத்தில், 31

பச்சைக்கிளிக்குஞ்சோ பனிவரையின் சாரலிலே,
இச்சைதரு கற்பகமோ இமயமலையடியினிலே, 32

கண்குளிர, மனங்குளிர, கருதுவோர் உளங்குளிர,
மண்குளிர, விண்குளிர, மண்டலத்துயிர் குளிர, 33

ஊன் குளிர, உடல் குளிர, உணர்ச்சித்திரள் குளிர
கான்குளிர, தரைகுளிரக்கங்கை வரும் அழகை, 34

மா மறையின் இன்ஞெலியோ, மழலைமொழி ஒலியோ,
தேமதுரப்பெண்ணரசி மாமதுர வாய்மொழியோ,35

யாழிசையோ, குழலிசையோ, ஞானக்கடல் ஒலியோ,
ஏழிசையோ, இறை மொழியோ, இன்குதலைப்
பொன்ஒலியோ, 36

என்றெவரும் தான்பிரமிக்க இறைவி வரும் அழகை,
கன்றணையும் தாய்போலக்கங்கை வரும்எழிலை. 37

உருத்திரனுர் சடையினின்று உருகு செம்பொன்
போலவரும்
அரித்துவாரக்கங்கை எழில், அன்பர்களே,
போய்க்காண்மின். 38

இலக்கியத்து வருணனைகள் எள்ளளவும்
பொய்யல்ல,
விலக்கலாகா உண்மை விண்கங்கைப்பெரு
வனப்பு. 39

ஹ்ருஷீகேசம்

(10—3—59)

இலக்கியத்திற் சோதி விடும் இளைய பெருமாள்
என்னும்
இலக்குமணன் தவம்புரிந்த இனிய மணிச்
சோலை. 1

வரதனுடன் பிறந்து வாழ்வெல்லாம் விரதம் பூண்ட
பரதன் குடிகொண்ட பாங்கான நற்கோயில். 2

இருடீகம் என்றுரைக்கும் ஐம்புலனையாள்கின்ற
இருடீகேசப்பெருமாள் இருக்கும் திருக்காடு. 3

சுத்தமணிக் கங்கை துள்ளிப்பறந்தோடிச்
சத்தமிட்டாடி வரும் சம்பகமலர்க்காடு. 4

கண்படைத்த பேரெல்லாம் கண்டுமகிழவென்றே
விண்படைத்த சதுமுகனுர் கைபடைத்த
திருவண்ணம். 5

அண்ணலுடன் பிறந்தோர் அருந்தவம் புரிய வந்த
வண்ணமணிக்காடு, வண்ணதி பாய்மைதானம். 6

சாந்தியளிக்கும், சமரச ஞானம் அளிக்கும்,
ஓய்ந்த மனத்துக்கு உற்சாகம் தானளிக்கும். 7

நன்மையளிக்கும், நல்லமைதி தானளிக்கும்,
மென்மை, அருள், மேன்மை, வேண்டிய
எல்லாம்அளிக்கும். 8

சோலை நிழல் சூழ்ந்து, சுத்தகங்கை நீர் சூழ்ந்து,
மாலின்கழல் வணமும் கண்ணருளும்
தான்கமழ்ந்து, 9

இமயமலைச்சாரலிலே ஈசுவரனைத்தான் காட்டும் :
இமையோன் இருடீகேசம் இந்நாட்டின்
பொன் இதயம். 10

நல்லோர் மனமகுடம், நாட்டின் மணித்திலகம்,
சொல்லோவியத்துக்கும் எட்டாத பொற்சிற்பம், 11

அல்லல் எலாம் தீர்த்து ஆனந்தமேயருளும்
வல்லநீள் வைகுந்தம் செல்லும் திருவாசல். 12

ஈசன் இருப்பிடமாம் இருங்கைலை கிரிசெல்ல
வாசமலர்ப்படியாம், வாசவன் பணி நிலமாம் ; 13

இந்தியர்கள் இருநிதியாம், இமயமலைத்
தோரணமாம்
சொந்த இருடீகேசச்சொன்னபுரி தானம்மா. 14

இமயமலை எங்கள் மலை

(22—4—59)

கிழக்கு குடாக்கடல், மேற்கு மணிக்கடல்
இருமுனை இருகடல் தழுவிடவே,
அழகு மிளிர்ந்திட, ஆண்மை சிறந்திட
அண்டம் அளாவும் மலைக்கரசே. 1

தெற்கினில் கன்னி குமாரி எனும் மகள்
செய்மாதவ வலி எமைக்காக்க,
நிற்கின்றாய் நீண்டு வடக்கினில் நீயும்
நெடுஞ்சேனைக்கோர் அதிபதிபோல். 2

பாரதபூமி எனும் பெரும் மாநிலப்
பரப்பையளக்கப்பிரமன் செய்
சீர்மிகு ஓர் படிகக்கஜக்கோல்போல்
நிற்கும் அற்புதப்பனி வரையே. 3

இந்திய மாநிலம் என்றும் புரந்திட
இறைவன் அளித்ததோர் காவலனாய்
மந்தாகினி, உமை மக்களைப்பெற்று
நந்தாவிளக்காய் நிற்கின்றாய். 4

கைலை, கௌரீ – சங்கரம், காஞ்சன
சிருங்கம், கண்கவர் தவளகிரி,
தூமணித்துர்ஜய – லிங்கம், எவரெஸ்ட்
துலங்கும் துய்யஇமாலயமே. 5

கானக்களிமணியன்னமுறங்கும்
கங்கை, யமுனை தான்பிறக்கும்
மானசரோவர மரகதப்பொய்கை
மன்னிட மின்னும் மணி மலையே. 6

பதரி, கேதாரம், பண்பெறும் அலகை,
பார்புகழ் பனிக்குகைமணிக்கோயில்
அமர நாத முடியழகுடன் மிளிரும்
ஆனந்த மலையே, அருமலையே. 7

கவிகுலமணியாம் காளியின் தாசன்
குமார - சம்பவக்காவியத்தில்
புவிஎலாம்புகழ நின்புகழ் வரைந்தான்
புகலப்போமோ நின்பெருமை? 8

வெள்ளிச்சிலையோ? வியன் பாற்கடலோ?
வித்தகர் உத்தம காவியமோ?
அள்ளிச்சொரியும் அழகதனாலே
அகிலம்வென்ற எம் அணிவரையோ? 9

கலைமகள் உருவோ? கற்பனை வடிவோ?
கல்லில் எழுந்த ஓவியமோ?
மலைமகள்தாதை, மேனையின் கணவன்,
இமாலயம் எனும் எம் மலைதான்? 10

இந்தியக்கவிகள் யாவரும் புகழும்
இவ்வுல கத்தோர் துதிபாடும்,
இந்தியர் யாவரும் என்றும் மகிழும்
எங்கள் மலையே, இமயமலை. 11

இமயப்பெருமலை, எங்கள் திருமலை,
எம்மிறை வாழும் அணிமலையே,
சமயம், காலம், கணக்கு, வழக்கு
யாவும் கடந்தொளிர் பனிமலைதான். 12

உலகப்பெருமலை, உயர்ந்தோர்வாழ் மலை,
உமையும் சிவனும் திகழ் மலையே,
உலகப்பெருமகன் உளம் போல் ஓங்கி
உயர்ந்து, சிறந்து வளர்மலையே. 13

எங்கள்திருமலை, இமயப்பெருமலை,
இமையவர் போற்றும் இணையில்மலை,
தங்கமலைக்கோர் மருமகனாகிய
தாரணி புகழும் வெள்ளிமலை. 14

லக்னௌ அல்லது இலக்குமணபுரி

(17—3—59)

கலக்கியழி கவலை மலை
　　உலுக்குகின்ற காலத்தும்,
தலைக்குமேல் படைக்கலங்கள்
　　தாக்குகின்ற காலத்தும்,
விலக்கரும் கூர்வேல் மார்பில்
　　விரைந்து பாய் காலத்தும்,
அலக்கண் இன்றி அசையாது
　　அஞ்சாது நின்றிடுவான் ; 1

கடமையே பெரிதாகக்
　　காரியங்கள் செய்திடுவான்,
மடமை எனும் பஞ்சுக்கு மா நெருப்பாய்
　　மலர்ந்தொளிர்வான்,
படமுடியாத்துயரம் எலாம்
　　பட்டாலும் பண்பு நிலைத்
திடங்குறையா மனமுடையான்
　　திருமாலின் பின்பிறந்தான். 2

குலக்குமரன் இராமனுடன்
　　கொடுங்கானமடைந்த பிரான்,
அலைக்கழித்த அரக்கர்முடி
　　அடியோடு சாய்த்தபிரான்,
இலக்கியத்தில் எந்நாளும்
　　வாடாது இலகு பிரான்.
இலக்குமணன் எனும் இளவல்
　　இருந்தாண்ட மணி நகரம். 3

சத்துருக்கினக்குமரனுடன்
    தான் பிறந்த திருவாளன்,
மித்திரையின் அரும்புதல்வன்,
    மைதிலியார் புகழ் மைந்தன்,
சத்துருவை வேரறுக்கும்
    சலியாத மாவீரன்,
அத்தன் இரகுராமபிரான்
    ஆருயிராம் போர்வீரன். 4

குற்றங்கள், குறை கண்டால்
    கொதித்து எழும் குணசாலி,
நற்றவமே உருவான
    நல்லவர்கள் மணி மகுடம்,
உத்தமம் எனுந்தன்மை
    ஓருருவாய் வந்த பரன்,
கொற்றவனுய் அரசாண்ட
    கோமள மாபுரி லக்னௌள. 5

சொல்லாண்ட அனுமனுக்கும்,
    பரதனுக்கும், மைதிலிக்கும்,
அல்லாண்ட மேனி திகழ்
    அயோத்தி மணி இராமனுக்கும்,
பல்லாண்டு தவம் புரிந்த
    பதிவிரதையாள் ஊர்மிளைக்கும்
வில்லாண்ட தூய்மைமலை
    விளக்கொளியாய்த்திகழ் செம்மல். 6

இலக்குமணப்பேராளன்
இருந்தரசு செய்த நகர்,
" இலக்குமண புரி " என்று
இந்நாளும் பெயர் பெறுமே :
குலக்கொடியாய்க் கோமதியாள்
கொஞ்சி வரு திரு நகரம்,
மலர்க்குவியல் " சோலை நகர் "
மணி வண்ணத்திரு லக்னௌ. 7

உருது மொழி வளம் திகழும்,
உலகு புகழ் மாளிகைகள்,
கருதரிய பூஞ்சோலை,
கண்கவர் " இமாம் பாரா "
பொருதற்கு அரிதான
" பூல் புலையா "என்னும் விந்தை,
அறிஞர், இசைவாணர் பலர்
அகலாது வளர் நகரம். 8

அனுமந்தன் திருக்கோயில்,
அழகு வளர் " கேசரி பாக் "
மினுமினுக்கும் " ஹஜ்ரத் கஞ்ச் " ;
மேலான " மோதி நகர் "
நினைவெல்லாம் இனிக்கின்ற
நவாப்பு மணி மாளிகைகள்,
தனியரசு செய்தொளிரும்
தங்க நகர் திரு லக்னௌ. 9

அந்நியரை எதிர்த்தெழுந்த
அரும் புரட்சி அறிகுறிகள்
இன்னம் நின்று இலங்குகின்ற
இளையில் இலக்குவ புரியாம்.
அன்னை மணிக்கோமதியாள்
அன்போடு ஓடிவரும்
வன்னமலர்ப்புரி லக்னௌ
வளமை சொலத்திறமில்லை. 10

மோதிலால், சரோஜினியாள்
முகுந்தபுரி செல் நகரம்,
ஆதிபுரி, இலக்குவனூர்
அரசுசெய்த அணி நகரம் ;
சோதி மணி மாளிகைகள்
சூழ்ந்தொளிருந்தொன்னகரம்,
நீதி நெறி நிலைக்கவென்று
போர் புரிந்த பொன்னகரம். 11

இலக்குமண புரி எழிலை
எவராலும் சொலப்போமோ ?
அளப்பரிய அதன் வனப்பும்,
அழகுமிழும் சூழ் நிலையும்,
மனத்தை விட்டு அகலாத
மாளிகைகள் கலைச்சிறப்பும்
தலைசிறந்த தாய் முடியில்
தனி மணியே எனலாமே. 12

அயோத்தி

(10—3—59)

திருமால் எனுமொரு பெருமாள் வந்துதி
　　தெய்விக நகரே, திருநகரே,
அருமா வினையழி அருமகன் நால்வரும்
　　அழியாது வளர் பெருநகரே,
நிறைமாதவமணி, நின்மலப்பெண்மணி
　　மைதிலி வாழ்ந்த மகாநகரே,
அருமாதவன் கழல் அழியாஅன்பருள்
　　அயோத்திப்பெயர் பெறு அணி நகரே. 1

சரயூ நதிஜலம், "சல சல" எனப்பாய்
　　சதுமறை புகழும் முது நகரே,
கரையில் வளர்ந்தனர் கண்மணி நால்வரும்
　　காகுத்தர் இராமாயண மணிகள்,
பெரியவர், அறிஞர்-கள், கலைஞர்கள், கற்றவர்,
　　பேணித்துதித்திடும் பெருநகரே,
அறியாக்கைகேயி அன்று கொடுஞ்செயல்
　　செய்ய அலறி எழு சீர் நகரே. 2

இராம-இலக்குவ-பரத-சத்துருக்கினர்
　　தீர மணிகளைத்தரு நகரே,
நாமுடைக்கோசல நாடெனக்கம்பரும்
　　நற்றமிழ் பாட வளர் நகரே,
ஆம், உனை வேண்டுவன், அய்யன் பதமலர்
　　அழியா அன்பருள் அணிநகரே,
கோமள மைதிலி, கொஞ்சிடு ஊர்மிளை,
　　மாண்டவி, கீர்த்தி வளர் நகரே. 3

மந்திகள் மந்தைகள் வந்து குதித்திடு
மாதவன் சீதரன் வள நகரே,
அந்தியில் உன்னழில் கண்டு பிரமித்தனன்
அயோத்தியாளே, அறமகளே ;
தந்தை தசரதன், தனயர் இராகவர்,
விந்தைச்செயல் செய வளர் நகரே,
உன்றனை வேண்டுவன் உத்தமபக்தி
உளத்தினில் என்றும் வளர் நகரே. 4

வில்லிகள் நால்வரும் வீரச்செயல் செய
விங்கு தோளுடை வியன் நகரே,
சொல்லில் வளர்ந்தனை, நினைவில் நிறைந்தனை,
தோன்றினை நூல்களில் தூ நகரே,
கல்லனத்திண்ணியகற்புடை சானகி
கனக மாளிகை திகழ் நகரே,
நல்மனக்கோசலை, கைகேயி, சுமித்திரை
நீள் அரண்மனைகள் வளர் நகரே ; 5

அரசகுமாரிகள் நால்வரும் வாழ்ந்திட்ட
அம்பொன் மாளிகைகள் திகழ் நகரே,
அரச அன்னைமார் மூவரும் நால்வரை
அன்புடன் வளர்த்த அருநகரே ;
சரச கலியாண குணம் மிகு நால்வரும்
சாந்தி விளக்கிய திருநகரே,
முரச துந்துபி முன்றில் முழங்கு பொன்
முடியணி தயரதன் முதுநகரே ; 6

அரசவைபவம், உரிமை துறந்தொரு
அய்யன்கான்செல அழும் நகரே,
பரதவத்சலன் பதைபதைத்தழுதிட
பரந்து துடித்திட்ட திருநகரே;
விரதம் விளக்கிட வீரர்கள் நால்வரும்
மரவுரி, சடைதரி மணிநகரே,
சரதம் தந்தையின் சத்தியம் காத்திட்ட
சற்சனர்ஆண்ட பெருநகரே. 7

கம்பரும், துளசியும், கவி வால்மீகியும்
உன்புகழ் சொல்லவளர் நகரே,
அன்புளஇரகு குலத்தாண்டகை நால்வரும்
அறக்கொடி தூக்கிய அருநகரே,
இன்பப்பெருநகர், இணையில் திருநகர்,
இலக்கியம் வாழும் மணிநகரே,
உன்புகழ் சொல்லவும் ஓய்ந்தன சொற்களும்
உத்தமராமன் உயர் நகரே. 8

திரிவேணி மணி

"மது வன சாரிணி" மெட்டு

(6—3—59)

கற்றவர், உற்றவர், மற்றவர் யாவரும்
கண்டு வணங்கும் மா நிலமே,
பொற்ருெடி கங்கையும், பூமகள் யமுனையும்
பொங்கிப்பூரித்தெழு நன்னிலமே,
சொற்பதங்கடந்ததொர் சரசுவதித்திருமகள்
சொந்தங்கொண்டாடிடும் சுப நிலமே,
கற்பனைக்கரியதோர் அற்புதத்திரு நிலம்
காரணன் நாரணன் திரிவேணி. 1

முச்சடை மாதவன் முன்பு தவம்புரி
முந்நதி பாயும் மா நிலமே,
அச்சடை விட்டு அதிர்ந்தெழு கங்கையின்
அணி வெண்ணீர் அலை பாய் நிலமே,
கச்சபக்கும்பல்கள் கரையிற் குவிந்திடு
கருமணி யமுனை நீர் புரள் நிலமே,
செக்கச்சிவந்த நற் சரசுவதி நடு ஒளிர்
மும்மணியாரமே திரி வேணி. 2

பரதன் வணங்கிடு பண்டையப் பெருமை
கொள்
பாரத்துவாசர் குடில்நிலவும்,
வரதன் எனும் பரன் வந்து தவம் புரி
வளர் பிரயாகை எனுந்திரு நிலமே,

அரவெனும் வாசுகி அன்புடனே சுகி,
அருமறைப்பெரும் புகழ் அணி நிலமே,
குரவகம், சம்பகம் குழல் கமழ் மாதவன்
கோமளன், சாமளன் திரிவேணி. 3

முத்தொடு பவளமும் பச்சையும் சேர்த்தொளிர்
மோகன ஆரம் போல் திகழும்
"தத்திமி தத்திமி தாதிமி தை" என
தாள இசை கொடு நடமாடும்
உத்தமி கங்கையும் யமுனையும் வாணியும்
ஒன்று புரண்டெழு உயர் நிலமே,
அத்தன் நம் அச்சுதன் அஞ்சன மைக்குழல்
அணிமலர்க்குழல் எனுந்திரிவேணி. 4

அன்ன நடைமயில் அங்கனை ருக்மிணி
அன்று மணம்புரி மாதவனின்
பின்னல் எனப்பெயர் பெற்று விளங்கிடு
பேசரும்பழமறைத் திருநகரம்,
சொன்னமணித்திரு கங்கையும் கருங்குயில்
யமுனையும் செம்மணி சரசுவதியும்
மன்னவன் முக்குழற் பின்னல் எனத்திகழ்
மோகன நாயகி திரிவேணி. 5

விலகாப்பாவமும் விலகிடும் வகையருள்
வீரமணிச்சடை வியன் நகரம்,
நிலையா உலகினில் நிலை பெறு கதி தரும்
நின்மல ஜலமய விண்ணுடு,

"அலகாபாத்"என "ஆண்டவன் இடம்"என
அக்பர் பெயர் தருசுவர்க்க புரி,
ஜலமகள்மூவரும் களிநடமிடுபுரி,
சின்மயப்பெண்கொடி திரிவேணி. 6

"சல சல" நாதமும், "பள பள"மேனியும்,
சகல சராசரம் துதி நீரும்,
மலமழி பான்மையும், மயக்கறு தன்மையும்
மண்டிடும் ஒண்டொடி மூவர்களும்
"கல கல" நகையுடன் களி நடமிட வரும்
கடவுள் வதியும் பொன்னகரம்,
பல பலபேச்சென்ன, அரி, அரன், பிரமர்கள்
அரும்பதமளிக்கும் திரிவேணி. 7

அறியாப்பாலனும் அந்நதி மூழ்கிடின்
அச்சுதன் ஆக்கும் திரு வேணி,
முறையொடு முந்நான்காண்டுக்கொரு முறை
மூவுலகத்தினில் உறைவோரும்
"அரஹர, அரிஹரி"எனஉரை செய்ததன்
அருட்புனல் ஆடிட வரச்செய்யும்
திரி வேணி எனும் திருமால் கருங்குழல்
தெய்விக ராணி திரிவேணி. 8

பாரதம் துதிசெயும் மாரத நாயகன்,
தாரா நகருக்கோரரசன்,
ஆரமுதக்கடல் ஹர்ஷ வர்த்தனனும்
அவனுடன் ராஜ்யஸ்ரீ மணியும்

நீரினில் நின்று நெடுங்கொடை தந்திடும்
நேர்மையும் சீர்மையும் பெறு நகரம்,
பாரத நாயகி பனிவெண் கழுத்தினில்
பதக்க முகப்பாம் திரிவேணி. 9

அரிகரியானவர் அஞ்சனக்குழல் என
அன்னை மூவரும் மின்னுகிறார்,
கரியவள் ஒருவளும், பெரியவள் ஒருவளும்,
சிறியவள் ஒருவளும் துன்னுகிறார்,
முறைமுறை இவர்களும் தனித்தனி வந்துபின்
முந்நதி ஒன்றாய்க் கூடுகிறார் ;
திருமகள், மலைமகள், கலைமகள் என இவர்
திருமால் சடையைப் பின்னுகிறார். 10

உரை செயத்திறமில்லை, ஒருமுறை இதன்எழில்
சென்று காண்பவர் உணர்ந்திடுவார்,
மறைமகள் மூவரும் மாநதி வடிவினில்
வந்தனரோ எனத் திகைத்திடுவார்.
கரையில் கடல், மலை, குகை எழில் மின்னிடும்
கண்மணி பாரத நாட்டினிலே
திரைமகள் மூவரின் திருஎழில் காண்பவர்
திருமால் வடிவினைக் கண்டவரே. 11

அருமணி, திருமணி, அழகுப் பெருமணி,
அம்புய நீர்நிறை ஆற்று மணி,
குருமணி மூவரும் பரவிடு மும்மணி,
கோமள மாதவன் குழல் மணியே ;

நிறைமணி மாதவன் நீலச் சடைமணி
நின்மல நந்நதிப் பொன்மணியே,
உரையொடு கவிதையும் ஓய்ந்தன ஓய்ந்தன
உன் புகழ் பாடத் திரிவேணி. 12

காசியம்பதி கவின்

(10—3—59)

தூசி யழித்துயர் தூய்மையளித்திடு
    தூயவன் மாயவன் கழல்வந்தாள்,
ஆசி பொழிந்துடன் அன்பரைக்காப்பவள்,
    அம்பிகை, நம்பன் சடைவளரும்
நேச மிகுந்தவள், பாசமழித்தருள்
    நேரிழை, பாகீரதி மகிழும்
காசி மகாபுரி ஈசுவரன் வாழிடம்
    கமலக்கண்ணாள் மணி நகரம். 1

பூரணி, காரணி, பூமணி நாயகி
    புத்தமுதியும் புது நகரம்;
ஆரணன், நாரணன், அயனொடு வாசவன்,
    அடிமலர் பரவுந்திரு நகரம்;
கோரக்கலிப் பகைக்குற்றம் களைந்திடு
    கொற்றவன் பைரவன் ஆள் நகரம்,
சாரதை, இந்திரை சாமரை வீசிட
    சாமளை வாழுந்திரு நகரே. 2

விசுவேசுவரன் எனும் வீரமகாமணி
    வெற்றி முழக்கி வளர் நகரம்,
விசுவப்பிரபஞ்சம னைத்தும் படைத்தவள்,
    விசாலாட்சியாள் வாழ் நகரம்;

அசுவம், கரி, தேர் அனைத்தையும் விட்டோர்
அழகிய விடையூர்வான் நகரம்,
அசுபம் களைந்துடன் அமரரும் ஆக்கிடும்
ஆதி மகேசுவரன் அணி நகரம். 3

மணி கர்ணிகையுடன் மாது வாரணை
மங்கை அஸியுடன் திகழ் நகரம்,
அணியணியாய் வரு அடியவர் கூட்டத்
" தரோகரா "க்குரல் நிறை நகரம்,
துணிவுடன் வாய்மைக்காய் மனை பலிதரு
தூயவன் சுடலை சுடர் நகரம்,
வாரணாசி என மக்கள் வணங்கிடு
வண் திருகாசிப்பதி நகரே. 4

கங்கை மங்கையாள் பொங்கிப்பொங்கி எழு
கண்ணுதல், ஒண்ணுதல் கன நகரம்,
திங்கட்பிறை, நதி, கொன்றை கமழ் சடை
திகம்பரநாதன் திகழ் நகரம்.
எங்கள் மகேசுவரி தங்கமணிக்கொடி
பொங்கமுதம் பொழி பூநகரம்.
அங்கயற்கண்ணி அகன்ற நற்கண்ணியாய்
அருள் மழை பொழியுந்திருநகரம். 5

சங்கரர் முதலாம் சற்குரு யாவரும்
சங்கை இலாது துதிநகரம்,
சங்கரி, சங்கரன் கங்கை நதிக்கரை
சாசுவதமாக வளர் நகரம்.
பொங்கொளி—பூரணி புருடனுக்கமுதளி
புண்ணிய கண்ணிய மணிநகரம்,
எங்கள் "பனரஸ்" என்றிந்தியர் வணங்கிடு
ஏகாம்ரேசுவரன் காசி நகர். 6

டாடாநகர் இரும்புச்சோதி

(21—4—59)

கரும்பு வில்லைக்கைக்கொண்டு காசினி
எல்லாமாளும்
அரும்பு மணி மென்முறுவல் அம்பிகையின் உடல்
ஒளியோ ? 1

காட்டிலே கிளியோட்டிக்கந்தனை மயக்கி விட்ட
வேட்டுவச்சி வள்ளி கர வீரக்கவண் ஒளியோ ? 2

தக்கனைத்தலை வாங்கித்தாங்காத சினங்கொண்டு
நக்கன் நடனமிடும் நளினக்கழல் ஒளியோ ? 3

அக்கிரமம் செய்கின்ற அரக்கருயிர் குடித்து மகிழ்
சக்கரத்தாழ்வானின் சுழல்கின்ற தழல் உருவோ ? 4

ஆருக்கொடுமை செய்து அண்டங்களரசாண்ட
சூரபன்மன் உடல் பிளந்த சுப்பிரமணியன்
வேல் ஒளியோ ? 5

பனிமலையின் இளம்புதல்வி பாதச்சிலம்பொளியோ?
பனிமலர் வாழ் செந்திருவாள் பதுமகரச்சிவப்
பொளியோ ? 6

மண், விண் திகைத்து நிற்க மதுரை நகர் தீமூட்டும்
கண்ணகிப்பெருந்தெய்வக் கண் எழும் கனல்
ஒளியோ ? 7

அரி, பிரமர் அகந்தையினுல் அன்று
பெருஞ்சண்டையிட
இருவர்க்குமிடை எழுந்த ஈசுவரப்பெரு
நெருப்போ? 8

அன்னை கரச்சூலொளியோ? அண்டமளி நாயகனும்
மன்னவன் மாநெருப்பாய் மாறியே நின்ருனே? 9

ஐம்பெரும் பூதத்துள் ஒன்ருன அக்கினியும்
அம்புவியில் அண்டாவில் இரும்பாய்
உருகுவதோ? 10

கரும்பொன் எனப்பெயர் கொள் கண்கவரும்
ஓர் சோதி
இரும்பாய்உருகுவதும் எழில்மிகுந்த டாடாவில். 11

நாட்டார் நலம் பெருக, நம்தொழில் வளம் ஓங்கட்
டாடாவில் இரும்புருகும் தன்மையை என்
சொல்வேனே? 12

கல்லுருகப்புல்லுருகக் கனிந்த மனமுருக
அல்லும் பகலுருகும் அக்கினியாய்ப் பேரிரும்பு. 13

அந்தி வண்ணன் மேனி அப்படித்தான்
திகழும் என
அந்தி பகலுருகும் அருங்சிவப்புப்
பொன்னிரும்பு. 14

உருகுகின்ற பேரிரும்பு உருண்டாறாய் ஓடுவதும்,
அருகில் ஒரு பொறி அதனை அலக்காகத் தூக்குவதும், 15

மறுகணமே நெருப்புருளை அந்தரத்தில் சுழலுவதும்,
திரும்பியது கீழிறங்கித் தண்ணிரில் மூழ்குவதும், 16

அடுத்த கணம் ரயில் உருளை அழகாகத் தோன்றுவதும்
நடக்க முடியாவிந்தை நடப்பதுவும் அற்புதமே. 17

ஆறாக ஓடிவரும் அழல் இரும்பைத் துண்டாக்கி,
நேராக்கிச்சீராக்கி, நெருப்பின் தலை தாக்கி, 18

அண்டங்கள் அதிரவரும் அழகான இரயில் ஓடத்
தண்டவாளம் செய்யும் டாடாவும் பிரும்மாவோ? 19

கண் கூசும் ஒளி வீசக்கனவேகமாத்தழலின்
“ திண் ” என்ற தகடுகளைத் “ திடும் ” எனவே வீசுவதும், 20

தகட்டையறுத்தெடுத்துத் தகரமாய் மாற்றுவதும்,
அவற்றை அடுக்கடுக்காய் ஆங்காங்கே குவிப்பதுவும் 21

கண்கொள்ளாக்காட்சியடா, கற்பனையின் விந்தையடா,
மண்மீது ஜாம்ஷெட்பூர் மங்காத விந்தையடா. 22

இரும்பென்ற ஓர் பொருளை எந்நாடு செழித்
தோங்கக்
கரும்பாய் இனிக்க வைக்கும் கவின் டாடா
வாழியவே. 23

நாட்டார் வளம் பெருக நாளும் உழைக்கின்ற
டாடா நகர்வாசி, பாட்டாளி வாழியவே. 24

புவனேஸ்வர இலிங்கராஜன்

" மதுவனசாரிணி " மெட்டு.

(17—1—59)

அவனியில் அறிஞர்கள், கவிஞர்கள்,
கலைஞர்கள்
அனைவரும் பரவும் மகாநிதியே ;
தமனிய உருவுடை இமயமலைமகள்
தழுவிய செழுமை கொள் ஓர் பதியே ;
கமனிய வடிவுடை கலைகள் சிறந்தொளிர்
கண்நுதல், ஒண்நுதல் சேர் பதியே,
புவனேஸ்வரம் வளர் புவனேசுவர அருள்,
பூபதி மங்கை உமாபதியே. 1

கங்கை சிறந்தொளிர் திங்கள் முடிக்கணி
மங்கள நாயக, தூயவனே,
செங்கை விளங்கிடு அங்கதிர்ச்சூலமும்,
மான், மழு மின்னும் மகேசுவரனே,
பங்கய நாபனும், பதுமனும் பரவிடும்
பார்வதி தோள் படி பரமசிவா,
எங்கள் மகேசுவர, இணையில் புவீசுவர,
ஈசுவர அருள் கௌரிபதியே.

துங்க தரங்கம் துளும்பிடு கங்கையும்
தும்பையுமணிந்திடு ஈசுவரனே,
அங்கயற்கண்ணி எம் அம்பிகை தொழுதிடும்
ஆதிமகேச, பரேசுவரனே,

செங்கயல் துள்ளு கலிங்க ஜலம் வளர்
சின்மயரூப, சிவேசுவரனே,
லிங்கமகாபதி, லிங்க மகேசுவர,
எங்களுக்கருள் புவனேசுவரனே. 3

ஆம்ரவனம் வளர் ஆதி மகாநிதி,
ஏகாம்ரேச, நடேசுவரனே,
தாம்ர ஜடாதர, தாரணி நாயக,
தார்குழல் பார்வதி நாயகனே,
தாமிர பரணி நதிக்கரை வாழ் பர,
தங்கினை தங்கக்கலிங்கத்தில்;
நாமுடை ஈசுவர, நாத, மகேசுவர,
புவனேசுவர அருள் புண்ணியனே. 4

கலைகளும், கவிகளும், கயல்களும் தினம் வளர்
கலிங்க ஜலம் வளர் கண்நுதலே,
மலைமகள் நாயக, மால் பணி நாயக,
மலைப்பாம்பணியும் மகேசுவரனே,
அலைமகள், கலைமகள் இருவரும் பரவிடும்
சாம்ப, சதாசிவ, சங்கரனே,
கலையருள், நிலையருள், கதியருள் ஈசுவர,
புண்ணியமருள் புவனேசுவரனே. 5

முக்தேசுவரன் என முக்தியருள்பவ,
முத்துமாலையணி சக்திபதி,
சித்தேசுவரன் எனச் சித்தியருள்பவ,
சக்திதரன்தனைப் பெற்றவனே

மத்தேசுவரன் எனமன்றிடை நடம்புரி
    மாணிக்கசோதி மகேசுவரனே,
அத்தகிருஷ்ணேசுவர, அருள் சைலேசுவர,
    ஆம்ரவனேசுவர, ஆண்டவனே. 6

அய்ய விசுவேசுவர, ஆம்ரவனேசுவர,
    அண்டபிண்டேசுவர அருள் பரனே
துய்ய திரியம்பக, சுந்தரியம்பிகை
    இடம்வளர் தெய்விக சோதியனே :
செய்யகரத்தொரு சூலம் விளங்கிடு
    ஜகன்மோகன, ஜகதீசுவரனே,
பொய்யொழி, மெய்யளி, பூரண நிலையளி,
    புவனேசுவர, அவனிசுவரனே. 7

ஈசுவர, ஈசுவர, எங்கள் மகேசுவர,
    இலிங்கராஜன் எனும் சங்கரனே
தேசுடைப்பாம்பும், கபாலமும், கொன்றையும்
    சேர்த்தணி சின்மயதற்பரனே,
ராஜலிங்கம் எனத்தாரணியோர் புகழ்
    ரஞ்சித மஞ்சுளத்தாண்டவனே,
மாசறு புவனேசுவரபுரி வாழ்ந்திடு
    மாகேசுவர அருள் ஆண்டவனே. 8

கோனார்க் - சூரியதேவன் தேர்க்கோயில்

(17—1—59)

புதுமையுள் புதுமை கண்டேன்,
பூரண வெற்றி கண்டேன்,
சதுமுகன் படைப்புக்காங்கே
சவால் விடும் தன்மை கண்டேன்,
அதிசய அஜந்தாதன்னை
அடியோடு விழுங்கி நிற்கும்
பதுமையார் கதிரோன்கோயில்
பான்மையைக்கண்டவாறே. 1

ஏட்டிலே கண்டதுண்டு,
இலக்கியம் சொன்னதுண்டு,
பாட்டிலே படித்ததுண்டு,
பகலவன் தன்மையெல்லாம் ;
நாட்டிலே நல்ல கல்லில்
நான்முகன் நாணிநிற்கக்
காட்டினர் கதிரோன் தன்மை
கை வண்ணம் என்ன சொல்வேன் ? 2

கீழ்க்கடற்கரையின் பக்கம்
கிழமையார் பரத கண்டப்
பாக்கியக்கதிராய் மின்னும்
பண்புள கலிங்க நாட்டில்,
நோக்கிலே சுடர்கள் மின்னும்
நல் லிங்கராஜன் வாழும்
பார்க்குளே கலைகள்ஓங்கும்
பண் சுடர் ஒரிஸ்ஸா தன்னில் ; 3

பூரியாம் புண்ய சோதி
புரிவளர் நகரின் பக்கம்
நாரியோர் பாகம் கொண்ட
நம்பனும் நீரில் வாழும்
சிர்ப்புவனேஸ்வரத்தில்
சிந்தையைமயக்குகின்ற
சூரியன் கோயில் கண்டோர்
சொக்கியே நிற்பாரம்மா. 4

பன்னிரு பண்பார் ஜோடி
பறந்தோடும் சக்கரங்கள்
மன்னுமாரதத்தின்மீது
மாபெரும் அர்க்கதேவன்
மின்னியே விளங்கி நிற்க,
மிடுக்குடன் புரவி ஏழும்
அன்னவன் தேரை ஈர்க்கும்
அதிசயம் கல்லில் கண்டேன். 5

சக்கரத்தழகைச்சொல்ல
சதாயுசும் போதாதய்யா,
அர்க்கனின் அழகைச்சொல்ல
அமரர்க்கும் இயலாதய்யா,
பொக்கென ஓடுகின்ற
புரவியின் அழகைச்சொல்ல
விக்கியே நாணி நிற்பார்
விண், மண், பாதாள நாட்டார். 6

உருண்டுருண்டோடுகின்ற
உருளையின் அழகு காண
இரண்டு கண் என்றும் போதா ;
இந்திரன் கண்கள் வேண்டும் ;
திரண்டு கம்பீரமாகத்தேரினை
இழுத்து ஓடும்
புரண்டு பாய் புரவி காணப்
பூரண ஆயுள் வேண்டும். 7

அங்குலம் இடம் விடாமல்
அழகழகாய்க்குடைந்து,
சங்கிலி, மணிகள் கட்டி,
சகதண்டங்கள் புரட்டிக்
கிங்கிணி நாதம்கேட்கக்
கிடுகிடென்றோடுகின்ற
மங்கள உருளை கண்டு
மண்டலம் பிரமித்து நிற்கும். 8

அருமை கொள் அணி மாத்தேரில்
ஆஜானு பாகுவான
பெருமையார் அர்க்கதேவன்
பெருமிதத்துடனே நிற்கத்
திருவரை மணிகள் கொஞ்ச,
மேகலை கொஞ்சியாட,
அருமறைச்சோதி வீசும்
அழகை யான் என்னென்பேனே ? 9

சூரியன் இடை வனப்பு,
    சுந்தரப்படை வனப்பு,
சீரிய கழல் வனப்பு,
    செம்மாந்த நிலை வனப்பு
நேரிலே கண்ட பேர்கள்
    நின்றுமே சொக்குவார்கள்.
பாரிலே பாட்டில் யானும்
    பாடுவதெப்படித்தான் ? 10

சிறு சிறு மணிகள் எல்லாம்
    "சலசல" நாதம் செய்ய,
ஒரு மறு இல்லா ஆடை
    ஒழுங்காக மடித்துத் தொங்க,
குறையிலா முழந்தாள் கண்டோர்
    கண்ணிமைக்காது நோக்கத்
திருவரை மின்னும் தெய்வ
    சோதியை என் என்பேனே ? 11

அழகிய வதனசோதி
    அரும்பிடும் முல்லை மூரல்,
பழகிய மனிதன் போல
    மொழி பேசும் பவளச்செவ்வாய்
முழு மணிப்பதக்கம், ஆரம்
    முன்மார்பில் விளங்கியாடும்
அழகுக்கோர் அழகாம் அர்க்கன்
    அருமையைப் புகழப்போமோ ? 12

ஆடையின் அணிகள் கொஞ்சும்
அழகினைச்சொல்லுகேனோ ?
மேடை நீள் கோயில் தோன்றும்
மேன்மையைச்சொல்லுகேனோ?
கூடியே பறந்து பாயும்
குதிரையைச்சொல்லுகேனோ ?
ஜோடியாய் உருண்டு ஓடும்
சக்கரம் சொல்லுகேனோ ? 13

ஒன்றினைச்சொல்லப் போனால்
ஒன்று வந்தெதிரே நிற்கும்,
நன்று, நான் எதனைச்சொல்வேன் ?
நங்கைமார் குழுமியாடும்
மன்றமாம் நடன—மந்திர்
மாண்பினைச்சொல்லுகேனோ
இன்று யான் எதனைச்சொல்வேன் ?
எனக்கொன்றும் புரியவில்லை. 14

கோபுரத்துச்சி மீது
கொஞ்செழில் மங்கைமார்கள்,
வாய்பிளந்துலகம் நோக்க,
வாத்தியம் வாசிப்பார்கள் ;
வேய்ங்குழல், வீணை, தாளம்,
வியன்மிகு மிருதங்கம், மேளம்,
ஆயகஞ்சிராவோடாடல்
அணங்குகள் பயிலுவார்கள். 15

அவர் முகத்திருக்கும் பாவம்
அம்மம்ம, சொல்லப்போமோ ?
சுவரிலே பதுமை இல்லை ;
சுந்தரிமார்கள் எல்லாம்
எதிரிலே வந்து பேசி,
எழில் முகம், நகையும் காட்டி
உயிருடன் தோன்றும் காட்சிக்
குவமை வேறெதுவுமில்லை. 16

நான்முகன் படைப்பில் இங்கே
நல்லதுதீயதுண்டு,
ஆன அப்பாவமெல்லாம்
அப்படியே ஒவ்வொன்ருய்
வானகத்தோர் தொடங்கி
வையகத்தோர் ஈருக
கோனுர்க்கில் காட்டி விட்டார்
குவலய வாழ்வு எல்லாம். 17

அரையடிகல்தொடங்கி
அணு அணு வாய்க்குடைந்து,
மறைவொன்றும் இல்லாதாங்கே
மனிதர் செய்செய்கை எல்லாம்
குறைவறக்காட்டி விட்டார்
குவலயம் திகைத்து நிற்க :
திரைப்படம் போல ஆங்கே
சிலைப்படம் காட்டிவிட்டார். 18

நடன மா மந்திரத்தில்
நங்கைமார் ஆடுந்தோற்றம்,
நடன மா ராஜராஜன்
நாற்றலை கொண்ட தோற்றம்,
வடிவுடை மங்கைமார்கள்
வண்ணங்கள் செய்யும் தோற்றம்,
முடிவிலாக்கலைகள் எல்லாம்
முடிவுறக்காட்டி விட்டார். 19

கண்ணுடி பார்க்கும் பாவை,
களிப்பினில் திளைக்கும் பாவை,
அண்ணுந்து நோக்கும்பாவை,
அரு நடம் புரியும் பாவை,
விண்ணிலே பறக்கும்பாவை,
வியன் தாளம் கொட்டும் பாவை,
எண்ணிலே அடங்க மாட்டா
இவருடை தோற்றமெல்லாம். 20

வாயிலைக்காக்கும் சிங்கம்,
வண்ணப்போர் யானை, யாளி,
கோயிலின் குதிரை யாவும்
காணவே திகைப்புண்டாகும்.
தூய வண் சிலைகள் எல்லாம்
தேன்மொழி பேசும் அம்மா,
ஆய கோனர்க்கைக்காண
ஆயிரங்கண்கள் வேண்டும். 21

எப்படிச்செதுக்கினாரோ,
எத்தனையாண்டுகாலம்,
இப்படிச்சமைத்தார் கொல்லோ ?
எத்தனை கலைஞர், சிற்பி
எப்படி வேலைசெய்து
எப்படி முடித்தார் கொல்லோ?
செப்படி வித்தை தானோ ?
தெய்வம் செய் ஜாலம் தானோ ? 22

மனிதர்கள் செய்யவில்லை,
மாயையோ, கனவோ, அன்றித்
தனியொரு தெய்வத்தச்சன்
தான் செய்த கோயில் தானோ?
இனியென்ன சொல்வேன், யாரும்
இப்புவிப்பிறப்பெடுத்தால்
நனி சென்று காண வேண்டும்
நம்பன் கோணார்க்கன் கோயில். 23

"சூரியன் மூலை" என்று
சுந்தரப்பெயரும் வைத்தார்,
வாரியே கலைச்செல்வத்தை
வழங்கியே முழங்கி நின்றார்,
கோரிய வரங்கள் நல்கும்
கோணார்க்கன் கோயில்என்று
விரியங்காட்டி நின்றார்
வெற்றியே பெற்று விட்டார். 24

கலிங்கத்தின் கலைச்செல்வத்தைக்
கண்ணாரக்காண வேண்டும் ;
சலங்கைகள் கொஞ்சும் தெய்வச்
சக்கரத்தேரைக்கண்டு,
துலங்கிடும் கலையின் எல்லை
தொகுத்ததோரழகு கண்டு,
வலம் வந்து வணங்க வேண்டும்
வண் கலைவாணர் வண்ணம். 25

ஓரிஸ்ஸாவின் கலைகள் எல்லாம்
உயர் கோனார்க் வளரக்கண்டேன்,
பெரிசான பாவம் யாவும்
பாறையில் நிறையக்கண்டேன்,
அரிதாகும் அர்க்கன் கோயில்
அனைவரும் சென்று காண்மின்,
தெரியாத கலையின் மேன்மை
கண்முன்னே தெரியக்காண்மின். 26

ஆனாத செல்வத்தழகு, கலைப்பாவமெலாம்
கோனார்க்கில் கண்டால் குளிர்வோம்
உணர்வு, உயிர். 27

பூரி ஜகந்நாதன்

(16—1—59)

ஆருயிர் ஆன்ருேர் போற்றும்
அருமணிப்பரத கண்டச்
சூரியச்சோதி மின்னும்
சுந்தரக்கலிங்க நாட்டில்
நேரிணை இல்லாச்சோதி
நின்மல நெடுமால் ஆதிப்
பூரியைக்காணவென்றே
புண்ணியம் செய்தவாறே. 1

பன்னிரண்டாண்டுமாச்சு,
பரமனின் பூரி காண
உன்னியே உலக வாழ்வில்
உடல், உளம், உயிரும் நொந்து
கன்னியே வாடி வாடிக்
கவலையும் துயரும் கொண்டு
தன்னையே இகழ்ந்த போது
தயை செய்தான் பூரி நாதன். 2

புவனேசுவரன் அழைத்த போது
பூரியான் முன்பு வந்தான்,
அவனியாள் காதற்கேள்வன்
அன்பினுல் ஈர்த்துக்கொண்டான்.
சிவன் எனை அழைத்தபோது
சிரீதரன் முன்பு வந்தான்.
இவர் இருவருமே சேர்ந்து
எங்கெங்கும் காட்சி தந்தார். 3

ஆனைக்கா அரனைக்கண்டால்
      அரங்கனை உடனே காண்பேன்,
தேனூர்க்கும் கொன்றைசூடி,
      தென்னவன் மதுரை நாதன்
மீனாட்சி நாதன் கண்டால்
      மிளிர் சோலை - அழகன் காண்பேன்
கோன் நடராசன் கண்டால்
      கோவிந்தராசன் காண்பேன். 4

சங்கர நயினார் கண்டால்
      சதுரனும் பதும நாபன்,
அங்கு ஏகாம்ர நாதன்
      அவனுடன் வரத ராசன்,
மங்களக்குடந்தை வாழும்
      மாதேவன், சக்ர பாணி
இங்கிவர் போட்டி போட்டு
      இருவரும் காட்சி தந்தார். 5

அதற்கெலாம் சிகரம் போல
      அருமறைக்கலிங்க லிங்கம்
நுதற்கண் மா சோதி மின்னும்
      நின்மலன் காணச்சென்றால்
அதற்கு முன் பூரி நாதன்
      அவனிரு கரங்கள் நீட்டி
முதற்கண்ணே அழைத்துக்கொண்டான்,
      முகுந்தனின் பான்மை என்னே? 6

கீழ்க்கடற்கரையின் ஓரம்
    கிழமையார் கலிங்க நாட்டில்
வாழ்க்கையை மலர்த்துகின்ற
    வசு தேவர் பெற்ற மக்கள்
பூக்கரம் தூக்கி நீட்டிப்
    புன்மையை விரட்டுகின்ற
பாக்கியக்காட்சி காண
    பாவை யான் நோற்றவாறே? 7

இடப்புறம் இருண்ட சோதி
    இளையவன் கண்ணன் நிற்க,
மடக்கொடி, விஜயன் தேவி
    மங்கையும் இடையில் நிற்க,
அடக்கலா அருளும், தேசும்,
    ஆண்மையும் வீசுகின்ற
வடப்பனிவரை போல் மின்னும்
    பலன் வலப்புறமே நிற்க ; 8

மூவரும் கைகள் நீட்டி,
    முறுவலும் முகத்திற் கூட்டி,
யாவரும் துதிக்க நிற்கும்
    இனியதோர் காட்சி கண்டு
சாவதும்,பிறப்பும், மூப்பும்,
    சஞ்சலக்கொடி படர்ந்த
மாயையாம் உலகக்காடு
    மனத்தை விட்டொழிந்ததம்மா. 9

நீருண்ட மேகம் போன்ற
நீலமா சோதி ஒன்றும்,
காருண்ட கூந்தல் மின்னும்
கனகமா சோதி ஒன்றும்,
பாருண்ட பரமன் பாயல்
பனிமலைச் சோதி ஒன்றும்,
நேரிலே நிற்கக்கண்டு
நினைப்பெலாம் மறந்து விட்டேன். 10

கோரிய வரங்கள் நல்கும்,
கொடுமனப் பேயையோட்டும்,
சீரிய பதவி காட்டும்
சிரீதரன் வாழுகின்ற
பூரியைக் கண்டாற்போதும்,
புண்ணியம் வேறு வேண்டாம்,
வேறு வைகுந்தமில்லை,
பூரியே பூ வைகுந்தம். 11

அடியவர் கோடிக்கோடி
அவனடி தேடி வந்து
படி மிசைத்தலைகள் தோயப்
பஜனைகள் செய்யக்கண்டால்
விடிவிலா உலக வாழ்வின்
வேதனை யாவும் நீங்கிக்
கடி கமழ் துளபமாலைக்
கண்ணனையடைதல் திண்ணம். 12

நீலக்கடல்மணி

(23—7—52)

நீலக்கடல்மேல் ஆல இலை
ஆலிலைமேலோர் நீலமணி.
கோலக்குழவி குளிர்வடிவம்
ஜாலக்கடலோ ஜலக்கடலுள். 1

தாமரைக்கண்கள், தளிர் உடலம்,
சாமளவண்ணம், ஜலஜ முகம்,
கோமள குழற்சுருள், குமிழ் நாசி,
காமனைமயக்கும் கட்டழகு : 2

குமுதப்பூங்கனி வாயதரம்,
அமுதம் பொழி எழில் அதிமதுரம் ;
சமுத்திர நடுவில் கருணைமுகில்,
அமைத்தது யாரோ அற்புதமே ! 3

வலப்பதமலரைக் கரமலரால்
ஜலஜமுகக் கனிவாயதனில்
நிலைபெறச்செய்து கட்டைவிரல்
சுவைத்திடும் சுந்தரமணியாரோ ? 4

வானம் நீலம், கடல் நீலம்,
தானும் நீலம், விழி நீலம்,
பானம் பண்ணும் விரல் நீலம்,
ஆன இந்நீலக்கடல் யாரோ ? 5

ஊழிக்கால உயர்கடலுள்
ஆழிக்கையன் ஆலிலை மேல்
தோழர், துணைவர் இல்லாமல்
வாழ்வது மென்னடி என் தோழி ! 6

அன்னையுமில்லை, அப்பனிலை,
பன்னகப்பாயல் தானுமிலை,
முன்னையுமில்லை, பின்னையிலை ;
தன்னில் சுகிப்பவன் இவன் யாரோ ? 7

அன்னவன் உன்னை யாட்கொண்ட
பன்னகசயனப்பெருமாள் தான் ;
கன்னல் மதுமொழிக்கண்ணபிரான்
சின்னக்குழந்தை வடிவானன். 8

ஆலிலை மேல்துயில் அக்குமரன்
பாலையுளம் வளர் பரமன் காண்
நீலக்கடல்மணி நெடுமால் தான்
பாலப்பருவத் தெய்வம் காண் !! 9

பாரதநாடு

(18—3—59)

பரத கண்டம் எனப்பார்மிசை நிலவும்,
பக்தியும் முக்தியும் பண்பொடு பொழியும்,
பரத நடனம், கலை, இயல் இசை தவழும்
பாரத நாட்டுக்கீடெது வேறே? 1

அத்தனை சமயமும் ஒத்து விளங்கும்,
ஆண்மையும், நேர்மையும், சீர்மையும்
துலங்கும்;
புத்தரும், காந்தியும், ஜவஹரும் பிறந்த
புண்ணிய நாட்டுக்கிணை எது வேறே? 2

திராவிட நாடெனும் செந்தமிழகமும்,
ஆந்திரம், கருநாடகம், கேரளமும்,
காவிரி, பொருநை, வைகையும் தவழும்
கன்னிய நாட்டுக்கிணை எது வேறே? 3

கங்கையும், யமுனையும், நர்மதை மகளும்,
கண்டகி, கோசி, கோதாவிரியும்,
துங்க பத்திரையுடன் கிருஷ்ணையும் பாயும்
தாமணி நாட்டுக்கிணை எது வேறே? 4

தப்தி, மகாநதி, சோணை, பவானி,
சரசுவதி, அமராவதி, புகழ் பீமை,
முத்துருள் மணி முத்தாறுடன், பெண்ணை,
மூண்டெழும் நாட்டுக்கிணை எது
வேறே? 5

பிரும்ம புத்திரை, வளர் பாக்ரா—நங்கல்.
ஹிராகுத்—அணை, மேட்டூர், கல்லணை,
கண்ணம்பாடி, பவானி சாகர்
கலந்தெழும் நாட்டுக்கிணை எது வேறே? 6

மானசரோவரம், அலக நந்தினி,
கௌரி சங்கரம், பதரி, கேதாரம்,
மோன மகாநிதி காஞ்சன சிருங்கம்
மிளிர்ந்துயர் நாட்டுக்கீடெது வேறே? 7

இமயம், விந்தியம், வேங்கடம், பொதிகை,
மேற்கு, கிழக்கு மலைத்தொடர்ச்சங்கிலி;
அமைவுள நீல கிரியொடு, ஆபு,
அணியுயர் நாட்டுக்கிணைஎது வேறே? 8

மூன்று புறத்திலும் முக்கடல் ஒலிக்க,
மூலையில் தெற்கே குமரியும் காக்க,
ஆன்ற வடக்கே இமயம் சொலிக்க,
அழகுமிழ் நாட்டுக்கிணை எது வேறே? 9

ஆரியம், திராவிடம் அன்னை எனக்கொளும்
ஆயிரம், ஆயிரம் மொழிகள் துலங்கும்,
ஆயினும் ஆருயிர் ஒன்றென மின்னும்
அருமணி நாட்டுக்கிணை எது வேறே? 10

ஆதியும், அந்தமும் இல்லாச்சோதி
அந்தப்பரம் பொருள் அருள் போல்
விளங்கும்
நீதி நெறி முறை வழியே நிற்கும்
நின்மல நாட்டுக்கிணை எது வேறே? 11

கடலும், மலையும், நதியும், குகையும்,
சிற்பமும், சிலையும், கோயிலும், குளமும்,
உடலும், உயிரும், உணர்வும் போல் ஒளிர்
உத்தம நாட்டுக்கீடெது வேறே? 12

வந்தவர், போனவர், வருபவர் யாரும்
சிந்தை நிறைந்து மகிழ்ந்துமே வாழ்த்தும்
இந்தியா என்று இவ்வுலகேத்தும்
எங்கள் நந்நாட்டுக்கிணை சொலப்
போமோ? 13

மோகன முரளி

(2—7—53)

மாதவன் மணியதர மதுநுகர் முரளி
சீதரன் செம்பவள இதழ் தவழ் முரளி
யாதவன் இசை பயிலும் ஆனந்த முரளி
கோதிலாக் குறுமுறுவல் நிலவுசுவை முரளி. 1

கண்ணன் மணி வாயோரம் பண்பயிலும் முரளி
தண்மதியமுகம் தவழ்ப்பண்ணரசி முரளி
எண்ணரிய இசை பொழியும் இனியமணி முரளி
பெண்ணே ஓர் விண்ணப்பம் பேர்பெரிய
முரளி. 2

உன்போல உத்தமனின் உறவருள் முரளி
அன்போடு, அருள், ஆற்றல் அளித்தருள் முரளி
நன்னயக்கவிபாட ஞானமருள் முரளி
பின்னமறப்பேதமறப்போதமருள் முரளி. 3

கடவுளை நீங்காத காட்சி அருள் முரளி
உடைமை உயர் பக்தி எனும் உறுதி தாமுரளி
மடமைதனை நீக்கி உயர்மோனமளி முரளி
கடவுள்கைப்பிடித்திடும் பேறு அருள் முரளி. 4

வேதாந்த ஞானமருள் வேய்ங்குழல் முரளி
நாதாந்த நிலைமையருள் ஞானமணி முரளி
போதாந்தப் பரம்பொருளைக் காட்டியருள் முரளி
ஏகாந்த இனியநிலை எமக்கருள் முரளி. 5

யோகநிலை காட்டியருள் மாபெரும் முரளி
தியாகநிலை தந்தருள்க வேக இசை முரளி
ஆகமநெறிச்செல்வ ஆட்சியருள் முரளி
மோகனனின் அன்பருள்க மோகன முரளி. 6

ஸ. ரி. க. ம. ப. த. நி என இசை பொழியும்
முரளி, முரளி, முக்தியருள்க நீ.

திருச்சிராப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி.

SRIMATHY HAKI VALAM

— A SKETCH —

1. Srimathy HAKI VALAM was born in the year 1922, at Tiruchirapalli.

2. Her father was the patriot late Shri N. Halasyam who was a Congress Leader and had taken part in the various fights of freedom under Mahatma Gandhi from 1922 onwards. He had sacrificed a dashing legal practice for the sake of the country and courted imprisonment every time Gandhiji launched his movements. Even after the congress came in power, he never accepted a post of power. He is also known as a very able speaker. He was also a scholar in Tamil and English.

3. With such a background, from her childhood, the patriotic blood flowed through the veins of Mrs. Valam and she had imbibed the essentials of a good learning. In her teens she had practically mastered many literary works in Tamil and Sanskrit which is a boon to her even to-day in delivering speeches of high order.

4. Even after her marriage, she continued to study privately and passed various examinations and earned the titles like B. A., Prabakar in Hindi and Visharad in Sanskrit.

5. Her proficiency is not limited only to her mother tongue Tamil. She had dived into the beauties of English, Hindi and Sanskrit literatures also with equal enthusiasm.

6. Her latent powers as an original poetess came into light in the 1946—47 days when the whole country was rent up with communal feuds and fanaticism. This was also the period when Indian Independence, was being ushered in. Some of the beautiful pieces of Tamil poetry produced then were published in 1950 in the shape of a book called "MOHANA MURUVAL" which has been aptly called as one describing the history of freedom fight under Mahatma Gandhi. Her prose work in Tamil called "VALLABAR VAZKAI"—dealing with the Iron Man of India was published in 1951. Her English work "THE VOW OF PANCHALI" — translation of Amara Kavi Bharati's Panchali Sapatham — was published in 1957, and has also been praised by eminent literary figures.

Her present publication is "Mohana Murali", a collection of Tamil poetry. She is also engaging herself in publishing 2 more of her works Viz.

" OUR LEADER " an English poetical work on Shri. JAWAHARLAL NEHRU, and " Bala Baghavat Geeta " in Tamil Verse.

7. Her ability to speak particularly in Tamil and Hindi is of a very high order and apart from places near her home place she had been invited to various cities like Delhi, Calcutta, Bombay and Tatanagar for delivering inspiring lectures and expounding the beauties of literature. She had given a few programmes through All India Radio, Tiruchirapalli.

8. From the year 1953 she has been the President of the Kalai Kazhagam at Poona and had done valuable service for literature. When at Poona she was closely taking part in the social activities of the South Indian Community there. She is the President of South Indian Cultural Association at Deolali. She is a member of the Tamil Writers' Association at Madras, Bhandarkar Oriental Research Institute at Poona and of the Indian P.E.N. at Bombay.

9. Her main interest is to identify herself with all fields of literature. Her thoughts reveal themselves in her writings, brimming with feelings of patriotism, beauties of nature and glories of Bakthi.

10. Her unpublished works consist of nearly 500 pieces in Tamil, 50 pieces in Sanskrit, 50 in Hindi

and about 50 pieces in English - dealing with various subjects. An indication of the longer ones is given below :—

Name.	*Remarks.*
(A) TAMIL	
(i) *Poetry*	
(*a*) Bala Baghavat Geeta	—
(*b*) Bala Neela Mani	Baghavata.
(*c*) Chenkamala Kannan Chevi Amutham	Translation of Leela Suka's Krishna Karnamrutham.
(*d*) Vinnappa Malai	Translation of - Tulsi's Vinaya Patrika.
(*e*) Satrugna Charitam	—
(*f*) Bharata Pratapam	—
(*g*) Empiran Aymbathu (எம்பிரான் ஐம்பது)	—
(*h*) Anbu Por Charadu (அன்புப் பொற்சரடு)	Narada's Bakti Sutram
(*i*) Tirumal Tiru Ayiram (திருமால் திரு ஆயிரம்)	Vishnu Sahasranamam.
(*j*) Vadivazhaki Tiru Ayiram (வடிவழகி திரு ஆயிரம்)	Lalitha Sahasranamam.
(*k*) Ara Vazhi (அறவழி)	Buddha's Dhammapada,
(*l*) Azhakin Alai (அழகின் அலை)	Sankara's Soundaryalahari.

Name.	*Remarks.*
(ii) *Prose*	
Baghavata Kani	Comparative study of Sukar, Surdas and Periyazwar.
(iii) *Drama*	
(*a*) Deiva Silambu (தெய்வச் சிலம்பு)	(From Ilango's Silappadikaram).
(*b*) Karunai Mukil (கருணை முகில்)	Life of Buddha.
(*c*) Mangani Manikkam (மாங்கனி மாணிக்கம்)	Life of Karaikal Ammaiyar.
(iv) *Critical work*	
Ramayana Ratnakaram	Comparative study of Valmiki, Kamba & Tulsi.
(B) HINDI (*Poetry*)	
Bakti Latika	Story of Andal
(C) SANSKRIT (*Poetry*)	
Pushpa Jyoti, Tarangita Ganga etc.	—
(D) ENGLISH (*Poetry*)	
" Our Leader "	Life and work of Shri. Jawaharlal Nehru

APPRECIATION ON THE AUTHORESS' WORK

MOHANA MURUVAL

1. "*My first glance has demonstrated to me your mastery, not only of the language, but also of true poetic rhythm*".

— *Dr. C. P. Ramaswami Aiyer.*

* * * *

2. "*The poems show great poetic talent, patriotic fervour, profound scholarship, and some of the verses, especially those that are describing the life of Nehruji are fit to be recommended as memory lessons for young boys and girls as they are sure to instil patriotism in their imagination*".

— *The Indian Express.*

* * * *

3. "*The poems gleam with lustre and impress the readers with the depth of thought contained in them*".

— *The Delhi Tamil Sangham.*

* * * *

மோகன முறுவல் — மதிப்புரைகள்

1. " காந்தியம் கமழுகின்ற இந்த கவிதைத் தொகுதி "

— ஆஸ்தான கவி, ஸ்ரீ. வே. இராமலிங்கம் பிள்ளை
— முன்னுரை.

*　　*　　*　　*

2. " ஒவ்வொரு பகுதியிலும் எடுத்துக்கொள்ளும் விடயத்துக் கேற்ப, யாப்பு வேறுபாடும், அந்தந்த ரசம் நன்கு புலப்படத்தக்க, சந்தமும் அமைந்திருப்பது போற்றத் தக்கது ".

— மதுரைத் தமிழ்ச் சங்கம்.

*　　*　　*　　*

3. " அழகான பாடல்கள் தமிழுக்குக் கிடைத்திருக் கின்றன ".

— ரசிகமணி, ஸ்ரீ. டி. கே. சிதம்பரநாத முதலியார்.

*　　*　　*　　*

4. " இக்கீதங்கள் யாவும் கவி வளமும், சொல் வளமும் கலந்து கவின் செய்கின்றன ".

— திராவிடக் கவிமணி, ஸ்ரீ. வே. முத்துசாமி ஐயர்.

*　　*　　*　　*

5. " ஆசிரியை ஸ்ரீமதி வாலாம்பாளின் கவித்திறம் பாராட்டத்தக்கதே ".

— ஆனந்த விகடன்.

*　　*　　*　　*

6. " இக்கவிமாது தமது இளமையிலேயே இத்தகைய சிறந்த பண்பாடுகளுடன் துலங்குவது தமிழ் நாட்டுக்கு ஒரு பெருமையே " இனிதான தமிழ் மொழியில், எளிதான நடையில், கனிவாகக் கவி பாடும் கவி மங்கை வாழ்க" என்போம் ".

— ஸ்ரீ. எம். சண்முக சுந்தரம்,
புத்தக விமரிசனம், 27—3—51 அகில இந்திய ரேடியோ, மதராஸ் நிலையம்.

* * * *

7. " நல்ல நூல், தூய நூல், பொது நூல், பலவகைப் பாடலில், பலதிறப்பட்ட விடயங்கள் தாங்கிய நூல், தமிழர் படித்து இன்புறலாம். அன்பர்கட்குப் பரிசாக வழங்கலாம். சகோதரியார் இத்தகைய நூல்கள் பல தமிழகத்துக்குத் தரவேண்டும் ".

— ஸ்ரீ. வி. ஜி. ஸ்ரீனிவாசன், மதுரை.

* * * *

PERMANENT ADDRESS

" SUKIRA "
76, North Andar Street,
Teppakulam Post,
TIRUCHI-2.

PRESENT ADDRESS

" JUBILEE BAUG "
62, Rest Camp Road,
Devlali,
BOMBAY STATE.

The Trichinopoly United Printers, Tiruchirapalli-2.